# கர்மம் என்றால் என்ன?

அதி வணக்கத்திற்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்.

# கர்மம் என்றால் என்ன?

நூலாசிரியர் :
அதி வணக்கத்திற்குரிய கிரிபத்கொடை
ஞானானந்த தேரர்.

மொழிபெயர்ப்பு :
செல்வி. ராதிகா சந்திரசேகரன்.

செவ்வை வாசிப்பு :
திரு. ச. ஸ்ரீகாந்த்
(துணை ஆசிரியர், லேக் ஹவுஸ் நிறுவனம்)

வெளியீடு : மஹாமேக வெளியீட்டாளர்கள்.
வடுவாவ,
யடிகல்ஓலுவ,
பொல்கஹவெல

முதலாம் பதிப்பு : 2018ம் வருடம் மாசி பூரணை

© 2017 All rights Reserved. Shraddha Media Network |www. tamilbuddhist.com
Tel: (+94) 71 232 88 46 | e-mail : info@tamilbuddhist.com

# உள்ளடக்கம்

01. கர்மம் ஓர் அறிமுகம் 05

02. சூள கம்ம விபங்க சூத்திரம் 19
(கர்மம் தொடர்பாக மொழிந்த சிறிய போதனை)

03. கம்ம சூத்திரம் 56
(கர்மம் தொடர்பாக மொழிந்த போதனை)

04. மல்லிகா சூத்திரம் 96
(மல்லிகா எனும் அரசிக்கு மொழிந்த போதனை)

05. அபாய சங்வத்தனிக சூத்திரம் 103
(நரகத்தில் பிறக்க காரணமாகும் விடயங்கள்
தொடர்பாக மொழிந்த போதனை)

06. பதவிளக்கவுரை 106

**அத்தாஹி அத்தனோ நாதோ**
**அத்தாஹி அத்தனோ கதி**
**தஸ்மா சஞ்ஞமயத்தானங்**
**அஸ்ஸங் பத்ரங்வ வானிஜோ**

தனக்கு, தானே புகலிடம். தன் வாழ்வு பயணத்திற்கு அடிப்படையாக இருப்பதுவும் தானே தான். எனவே திறமையான வியாபாரி தனது விலையுயர்ந்த குதிரையை பாதுகாப்பது போல் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

-தம்மபதம்-

# 01.
# கர்மம் ஓர் அறிமுகம்

**“சேதனாஹங் பிக்கவே கம்மங் வதாமி. சேதயித்வா கம்மங் கரோதி காயேன வாசாய மனசா”**

‘புண்ணியமிகு பிக்குகளே, நான் சிந்தனையையே கர்மம் என்பேன். சிந்தனையை அடிப்படையாகக்கொண்டே உடலினாலும் வார்த்தைகளினாலும் மனதினாலும் கர்மங்கள் செய்ய முடியும்’

(நிப்பேதிக சூத்திரம் அங்.நி. 6 வது பகுதி)

தேவர்கள் மற்றும் மனிதர்களைக் கொண்ட சகல உலகவாசிகளாலும் இன்னும் விடுவித்துக்கொள்ள முடியாத ஒரு மர்மமான விடுகதையே இந்த கர்மம். எனினும் எமது பரம குருவான பாக்கியமுள்ள புத்த பகவான் இந்த கர்மத்தின் இயல்பு, அது பலனளிக்கும் விதம், கர்மத்திலிருந்து விடுதலையடையும் முறை என்பவை தொடர்பாக உள்ளங்கை நெல்லிக்கனியைப் போன்று உய்த்துணர்ந்தார். மனித வரலாற்றின் பொற்காலத்தினை உருவாக்கிய எமது புத்த பகவான் கர்மம் தொடர்பாக வரைவிலக்கணப்படுத்தியுள்ள முறையிலேயே அவரது ஒப்பற்ற ஞானத்தினை எம்மால் விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

கர்மம் அல்லது சிந்தனை, தோற்றம் பெறுவது காரணங்களினாலேயே. காரண காரியம் இன்றி எதுவுமில்லை. சிந்தனைக்கு காரணமாக அமைவது ஸ்பரிசமாகும். ஸ்பரிசம்

என்றால் அறுவகைப்புலன்களுடன் புற விடயங்கள் மற்றும் விஞ்ஞானம் (நுண்ணுணர்வு) எனும் மூன்றும் சேர்வதாகும். உதாரணமாக நாம் கண் எனும் புலனை எடுத்துக்கொள்வோம். கண்ணால் கேட்கவோ நுகரவோ முடியாது. கண்ணினால் பார்க்க மட்டுமே முடியும். கண்ணும் உருவமும் எனும் இரு காரணிகள் ஒன்று சேர்வதால் அங்கு சக்கு விஞ்ஞானம் (விசேடமாக அறிந்துகொள்ளும் இயல்பு) கண்ணில் தோற்றம் பெறும். இம் மூன்றின் சேர்க்கையே ஸ்பரிசமாகும்.

கண் + உருவம் + விஞ்ஞானம் = கண்ணின் ஸ்பரிசம்
காது + சப்தம் + விஞ்ஞானம் = காதின் ஸ்பரிசம்
நாசி + மணம் + விஞ்ஞானம் = மூக்கின் ஸ்பரிசம்
நாவு + சுவை + விஞ்ஞானம் = நாவின் ஸ்பரிசம்
உடல் + உடலுணர்வு + விஞ்ஞானம் = உடலின் ஸ்பரிசம்
மனம் + எண்ணம் + விஞ்ஞானம் = மனதின் ஸ்பரிசம்

அந்த ஸ்பரிசத்தினால் ரூப சஞ்சேதனம் தோன்றும். அதாவது கண்ணினால் கண்ட உருவத்தினை அடிப்படையாகக்கொண்ட சிந்தனையின் தொழிற்பாடாகும். அப்போது மனம், வாக்கு, உடம்பு எனும் மூன்றினாலும் கர்மம் ஆற்றுதல் இடம்பெறும். அனைத்து கர்மங்களும் இடம்பெறுவதற்கான பின்னணி இதுவாகும்.

## இந்த விஞ்ஞானம் என்றால் என்ன?

புத்த பகவான் விஞ்ஞானம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். “**(விஜானாதீதி கோ பிக்கவே, தஸ்மா விஞ்ஞானந்தி வுச்சதி)** புண்ணியமிகு பிக்குகளே, வேறுபாட்டினை காணும், வேறுபாட்டினை இனங்காணும், வேறுபாட்டினை அறிந்துகொள்ளும் இயல்பே விஞ்ஞானம் எனப்படுகிறது”. விஞ்ஞானம் எனப்படுவது ஏதேனும் ஒரு

விடயத்தை விசேடமாக அறிந்து கொள்வதாகும். அதன் தொழிற்பாட்டிற்காக கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறு புலன்களுக்கும் வெளியுலகத்திலிருந்து இலக்குகள் கிடைக்க வேண்டும். அதாவது உருவங்கள், சப்தங்கள், மணம், சுவை, உடலுணர்வுகள், எண்ணங்கள் எனும் ஏதேனும் இலக்குகள் கிடைக்கின்றன. இந்த இலக்குகளோடு கண் காது, நாசி, நாவு, உடல், மனம் சேரும்போது அதனை நாம் அறிந்து கொள்கிறோம். இதனையே விஞ்ஞானம் என்கிறோம். விஞ்ஞானம் தோன்றாத சந்தர்ப்பங்களில் மனதின் செயற்பாடு இடம்பெறுவதில்லை.

உதாரணமாக கார்ப்புச்சுவை, கசப்பு, இனிப்பு, நிறங்கள் போன்ற பலவிதமானவற்றினை விஞ்ஞானத்தினாலேயே நாம் வேறுபடுத்தி உணருகிறோம். இது மிகவும் ஆழமான விடயமாகும். தொடர்ந்து புத்த பகவானது போதனைகளை கற்கும்போது நீங்கள் இது தொடர்பாக மேலும் கற்றுக்கொள்ள முடியும். இப்போதைக்கு நீங்கள் இந்த விஞ்ஞானம் ஆறு புலன்களில் (கண், காது, நாசி, நாவு, உடல், மனம்) தோன்றும் என்றும் விஞ்ஞானம் என்பது வேறு, மனம் என்பது வேறு என்பதனை உணர்ந்து கொண்டால் போதுமானதாகும்.

நாம் மீண்டும் கர்மம் தொடர்பாக எமது கவனத்தினை செலுத்துவோம். உலக உயிர்களாகிய நாம் கர்மத்தின் அடிமைகளாகவே வாழ்கின்றோம். சக்கரத்தின் திருகாணியைப்போன்று நாம் கர்மத்திலிருந்து விடுதலையடையாதபடி சிறைப்பட்டிருகின்றோம். இவ் அனைத்து உயிர்களின் சுக துக்கங்களை நிர்ணயிக்கும் பிரதான காரணி இந்த கர்மம் என்றால் அது மிகையில்லை.

“புண்ணியமிகு பிக்குகளே, இந்த உயிர்கள் கர்மத்தினை தனக்குரியதாக கொண்டுள்ளனர். கர்மத்தினை தமது

சொத்தாக கொண்டுள்ளனர். கர்மத்தினை தமது பிறப்பிடமாக கொண்டுள்ளனர். கர்மத்தினை தமது உறவினராக கொண்டுள்ளனர். ஒருவர் நன்மையான அல்லது தீமையான ஏதேனும் கர்மத்தினை செய்வாராயின் அவரது சொத்தாக அமைவது அந்த கர்மமேயாகும்”

(சங்சப்பனீ பரியாய சூத்திரம் - அங்.நி 10ம் பகுதி)

இவ்வாறாக உயிர்களை தாக்கம் செலுத்தும் இந்த கர்மம் அவரவர் கர்ம விளைவுகளின் படி சுகமனுபவிக்கக்கூடிய உலகங்களிலும், நரகலோகங்களிலும் பிறக்கச்செய்யும் முறை தொடர்பாக பாக்கியமுள்ள புத்த பகவான் பின்வருமாறு ஒரு சந்தர்ப்பத்தில் மொழிந்துள்ளார்.

“புண்ணியமிகு அரசரே, ஒரு நாற்சந்தியில் மேல் மாடியுடன் கூடியதொரு மாளிகை இருக்கிறது என நினைப்போம். அந்த மாளிகையின் மேல் மாடியில் இருந்து நல்ல கண்பார்வையுள்ள ஒருவர் கீழே பார்க்கிறார். அவர் மாளிகையினுள் வருவோரையும், மாளிகையில் இருந்து வெளியேருவோரையும் நன்கு காணுகிறார். அதுபோல் அந்த மாளிகையை சூழ அமைந்துள்ள வீதிகளில் நடந்துசெல்வோர்களை, பாதையோரங்களில் அமர்ந்திருப்போர்களை தெளிவாக காணுகிறார். அப்போது அவருக்கு பின்வருமாறு தோன்றும். ‘இவர்கள் இந்த மாளிகையினுள் நுழைகிறார்கள்; வெளியேறுகிறார்கள்; வேறு சிலர் பாதையோரத்தில் அமர்ந்திருக்கிறார்கள்; சிலர் பாதை வழியே நடந்து செல்கிறார்கள்’ என்று.

புண்ணியமிகு அரசரே, ஒருவர் இந்த சாசனத்தினுள் நுழைந்து துறவறம் மேற்கொண்டு தர்மத்தினை பின்பற்றுகிறார். தியானம் செய்கிறார். அதன் விளைவாக அவர் மனம் சமாதியடையும்போது, தூய்மையடையும்போது, பிரகாசிக்கும்போது, தடைகளுக்கான காரணங்கள் அற்றுப்போகும்போது, உபக்கிலேசங்கள்

அற்றுப்போகும்போது, மனம் மென்மையாகும்போது, உய்த்துணர்விற்கு ஏற்றாற்போன்று மனம் ஒழுங்மைந்த பின்பு, மாற்றமுறாமல் இருக்கும்போது, உயிர்களது பிறப்பு, இறப்பு என்பன அறிந்துகொள்ளுவதற்காக அவர் மனதினை செலுத்துவார்.

அப்போது அந்த பிக்கு சாதாரண மனித இயல்பினை மீறிச்சென்று தூய்மையான அகக்கண்ணினால் உயிர்களை காண்பார். மறையும் உயிர்களை காண்பார். பிறக்கும் உயிர்களை காண்பார். இழிவான, உயர்வான, அழகிய, அவலட்சணமான உயிர்களைக் காண்பார். அவை நரகத்திலும் சுவர்க்கத்திலும் மாறி மாறி பிறப்பதனை காண்பார். உயிர்கள் தாம் செய்துகொண்ட கர்மங்களின் அடிப்படையில் அதற்குரிய இடங்களில் பிறப்பதனை காண்பார். 'இந்த உயிர்கள், உடலினால், வார்த்தையினால் ஒழுக்கமற்று இருந்தார்கள். மனதினாலும் ஒழுக்கமற்று இருந்தார்கள். உயர்ந்த உத்தமர்களை தூற்றி வாழ்ந்துள்ளார்கள். துர்நம்பிக்கைகள் கொண்டு வாழ்ந்துள்ளார்கள். பிழையான கருத்துக்களை கொணடு வாழ்ந்துள்ளனர். எனவேதான் அவர்கள் மரணித்து துன்பங்களே நிறைந்த நரகத்தில் பிறந்துள்ளனர்.

ஆனால் இந்த உயிர்களோ, உடலினால்,வார்த்தையினால், மனதினால் ஒழுக்கத்துடன் வாழ்ந்துள்ளனர். உயர் எண்ணங்கள் கொண்ட உத்தமர்களை தூற்றாது வாழ்ந்துள்ளனர். சம்மா திட்டி* எனும் நற்பார்வை கொண்டு வாழ்ந்துள்ளனர். நல்ல கருத்துக்களையும் எண்ணங்களையும் கொண்டு வாழ்ந்துள்ளனர். எனவேதான் அவர்கள் இன்பங்கள் நிறைந்த சுவர்க்கத்தில் பிறந்துள்ளனர்' என்று அந்த பிக்கு, சாதாரண மனித இயல்பினை மீறிசென்ற தூய்மையான

1. பத விளக்கவுரையை பார்க்கவும்.

அகக்கண்ணினால் உயிர்களை காண்பார். மறையும் உயிர்களை காண்பார்; பிறக்கும் உயிர்களை காண்பார். இழிவான, உயர்வான, அழகிய, அவலட்சணமான உயிர்களை காண்பார். அவர்கள் நரகத்திலும் சுவர்க்கத்திலும் மாறி மாறி பிறப்பதனையும் காண்பார். உயிர்கள் தாம் செய்துகொண்ட கர்மங்களின் அடிப்படையில் அதற்குரிய இடங்களில் பிறப்பதனையும் காண்பார்”

(சாமஞ்ஞபல சூத்திரம் - தீக நிக்காயம்)

பகவான் மொழிந்த இப்பகுதியின் மூலம், சுவர்க்க நரகங்களில் பிறப்பதற்கும், அனுபவிக்கும் சுக துக்கங்களை நிர்ணயிப்பதற்கும் இந்த கர்மமே பாதிப்பு செலுத்துகிறது என்பதனை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். இந்த விடயங்களை சாதாரண ஒருவரால் அல்ல, நன்கு மனதினை விருத்தி செய்த ஒருவராலேயே காண முடியும். நான்காவது படிநிலை தியானம் வரை தம் மனதினை விருத்தி செய்து சுதூபபாத ஞானத்தினை தோற்றுவித்துக்கொள்வோருக்கு இதனைக் காண முடியும். பெரும்பாலானோர், இந்த கர்மத்திலிருந்து தமது இஷ்டப்படி தப்பித்துகொள்ள முடியும் என்றே நினைக்கின்றனர். **அனாவரண** ஞானமுள்ள (புத்த பகவானது ஞானத்திற்கு எதுவுமே மறைக்கப்படவில்லை. ஆவரணப்படுத்தி இல்லை. எல்லாம் தெளிவாக அறியும் ஞானம் கொண்டவர்) புத்த பகவான் கர்மம் தொடர்பாக மொழிந்துள்ள இந்த பகுதியை சற்று அவதானியுங்கள்.

“புண்ணியமிகு பிக்குகளே, சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு சேகரித்துக்கொண்ட கர்மத்தின் விளைவுகள் அனுபவிக்கப்படாமல் முடிவுறும் என்று நான் கூறமாட்டேன். அந்த கர்மங்களின் விளைவுகள் இவ் உலகிலேயே பலன் அளிக்கலாம். அடுத்த பிறவியில் பலன் அளிக்கலாம். அப்படியில்லாவிடில் மோட்சமடையும்

வரை பிறக்கும் எந்த பிறவிகளிலாவது பலன் அளிக்கலாம். எனவே, புண்ணியமிகு பிக்குகளே, சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு சேகரித்துக்கொண்ட கர்மத்தின் விளைவுகள் அனுபவிக்கப்படாமல் முடிவுறும் என்று நான் கூறமாட்டேன்”

“புண்ணியமிகு பிக்குகளே, தூற்றத்தகுந்த, பிழையான அகுசல (தீய) சிந்தனைகளுடன் கூடிய உடல் செயற்பாடுகள் மூன்று இருக்கின்றன. தூற்றத்தகுந்த, பிழையான அகுசல சிந்தனைகளுடன் கூடிய நான்கு வகையான பேச்சுக்கள் இருக்கின்றன. தூற்றத்தகுந்த, பிழையான அகுசல சிந்தனைகளுடன் கூடிய மானசீக செயற்பாடுகள் மூன்று இருக்கின்றன. இவை துக்கத்தினை தோற்றுவிக்கும், துர் விளைவுகளை தரும்”

(பட்டம சங்சேதனிக சூத்திரம் - அங் நி 6ம் பகுதி)

உயிர்களை கொல்லுதல், திருடுதல், தகாத காமத்தில் ஈடுபடுதல் எனும் இவை மூன்றும் உடலினால் செய்யக்கூடிய அகுசல கர்மங்களாகும். பொய் கூறல், கொடிய வார்த்தைகளை பேசுதல், புறங்கூறுதல் (கோள் பேசுதல்), அர்த்தமற்ற வெறுமையான வெட்டிப்பேச்சுக்களை பேசுதல் போன்றன பேச்சினால் செய்யக்கூடிய அகுசல கர்மங்களாகும். ஏனையோரின் உடைமைகளை தனதாக்கிக்கொள்ள ஆசைப்படுவது, கோபம் மற்றும் துர்பார்வைகள்* என்பன மனதினால் செய்யக்கூடிய அகுசல கர்மங்களாகும்.

இவை மாத்திரமல்லாது பகவான் மனம், வாக்கு, காயம் என்பனவற்றின் குசல (நன்மையான) செயற்பாட்டுகளை பின்வருமாறு விபரித்துள்ளார்.

*.பத விளக்கவுரையை பார்க்கவும்.

"புண்ணியமிகு பிக்குகளே, புண்ணியமாக அமையும் நன்மைகளை விளைவிக்கும், குசல சிந்தனைகளுடன் கூடிய உடல் செயற்பாடுகள் மூன்று இருக்கின்றன. நான்கு வகையான பேச்சுக்கள் இருக்கின்றன. மானசீக செயற்பாடுகள் மூன்று வகைகள் இருக்கின்றன. இவை சுகத்தினை தோற்றுவிக்கும், நல் விளைவுகளை தரும்"

அந்த குசல கர்மங்களாவன :
உயிர்களை கொல்லாமை, திருடாமை, தகாத காமத்தில் ஈடுபடாமை, என்பன உடலினாலான குசல கர்மங்களாகும். பொய், புறம் (கோள் பேசுதல்), வீண்பேச்சு, கொடிய பேச்சு என்பன பேசாமை வார்த்தையிலான குசல கர்மங்களாகும். ஏனையோரது உடமைகளை தன் உடைமையாகக் கொள்ள விரும்பாமை, கோபமின்றி இருத்தல், நற்பார்வையுடன்* இருத்தல் என்பன குசலங்களாகும்.

(பட்டம சங்சேதனிக சூத்திரம் - அங்.நி 6ம் பகுதி)

இந்த கர்மம், நிலத்தில் இட்ட விதையினை போன்றே எம் வாழ்வில் நிலைத்திருக்கிறது. இதனை புத்த பகவான் பின்வருமாறு மொழிந்தருளினார்.

"புண்ணியமிகு பிக்குகளே, **ஆன்மீக நற்பார்வை*** கொண்ட (சோதாபண்ண நிலையை அடைந்த) ஒருவருடைய, அந்த பார்வைக்கு அமைவான ஏதேனும் உடல் செயற்பாடுகள் இருப்பின், பேச்சிலான செயற்பாடுகள் இருப்பின், மானசீக செயற்பாடுகள் இருப்பின், அந்த பார்வைக்கு அமைவான ஏதேனும் எண்ணங்கள் இருப்பின், இலட்சியங்கள் இருப்பின், எதிர்பார்ப்புகள் இருப்பின், சங்ஸ்காரங்கள் இருப்பின் அவ் அனைத்தும் இஷ்டமான, பிரியமான, நன்மையை

*.பத விளக்கவுரையை பார்க்கவும்.

விளைவிக்கும், சுகத்தினை அளிப்பவையாகவே அமையும். அதற்கு காரணம் என்ன? புண்ணியமிகு பிக்குகளே, அவரது நற்பார்வை நன்மையானதாகும். பிக்குகளே, அது இவ்வாறானதாகும். நெல் விதையோ அல்லது ஒரு திராட்சை விதையையோ ஈரலிப்பான ஒரு நிலத்தில் விதைத்தோம் என நினைப்போம். நிலத்தில் விதைக்கப்பட்ட அந்த விதை நிலத்தின் உரத்தினையும், ஈரலிப்பினையும் நன்கு அகத்துறிஞ்சிக்கொண்டு வளருமாயின் அவை அனைத்தும் அந்த செடியின் பலன்களின் சுவைக்காகவும் இனிமைக்காகவும் செழிப்பிற்குமே காரணமாக அமையும். அதற்கு காரணம் என்ன? புண்ணியமிகு பிக்குகளே, அதற்கு காரணம் விதைத்த அந்த விதை சிறந்ததாக இருந்ததுவேயாகும்.

துர்பார்வை கொண்ட ஒருவர், அவ் எண்ணத்தில் இருந்துகொண்டு கர்மங்களாற்றும்போது அங்கே இருப்பது பாவமிகுந்த ஒரு விதையின் தொழிற்பாடாகும். பகவான் மொழிந்த இந்த பகுதியை அவதானியுங்கள்.

“புண்ணியமிகு பிக்குகளே, துர்பார்வை* கொண்ட நபருக்கு அந்த பார்வைக்கு அமைவான ஏதேனும் உடல் செயற்பாடுகள் இருப்பின், பேச்சிலான செயற்பாடுகள் இருப்பின், மானசீக செயற்பாடுகள் இருப்பின், அந்த பார்வைக்கு அமைவான ஏதேனும் எண்ணங்கள் இருப்பின், இலட்சியங்கள் இருப்பின், எதிர்பார்ப்புகள் இருப்பின், சங்ஸ்காரங்கள் இருப்பின் அவ் அனைத்தும் தீமையை விளைவிப்பவையாகும். தாம் விரும்பாத, இஷ்டமற்ற துர்விளைவுகளை தரும், அவை துக்கத்தினை அளிக்கும் இயல்பிலானதாக அமையும். புண்ணியமிகு பிக்குகளே, அது இவ்வாறானதாகும். கசப்பான பாகற்காய் விதையோ அல்லது வேம்பு விதையையோ

*.நற்பார்வைக்கு எதிரானது. மேலதிக விளக்கங்களுக்கு பத விளக்கவுரையை பார்க்கவும்.

ஈரலிப்பான ஒரு நிலத்தில் விதைத்தோம் என நினைப்போம். நிலத்தில் விதைத்த அந்த விதை நிலத்தின் உரத்தினையும், ஈரலிப்பினையும் நன்கு அகத்துறிஞ்சிக்கொண்டு வளருமாயின் அவை அனைத்தும் அந்த செடியின் விளைச்சலின் கசப்பிற்காகவும், சுவையின்மைக்காகவுமே காரணமாக அமையும். அதற்கு காரணம் என்ன? பிக்குகளே அந்த விதை கசப்புத்தன்மையானதுவே அதற்கு காரணமாகும்"

(அங்.நி 3ம் பகுதி)

இவ்வாறான இயல்புகளை கொண்ட கர்மம், நம்மை மீண்டும் மீண்டும் பிறக்கச்செய்யும்போது நாம் செய்யும் நல்ல செயல்களின் விளைவுகளின் தாக்கத்தினை அறிந்துகொள்வதற்குக் பகவானது இக்கூற்றினை அவதானியுங்கள்.

"புண்ணியமிகு பிக்குகளே, ஒருவர், சிரமணர், துறவிகள் என்போருக்கு தானமளிப்பார். உணவு, பான வகைகள், உடை, ஆசனங்கள், மலர், ஒளிவிளக்கு, உறையுள் என்பன தானமாக அளிப்பார். அவர் ஏதேனும் அளிப்பாராயின் அதனையே பெற விரும்புபவராக தானமளிப்பார். அவருக்கு இவ்வாறானதொரு விடயம் அறியக் கிடைக்கிறது. அதாவது 'சாதும்மஹாராஜிகம்' எனும் தேவலோகத்தின் தேவர்களுக்கு நீண்ட ஆயுள் இருக்கின்றது. அவர்கள் மிகவும் அழகானவர்கள். அவர்கள் மிகவும் சுகபோகத்துடன் வாழ்கிறார்கள்' என்று. அப்போது அவருக்கு இவ்வாறானதொரு எண்ணம் தோன்றும் 'ஆகா.. நானும் என் மரணத்தின் பின்னர் அந்த சாதும்மகாராஜிகம் எனும் தேவலோகத்தில் பிறக்க வேண்டும். நானும் தேவ நிலையை அடைய வேண்டும்' என்று. அவர் அந்த உலகில் பிறக்க வேண்டும் எனும் எண்ணத்தினை உறுதியாக மனதில் நிலைக்கச்செய்வார். அந்த எண்ணத்துடன் கூடிய மனதை மென்மேலும் விருத்திசெய்வார். அவரது மனம் இழிவான அந்த காம உலகத்தில் நிலைக்கச்செய்ததாலும், அதற்கு மேல் அவரது மனதினை மேன்மை செய்யாததாலும், அவர்

மரணத்தின் பின்னர் அந்த தேவலோகத்திலேயே பிறப்பார். இவ்வாறான பிறப்புக்கூட சீலத்துடன் வாழ்ந்த ஒருவருக்கே கிடைக்கும். ஒழுக்கமற்றவருக்கல்ல. புண்ணியமிகு பிக்குகளே, சீலமுள்ளவரது மனதில் கொண்ட இலட்சியம் நிறைவேறுவதற்கு காரணம் அவரது ஒழுக்கத்தின் நிமித்தமாகும். (அவர் பாதுகாக்கும் சீலத்தின் மகிமையாகும்)

(தானுப்பத்தி சூத்திரம் அங்.நி. 6ம் பாகம்)

ஒருவரது பிறப்பிற்கு அவரது மனவியல்பு பூரணமாக தாக்கம் செலுத்தும் என்பதனை நாம் இதன் மூலம் நன்கு உணர்ந்துக் கொள்ள முடியும். ஒருவருடைய மனம் அழுக்கடைந்ததாயின் அவர் நரகத்திலே பிறக்க வேண்டியதுதான்.

“புண்ணியமிகு பிக்குகளே, அழுக்கடைந்த, மாசுகள் நிறைந்த ஒரு மனதினை நான் என் மனதினால் காணுகிறேன். அவர் இப்போது மரணிப்பாராயின் தோளில் சுமந்து வந்த சுமையை இறக்கிவிடும் வேகத்தில் அவர் நரகத்தில் பிறப்பார். அதற்கு காரணம் அவரது மனம் அழுக்கடைந்து, மாசுகள் நிறைந்து இருப்பதாகும். புண்ணியமிகு பிக்குகளே, மனம் அழுக்கடைந்த காரணத்தினால் பல உயிர்கள் நரகத்தில் பிறக்கின்றன”

“புண்ணியமிகு பிக்குகளே, பிரகாசமான மனதுடைய ஒருவரின் மனதினை நான் என் மனதினால் காணுகிறேன். அவர் இப்போது மரணிப்பாராயின் தோளில் சுமந்து வந்த சுமையை இறக்கிவிடும் வேகத்தில் அவர் சுவர்க்கத்தில் பிறப்பார். அதற்கு காரணம் என்ன? அவரது மனம் பிரகாசமானதாக இருந்ததுவே அதற்கு காரணமாகும். புண்ணியமிகு பிக்குகளே, மனம் பிரகாசமானதாக அமைந்த காரணத்தினால் பல உயிர்கள் சுவர்க்கத்தில் பிறக்கின்றன”

(அங்குத்தர நிகாயம் 1ம் பகுதி)

ஒருவர், கண் காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் அறுவகை புலன்களை கொண்டே பிறக்கிறார். இவை முழுக்க முழுக்க கர்ம விளைவுகளினாலேயே கிடைக்கின்றன. இதன் மூலம் அவர், தான் செய்துகொண்ட கர்மங்களுக்கு ஏற்றாற்போல் சுக துக்கங்களை அனுபவிப்பார். புத்த பகவான் அது தொடர்பாக மொழிந்த இந்த பகுதியை அவதானியுங்கள்.

“புண்ணியமிகு பிக்குகளே புராண (பழைய) கர்மம் என்றால் என்ன?
பிக்குகளே, இந்த கண் ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பதன் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும்.

இந்த காது ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பின் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும்.

நாசி ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பின் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும்.

நாவு ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பின் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும்.

உடல் ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக

ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பின் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும்.

மனம் ஒரு பழைய கர்மமாகும். (தாம் முன்னர் செய்துக்கொண்ட) கர்ம விளைவுகளின்படி விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். சிந்தனையால் ஒழுங்கமைந்ததாகும். அனுபவிப்பின் மூலம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாகும். புண்ணியமிகு பிக்குகளே இவையே புராண (பழைய) கர்மங்கள் எனப்படுகின்றன.

(கம்ம சூத்திரம் - சங். நி.4)

இந்த கர்மத்திலிருந்து எம்மால் விடுதலை அடைய முடியுமா? கர்மம் நித்தியமாக நிலைத்திருக்கும் ஒன்றா? இல்லை. உண்மையாகவே நாம் இந்த கர்மத்தில் இருந்து விடுதலை அடைய முடியும். கர்மம் அநித்தியமானதாகும். அழிந்துபோகும் இயல்பிலானதாகும். புத்த பகவான் அதனை பின்வருமாறு மொழிந்துள்ளார்.

“புண்ணியமிகு பிக்குகளே, கர்ம அழிவு என்றால் என்ன? பிக்குகளே, உடற்கருமங்கள், பேச்சிலான கர்மங்கள், மானசீக கர்மங்கள் எனும் இவற்றின் அழிவினால் விடுதலையை ஸ்பரிசித்தலானது கர்மத்தின் அழிவாகும்”

“புண்ணியமிகு பிக்குகளே, **கர்ம அழிவிற்கான மார்க்கம் எது? அதுவே இந்த ஆரிய எண்சீர் வழியாகும்.** அதாவது நற்பார்வை, நற்சிந்தனை, நற்பேச்சு, நற்காரியம், நல்ல ஜீவனோபாயம், நல்வீரியம், நல்விழிப்புணர்வு, நற் சமாதி என்பனவாகும். புண்ணியமிகு பிக்குகளே கர்ம அழிவிற்கான மார்க்கம் இந்த எட்டு அங்கங்களை கொண்ட ஆரிய எண்சீர் வழியே ஆகும்”

(கம்ம சூத்திரம்)

கர்மங்கள், விளைவுகள் அளிக்கும் விதம் உலக உயிர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். அவற்றை புத்த பகவான்மார்களாலேயே காண முடியும். அது தொடர்பாக சிறிதளவேனும் புத்த பகவான்மாரது காலத்தில்தான் அறிந்துகொள்ள முடியும். கர்மத்திலிருந்து விடுதலை அடைய வேண்டுமானாலும் அதுவும் புத்த பகவான் போதித்தருளிய தர்மத்தின்படி அதாவது ஆரிய எண்சீர்வழியில் பயணிப்பதால் மாத்திரமே முடியும்.

நன்று! நன்று!! நன்று!!!

**நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மா சம்புத்தஸ்ஸ**
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மா சம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரங்கள்!

# 02.
# சூள கம்மவிபங்க சூத்திரம்

புண்ணியமிக்கவர்களே,
நாம் இன்று கற்பது சூள கம்மவிபங்க சூத்திரமாகும். அனைவரும் தமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நன்மைகளைச் செய்துக் கொள்வது என்பது தொடர்பாக இந்த போதனையின் மூலம் நாம் நன்கு அறிந்துக் கொள்ளலாம். நாம் ஒவ்வொருவரும் பிறவிப்பயணத்தில் (சன்சாரத்தில்) ஈட்டிய கர்மங்களின் விளைவுகளினாலேயே எமது சுக துக்கங்கள் நிர்ணயிக்கப்படுகின்றது. நாம் சுகம் கிடைக்கும் வகையிலான கர்மங்களைச் சன்சார பயணத்தின் போது செய்திராவிட்டால் நாம் இந்த வாழ்விலும் பிரார்த்தனைகள் செய்து கொண்டிருக்க வேண்டியதுதான். இந்த வாழ்விலும் வெறும் பிரார்த்தனை மாத்திரம் செய்து கொண்டிருந்தால் எமது எதிர்வரும் பிறப்புக்களில் கூட எவ்வித நன்மைகளும் கிடைக்காது. நாம் இந்த வாழ்வில் இயன்றளவு சுகம் கிடைப்பதற்கு காரணமாகும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். அப்படி செய்தால்தான் அடுத்த வாழ்வில் எமக்கு சுகம் கிடைக்கும். அவ்வாறில்லாமல் வெறும் பிரார்த்தனையால் கிடைக்காது. அதற்காக எமது வாழ்வை நன்கு திட்டமிட்டுக்கொள்ளும் வழிமுறைகளைக் கூறும் ஒரு அழகிய போதனைதான் இந்த சூள கம்மவிபங்க சூத்திரமாகும்.

நாம் அனைவரும் இதனை அறிவோம். **(சேதனாஹங் பிக்கவே கம்மங் வதாமி) அதாவது சிந்தனையே கர்மமாகும்.** ஆனால் புண்ணிய செயல்களை செய்வதற்கு எமது சிந்தையை வழிப்படுத்துவது இலகுவான விடயமல்ல. சிலருக்கு புண்ணியங்கள் செய்ய வேண்டும் என நினைத்தால் அதற்கு அவரது மனம் தடை செய்யாது. எனவே அவரால் அதனை இலகுவாகச் செய்து முடிக்க முடியும். ஆனால் வேறு சிலருக்கோ, 'நான் இதனை தானமளிக்க வேண்டும்' என நினைத்து, சிறிது நேரத்திலேயே 'இல்லை இதனை கொடுக்கத் தேவையில்லை வேறு ஏதாவது கொடுப்பேன்', இன்னும் சற்று நேரத்தின் பின்னர் 'இல்லை இதனையும் கொடுக்கத் தேவையில்லை.' என்று நினைப்பார். இவ்வாறாக எமது மனதில் ஆசை, கோபம், அறியாமை எனும் விடயங்களே குடி கொண்டுள்ளன.

**இந்த ஆசை, கோபம், அறியாமை எனும் மன அழுக்குகளை மீறி புண்ணிய காரியங்களை செய்வதற்கு...**

அந்நாட்களில் புத்த பகவான், சாவத்திய நகரின் ஜேதவனராமத்தில் தரிந்திருந்தார். இங்கு வாழ்ந்த தோதெய்ய எனும் அந்தணரின் மகன் தான் 'சுபன்'. இவருக்கு நல்லதொரு பாடம் கற்றுக்கொள்வதற்கு கிடைத்ததுதானே. ஆம்.. அவருடைய அப்பா இறந்து அதே வீட்டில் நாயாக பிறந்தார் அல்லவா? எமது குடும்பங்களிலிருந்தும் எமது உறவினர்கள் மரணிக்கின்றனர். அவர்கள் மரணித்து எந்த ரூபத்தில் எம்மிடமிருக்கிறார்கள் என்பதனை நாம் அறிவோமா? இல்லையே. நாம் ஒருவர் மரணித்தவுடன் 'அவர் இறந்து இத்தனை வருடங்கள் ஆகியது' என்றுதானே பேசிக்கொண்டிருப்போம். ஒருவர் இறந்தவுடன் அந்த உலகத்துடன் எமக்கு எவ்வித தொடர்பும் இல்லை. எனவேதான் மரணித்த பின்னரான உலகை பற்றி எமக்கு

எவ்வித அறிவும் இல்லை. அது மாத்திரமல்ல. நாம் பிறப்பதற்கு முன் இருந்த வாழ்வு தொடர்பாகவும் எமக்கு எவ்வித அறிவும் இல்லை. தாயின் வயிற்றில் கருவுறுவதற்கு எவ்வகையான விடயங்கள், எவ்வகையான சூழல் எமக்கு தாக்கம் செலுத்தியது என்பதனையும் நாம் அறியோம்.

ஒருநாள், தோதெய்ய அந்தணனின் மகன் சுபன், புத்த பகவானை காணச்சென்றார். சென்று புத்த பகவானுடன் உரையாடி ஓர் புறத்தில் அமர்ந்து வணங்கியபடி அவருடைய உள்ளத்தில் எழுந்த கேள்விகளை புத்த பகவானிடம் வினவினார். இன்னும் அவர் மும்மணிகளைச் சரணடைந்தவரல்ல. புத்த பகவான் மீது விருப்பு உள்ளது. ஆனால் அந்த விருப்பானது புத்த பகவானது குணங்களை அறிந்து அறிவால் உணர்ந்த விருப்பு அல்ல. இவர் புத்த பகவானிடம் வினவுகிறார் **“பாக்கியமுள்ள கௌதமரே, இந்த உயிர்களிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த மனிதர்கள் மத்தியில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாட்டு நிலையை எம்மால் காண முடிகிறது. சிலர் நீண்ட ஆயுளுடன் வாழ்கிறார்கள். ஆனால் வேறு சிலர் அகாலத்திலேயே மரணமடைகிறார்கள்”**

**சிலர் சிறு வயதிலேயே மரணிப்பதை எம்மால் காண முடிகிறதல்லவா?**

என்னிடம் சில பெற்றோர்கள், “ஐயோ..! சுவாமியே, எமது பிள்ளை ஒரு ஈ எறும்பிற்குக் கூட கெடுதல் செய்யவில்லை. ஆனால் இந்தச் சின்ன வயதிலேயே இறந்துவிட்டாரே..!’ என்று கூறியிருக்கிறார்கள். இத்தகையவை முற்பிறவிகளில் செய்தவையின் தாக்கம் என்பதனை நாம் உணர்ந்துக் கொள்ளலாம். இன்னும் சிலர் இருக்கிறார்கள். நீண்ட காலம் வாழ்கிறார்கள். 100, 110, 120 வருடங்கள் வரை வாழ்கிறார்கள். இந்த சுபன் என்பவரின் கேள்வியும் இதுதான்.

இவர் ஏன் இந்த வேறுபாடு என சிந்தித்தார். மேலும்

அவர், **பகவானே சிலர் நோயாளிகளாக இருக்கின்றனர். பிறந்ததிலிருந்தே பல நோய்களுக்கு ஆளாகி வாழ்கின்றனர். ஆனால் சிலருக்கு அப்படியல்ல. சிலருக்கு வெயில், மழை, பனி, என எதற்கும் ஈடு கொடுத்து வாழ முடியும். வேண்டியதை சாப்பிடவும் முடியும். அவர்களுக்கு நோய்கள் தோன்றுவதில்லை.**

**பகவானே, சிலர் (துப்பண்ணா) அவலட்சணமாகவும் சிலர் மிகவும் அழகானவர்களாக இருக்கிறார்கள்.** பாருங்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் எவ்வாறு கர்மம் தாக்கம் செலுத்துகிறது என்று. சிலர் **செல்வாக்கு அற்றவர்களாக இருக்கின்றனர். அதாவது எவ்வித வரவேற்பும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மிகவும் சாதாரணமாக வாழ்கிறார்கள். வேறு சிலர் செல்வாக்கு மிகுந்தவர்களாகவும், ஆதிபத்தியம் மிகுந்தவர்களாகவும் வாழ்கிறார்கள்.** அவர்களுக்கு சமூகத்தில் நல்ல வரவேற்பு இருக்கும்.

**சிலர் இழி குலத்தில் பிறக்கிறார்கள். வேறு சிலர் உயர் குலங்களில் பிறக்கின்றனர்.** இந்தியாவில் இந்நிலை வேரூன்றி இருக்கிறது. இது மிகவும் கவலைக்கிடமானதாகும். ராஜகஹ நகரின் தப்போதா நதி முன்னர் வேலுவனராமத்திற்கு உரியதாக இருந்தது. அந்த நதி இயற்கையான சுடுநீரினைக் கொண்டது. அதிலே உயர் குல மக்கள் நீராடுவார்கள். அவர்கள் குளித்த பின்னர் சாம்பல் நிறத்தோடு அழுக்கடைந்த நீர் கீழ் நோக்கி வரும் தானே, அந்த நீரில்தான் இழி குலத்தோர் குளிப்பார்கள். இந்த இழிகுலத்தில் பிறப்பதற்கு காரணம் கர்மமே. இந்த தோதெய்ய இளைஞன் எங்கு சென்றாலும் அவரை வரவேற்று உபசரிப்பார்கள். அமருவதற்கு இருக்கை அளிப்பார்கள். இதுவும் அவருக்கு ஒரு கேள்வியை மனதில் தோற்றுவித்தது.

**சிலருக்கு ஞாபக சக்தி இல்லை. எதனையும் அறிவினால் ஆராயும் திறன் இல்லை. அதாவது அறிவு மந்தமானது. ஆனால் சிலர் ஞானமுள்ளவர்கள்.** இந்த யுகத்தில் மனிதர்கள் அறிவை மேம்படுத்துவதற்கே முயற்சி செய்ய வேண்டும். அறிவை விருத்தி செய்வதே மேன்மையான விடயம். அரிதான விடயமும் அதுவே. ஏனைய விடயங்கள் அதாவது, அழகில்லாவிட்டால் அதனை பெரும் பிரச்சினையாகக் கொள்ளத் தேவையில்லை. நோய்கள் இருக்கிறதென்று, செல்வாக்கு இல்லை என்று, அவற்றையெல்லாம் பெரும் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள தேவையில்லை. ஆனால் எமக்கு அறிவில்லாவிட்டால் அது மிகப்பெரிய பிரச்சினை. மேற்குறிப்பிட்ட எதுவுமே இல்லாவிட்டாலும் அறிவு இருந்தால் 'அதுவே சிறந்தது' என்று நாம் சிந்திக்க வேண்டும். வேறு எது இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அதற்கு காரணம் என்ன? அறிவினால் ஏனைய அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும். அறிவில்லாமல் வேறு எது இருந்தாலும் பயனில்லை.

மேலும் சுப கேட்கிறார். 'கௌதம பகவானே, **சிலர் மிகுந்த அறிவாளிகளாகவும் ஞானிகளாகவும் திகழ்கின்றனர். ஆனால் சிலர் மூடர்கள்.** என்ன கூறினாலும் அவர்களால் அதனை உணர முடியாது. பகவானே, இவ்வாறான இந்த மனிதர்களிடையே உயர்வு தாழ்வு எனும் வேறுபாட்டிற்கான காரணம் என்ன? எவரேனும் தோற்றுவித்ததா? அதை தோற்றுவித்தவரின் விருப்பம் எனக் கூறுவதுதான் அறிவை பயன்படுத்தாதவர்களது இலகுவான பதிலாக அமையும். இதனை சுப புத்த பகவானிடத்தில் வினவியதால் தான் மிகச்சரியான பதில் அவருக்கு கிடைத்தது.

**கர்மம்**

**சுப எனும் இளைஞனுக்கு புத்த பகவான் பின்வருமாறு பதிலளிக்கிறார். ‘புண்ணியமிகு இளைஞனே, (கம்மஸ்ஸகா மாணவ, சத்தா) இந்த உயிர்கள் கர்மத்தை தமக்குரியதாக கொண்டுள்ளனர். (கம்ம தாயாதா) கர்மத்தை தமது சொத்தாக கொண்டுள்ளனர். (கம்மயோனி) கர்மத்தை தமது பிறப்பிடமாக கொண்டுள்ளனர் (கம்ம பந்து) கர்மத்தை தமது உறவினராக கொண்டுள்ளனர் (கம்ம படிசரணா) கர்மத்தை தம் புகலிடமாக கொண்டுள்ளனர் (கம்மங் சத்தே விபஜதி யதிதங் ஹீனபணீதத்தா) இங்கு கூறப்படும் உயர்வு தாழ்வு எனும் வேறுபாட்டிற்கு இந்த கர்மமே காரணமாகும். கர்மம் என்பது யாது? கர்மம் என்பது சிந்தனையாகும்.**

**சிந்தனையின் தாக்கம்**

நாம் சிந்தனை செய்து உடம்பினால் செயற்படுகிறோம், அது காய கர்மம். நாம் சிந்தனை செய்து வார்த்தைகளை பிரயோகிக்கிறோம், அது வச்சீ கர்மம். நாம் சிந்தனை செய்து மனதினால் செயற்படுகிறோம், அது மனோ கர்மம். இவையே எமது அடுத்த பிறவியின் உயர் நிலையையும் தாழ்வு நிலையையும் நிர்ணயிக்கிறது. பொதுவாக நாம் அனைவரும், ஆதிபத்தியம் மற்றும் செல்வாக்கு மிகுந்த சுகாதாரமிக்க அழகிய வாழ்வொன்றை வாழ்வதற்கே விரும்புகிறோம். ஆனால் நாம் விரும்பிய மாத்திரத்தில் அவை கிடைக்காததற்கு காரணம் இம்முறையை நாம் அறிந்திராமையே.

புத்த பகவான் இவ்வாறாக சுப எனும் இளைஞனிடம் உயிர்கள் தன் உடைமையாக கர்மத்தை கொண்டு, கர்மத்தை சொத்தாக கொண்டு, கர்மத்தை தமது உறவினராக கொண்டு, கர்மத்தை பிறப்பிடமாக கொண்டு கர்மத்தை தமது

புகலிடமாக கொண்டு வாழ்கின்றனர். என மொழிந்ததை இவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் சுப இளைஞன் மீண்டும் புத்த பகவானிடத்தில், 'பாக்கியமுள்ள பகவானே, தாங்கள் உரைத்த விடயத்தை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. என்னால் இதனை புரிந்து கொள்ளும் விதத்தில் விரிவாக மொழிந்தருளுவீராக' என்று கூறினார். புத்த பகவான், நாம் இந்த உலகில் அனுபவிக்கும் விடயங்களது பின்னணியை இவ்வாறாக மொழிகிறார்.

"புண்ணியமிகு இளைஞனே, இவ்வுலகில் ஒரு பெண் அல்லது ஆண் இருக்கிறார். அவர் உயிர்களை வதைக்கிறார். உயிர்களை கொல்கிறார். அவர் **(லுத்தோ)** ரௌத்திரமானவர். **(லோஹிதபாணி)** ஏனைய உயிர்களின் இரத்தம் (அவரது) கரங்களில் படிந்திருக்கும். **(ஹதபஹதே நிவிட்டோ)** அன்பு, கருணை என்பவை அவரிடம் இல்லை. **(அதயாபன்னோ)** தயவு அற்றவர். **(சப்ப பாணேசு பூதேசு)** அனைத்து உயிர்கள் மீதும் கருணை, மைத்ரீ (அன்பு) அற்றவர். இவ்வாறானவர்கள் இல்லையா? இருக்கிறார்கள். இவ்வாறான வாழ்வை வாழ்ந்தவர். **(காயஸ்ஸ பேதா பரம்மரணா அபாயங் வினிபாதங் நிரயங் உப்பஜ்ஜதி)** எங்கு சென்று பிறப்பார்? ஆம்.. நரகத்தில் பிறப்பார். ஞாபகப்படுத்திக் கொள்ள முடியாத ஏதேனும் அகுசல கர்மங்கள் எம்மால் நிகழலாம். காலை எழுந்ததிலிருந்து இரவு உறங்கும் வரையிலான காலத்தினுள் நாம் உடல், வார்த்தை, மனம் எனும் இம்மூன்றினாலும் ஏதேனும் செய்து கொண்டே இருக்கிறோம். ஓரிரு நாட்கள் செல்லும் போது அவற்றை நாம் மறந்திருப்போம். ஆனால் கர்மம் அதனை மறக்காது. அது தகுந்த காலத்தில் பலனளித்தே தீரும்.

## இந்த கர்மம் முதன்மை பெறுவதற்கு காரணம் என்ன?

கர்மம் அனைத்திற்கும் முதன்மை பெறுவதற்கான காரணம் ஆத்மம் (தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய இயல்பு) இல்லாமையே. தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்க கூடிய ஏதேனும் இருந்தால் யாரும் துன்பமனுபவிக்க மாட்டார்கள். நரகத்திற்கு செல்லவும் மாட்டார்கள். கர்மம்தான் உயிர்களை இந்நிலைக்கு ஆளாக்குகின்றது. மேற்குறிப்பிட்ட வகையிலான பாவங்களை செய்த அந்த மனிதர் நரகத்தில் சென்று பிறந்து கோடிக்கணக்கான வருடங்கள் துன்பமனுபவித்து எப்போதாவது மனித உலகில் மீண்டும் பிறக்கும் போது அவரது ஆயுட்காலம் குறுகியதாகும். இப்பிறவியில், சிலவேளை அவர் இவ்வாழ்வினை சிறந்த முறையில் வாழலாம். உயிர்களை கொல்லாமல், சீலமிக்கவராக, நல்ல முறையில் வாழலாம். ஆனால் முன்னர் செய்த கர்மத்தின் அடிப்படையிலே அவரது ஆயுட்காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆயுட்காலம் பிறப்பதற்கு பின்னர் தீர்மானிக்கப்படுவதல்ல. தாம் செய்த கர்மங்களின் அடிப்படையில் பிறப்பதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டதாகும்.

## இக்காலத்தின் முழுமையான ஆயுளை நூறு வருடங்கள் எனத்தான் கொள்ள முடியும்.

இந்த வாழ்வில் சீலமிக்கவராக சிறந்த வாழ்வை வாழ்ந்தாலும் அவர் முற்பிறவிகளில் செய்த கர்மவிளைவுகளினால் அகாலத்திலேயே மரணிக்க நேரிடலாம். கர்மம் மற்றும் கர்மங்கள் விளைவுதரும் முறை தொடர்பான அறிவில்லாதவர்கள், 'இந்த வாழ்வில் இவ்வளவு சீலமிக்கவராக வாழ்ந்தும் அகாலத்திலேயே மரணிக்க நேர்ந்ததல்லவா?' எனக்கூறலாம். அது அவர்களுடைய அறியாமையாகும். சன்சாரத்தில் சேர்த்த கர்மம் எனும்

சொத்துதான் அவருடைய குறுகிய ஆயுளுக்கு காரணமாக அமைந்தது. இந்த வாழ்வில் நாம் பாதுகாக்கும் இந்த சீலம் எமது அடுத்த வாழ்விற்கோ அல்லது எதிர்காலத்தில் வேறு பிறவிகளில் எமக்கு துணையாக இருக்கலாம்.

**உயிர்களை கொல்வது எனும் செயல் பிறவிப்பயணத்தின் போது எமது ஆயுள் குறைவதற்கு காரணமாக அமையும்.**

புத்த பகவான் மேலும் அந்த விடயத்தை தெளிவுபடுத்துகிறார். எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உயிர்களை கொல்வதிலிருந்து தவிர்த்திருக்கின்றார். உயிர் வதையை கைவிடுகிறார். ஆயுத பாவனையை தவிர்க்கிறார். அனைத்து உயிர்கள் மீதும் அன்பு, கருணை, தயவு, மற்றும் பரிவுடன் வாழ்கிறார். இந்த காரணத்தினால் அவர் மரணித்த பின்னர் சுவர்க்கத்தில் பிறப்பார். (மனிதலோகம் சுவர்க்கலோகமாகவே தர்மத்தில் குறிப்பிடப்படுகின்றது) நாம் மனித உலகில் பிறப்பதற்கான காரணமாக அமைந்தது நாம் செய்த புண்ணியங்களே, அநேக காலங்கள் தேவலோகங்களில் சுகம் அனுபவித்து அவர் எப்போதாவது மனித உலகில் பிறக்கும் போது அவருக்கு நீண்ட ஆயுள் கிடைக்கும். அவரது நீண்ட ஆயுளுக்கு காரணமாக அமைவது, அவர் உயிர்களை கொல்லாததேயாகும்.

விற்றமின்கள் பாவனையினால், மரக்கறி, பழ வகைகள் உட்கொள்வதனால் தான் நீண்ட ஆயுள் கிடைக்கிறது என்றே நாம் நினைக்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல. கர்மத்தினால் தோற்றம் பெற்றதை தான் நாம் இந்த உணவு வகைகளினால் கொண்டு நடத்துகிறோம். இதிலிருந்து **அனைத்திற்கும் காரணம் கர்மம் என எண்ணிவிடக் கூடாது**. நாம் பிறக்கும் போதே இவையனைத்தும் ஒழுங்கமைந்திருப்பவையாகும்.

## நோய்களுக்கு காரணம்

எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ, **(சத்தானங் விஹேடகஜாதிகோ)** உயிர்களை இம்சிப்பார். கம்பு கட்டைகளினால் தாக்குவார். தம் கை கால்களினால் இம்சிப்பார். கற்களினால், ஆயுதங்களினால் தாக்குவார். இவ்வாறாக உயிர்களை இம்சிக்கும் காரணத்தினால் அவர் மரணித்த பின்னர் நரகத்தில் பிறப்பார். இவ்வாறாக நரகத்தில் பிறந்து என்றாவது ஒருநாள் மீண்டும் மனித உலகில் பிறக்கும் போது அவர் பிறக்கும் போதே நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பார். அதன் பிறகு என்ன? பல்வேறு வகையான துன்பங்களை அனுபவிக்க வேண்டியதுதான்.
எமக்கு ஆயுள் குறைவானதாக இருந்தால் நாம் நீண்ட ஆயுள் கிடைக்கும் செயன்முறையையே பின்பற்ற வேண்டும். அங்குத்தர நிகாயம் எனும் புனித நூலில் பஞ்ச இட்ட தம்ம சூத்திரத்திலே புத்த பகவான் இது பிரார்த்தனைகளினால் கிடைப்பதல்ல. இங்கு இருப்பது ஒரு காரணகாரிய செயற்பாடு என குறிப்பிட்டுள்ளார்.

புத்த பாகவான் மேலும் போதிக்கிறார். **எவரேனும் ஒருவர், மனிதர்களையோ அல்லது வேறு உயிர்களையோ இம்சிப்பாராயின் அவர் நரகத்தில் பிறந்து துன்பங்கள் அனுபவித்து மீண்டும் மனித உலகில் பிறக்கும் போது அவர் வாழ்வின் பெரும் பகுதியையோ அல்லது முழுவாழ்வோ நோய்களுடனே கழிக்க வேண்டும்.** அப்படியாயின் நோய்களுக்கு காரணம் வேறு யாருமல்ல. சம்சாரத்தின் (பிறவிப்பயணத்தின்) போது தான் ஈட்டிக்கொண்ட கர்மங்களே. இவற்றிலிருந்து மீள வேண்டுமாயின் அவர் நன்மையான விடயங்களை செய்தல் அவசியமாகும். பாருங்கள் புண்ணியவர்களே, புத்த பகவானே போதித்தார் அல்லவா

'எவராயினும் நோயாளிகளுக்கு பணிவிடை செய்வாராயின் அவர் எனக்கு (பகவானுக்கு) பணிவிடை செய்ததற்கு சமம்' என்று, இக்காரணிகளை நாம் நன்றாக கிரகித்து நடைமுறை வாழ்வில் செய்படுத்துவோமேயானால் எம்மால் அளப்பரிய புண்ணியங்களைச் சேகரித்துக் கொள்ள முடியுமல்லவா?

## நோயற்ற வாழ்வின் இரகசியம்

புத்த பகவான் இந்த விடயத்தை மேலும் இவ்வாறாக விபரிக்கிறார். எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உயிர்களை இம்சிப்பதிலிருந்து தவிர்த்திருப்பார். அவர் உயிர்களைத் துன்புறுத்தாமல், அடிக்காமல், ஏசாமல், ஆயுதங்களினால் துன்புறுத்தாமல் இருக்கிறார். இவ்வாறானவர் மீண்டும் மனித உலகில் பிறக்கும் போது அவருக்கு நோய்கள் ஏற்படுவது மிகக்குறைவு. அப்படியாயின் நோய்கள் குறைவான சுகாதாரமான வாழ்வை பெற வேண்டுமாயின் நாம் எமது பிறவிப்பயணத்தில் மனிதர்களுக்காக, ஏனைய விலங்குகளுக்காக நன்மைகளை செய்திருக்க வேண்டும்.

## அவலட்சணத்திற்கான காரணம்...?

புத்த பகவான் அடுத்த விடயத்தை இவ்வாறாக மொழிகிறார். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இருக்கிறார். அவர் **(கோதனோ)** குரோதம் மிகுந்தவர். இங்கு குரோதம் செய்கிறார் எனக்கூறுவது அவர் எந்நேரமும் கோபங்கொண்டே இருப்பார். கோபத்துடன் ஏசிக்கொண்டு இருப்பார். எந்நேரமும் கோபமும் எரிச்சலுடன் கூடிய மனப்பாங்குடனேயே இருப்பார். அவர் அக்காரணத்தினால் மரணித்து நரகத்தில் பிறப்பார். மீண்டும் எப்போதாவது அவர் மனித உலகில் பிறக்கும் போது கருமை நிறத்தவராக பிறப்பார். அழகில்லாமல் அவலட்சணமாக தோற்றமளிப்பார். இதற்கு காரணம் என்ன? ஆம்... கோபம்.

கோபம் கொண்ட ஒருவரது முகத்தை சற்று சிந்தித்து பாருங்கள். அந்த இயல்பு தான் சம்சார (பிறவிப்) பயணத்தின் போது அவருக்கு சொத்தாக கிடைக்கிறது. அவரிடம் எவ்வித மகிழ்வூட்டும் தோற்றமும் இருக்காது. பொதுவாக நாம் அனைவருமே அழகாக இருப்பதற்கு விரும்புகிறோம். நாம் ஒரு குழுவாக இருந்து போட்டோ ஒன்று எடுத்தால் கூட முதலிலே நாம் அந்த போட்டோவில் 'நான் எப்படி இருக்கிறேன்? நான் அழகாக இருக்கிறேனா?' என்று தானே பார்ப்போம். இவ்வாறு நடப்பதில்லையா?' நாம் அனைவருமே அழகை விரும்புகிறோம்.

### அழகாக இருக்க வேண்டுமா?

அழகாக இருக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்? கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். பகைமை கொல்லாமல் இருக்க வேண்டும். அன்பு, கருணை, நட்பு மற்றும் பொறுமை ஆகிய குணங்களுடன் இருக்கும் ஒருவர் மரணித்து அதன் காரணமாக சுவர்க்கத்திலே பிறப்பார். அவர் மீண்டும் எப்போதாவது மனித உலகில் பிறக்கும் போது **(பாசாதிக சங்வத்தனிகா)** மிகவும் பொலிவான தோற்றத்துடன் பிறப்பார். அவரைப் பார்க்கும் போது மனதிற்கு விருப்பம் தோன்றும். இருமுறை பாரப்பதற்கு தோன்றும். அப்படியாயின் பார்க்கும் போதே மனம் விரும்பும் தோற்றம் பெறுவதற்கு காரணம் என்ன? ஆம்... கோபம் கொள்ளாமையாகும். இந்த உலகில் வாழும் மக்களை காணும் போது பிறவிப் பயணத்தில் குரோதம் செய்யாத, மைத்ரீ உள்ளத்தை மேம்படுத்திய எண்ணற்றோரை காணலாம். அதேபோன்று அவலட்சணமானவர்களும் இருக்கிறாரக்ள். இதிலிருந்து எம்மால் இந்த சன்சாரத்தில் குரோதம் கொண்டவர்கள் போலவே மைத்ரீ (அன்பு) குணம் கொண்டவர்களும் இருக்கிறார்கள் என்பதனை உணர்ந்துக் கொள்ள முடியும்.

அப்படியாயின் நாமும் கோபத்தை அடக்கி மைத்ரீ (அன்பு) எனும் உயரிய குணத்தை மேம்படுத்துவோமாயின் மரணித்த பின்னர் தேவ உலகில் பிறந்தாலும் தேவர்களின் மத்தியிலும் அழகிய தோற்றத்தை கொண்ட தேவராக பிறக்க முடியும். மனித உலகில் பிறந்தாலும் அப்படித்தான். நாம் மோட்சத்தை உறுதி செய்யும் வரை பிறந்துதானே ஆக வேண்டும். எனக்கு கோபம் வந்தால் நான் இவ்வாறுதான் நினைப்பேன். ‘சீச்சீ இந்த மனதின் இயல்போடு அகுசல தர்மங்களும் சேர்வதால் நாம் எவ்வளவு இழிவான நிலைக்கு தள்ளப்படுகிறோம். இம்மாதிரியான இழிவான மனதுடன் தான் நான் மரணிக்க போகிறேனா? நான் பிறந்ததும் இம்மாதிரியான மனதை கொண்டல்லவா? என நினைக்கும்போது, என்னுள் தோன்றிய அந்த கோபத்தின் மீது அருவருப்பாக இருக்கும். நான் அப்போது தோன்றிய அந்த கோபத்தை அழிப்பதற்கு வீரியம் செய்வேன். ஏனெனில் இவ்வகையான மனதுடன் நாம் சன்சாரத்தில் பயணித்தால் அது எமக்கு நன்மையை விளைவிக்காது. இப்போது நீங்களும் அவ்வாறு சிந்திக்க பழக வேண்டும். எமக்கு கோபம் வந்தவுடன் அதே கோபத்துடன் நாம் வாழ்வோமேயானால் பகைமை, குரோதம், என்பவற்றுடன் நாம் வாழ்வோமேயானால் நாம் நினைக்க வேண்டும் நாம் இவற்றை மனதில் வைத்து கொண்டிருப்பதால் என்ன பயன்? நான் எத்தனை பிறப்புகள் வரை இவ்வாறு இருப்பேன் என நினைக்கும் போது அதனை கைவிடும் பக்குவம் எம் மனதிற்கு தோன்றும்.

அதற்கு துணையாக இருப்பது அறிவுதானே. நாம் அறிவை பயன்படுத்தாவிடில் என்னவாகும்? இந்த குரோதம் என்பது சிலருக்கு இனிமையான உணவாகும். ஏன் இருவர் சினங்கொண்டவுடன் அவர்கள் குரோதத்தினால்தான் போசனையடைகின்றனர். குரோதத்தை உணவாக கொள்ளும்

எத்தனையோ வகையான அமனுஷ்யர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள். அமனுஷ்யர்களின் பார்வை, பாதிப்பு என்பன இருக்கும் இடங்களில் ஒற்றுமைக்கு இடமில்லை. கருணை மைத்ரீக்கு (அன்புக்கு) இடமில்லை. பொறுமை இருக்காது. அமனுஷ்யர்களது பார்வையும் பாதிப்பும் இருக்கும் இடங்களிலே இந்நிலையை நன்கு காணலாம்.

## உணவில் உப்பு இல்லாவிட்டால்...

சிலர் சாப்பிடும் போது உணவில் உப்பு கொஞ்சம் குறைந்துவிட்டாலும் சண்டைதான். உப்பு போதாவிட்டால் கொஞ்சம் உப்பை தெளித்துக் கொண்டால் சரிதானே. ஆனால் அதற்கும் சண்டைதான். உப்பு அதிகமானாலும் சண்டை. கறிக்கு தேங்காய் பால் குறைந்துவிட்டாலும் சண்டை, உணவு சூடாக இல்லாவிட்டாலும் சண்டை. இவை பிரச்சினைகளா? இல்லையே. அந்த அமனுஷ்ய பாதிப்புகள் தோற்றம் பெறுவது பவித்திரமற்றவைகளினாலேயே. தூ ய்மையற்ற விடயங்கள் தான் குரோதம், பொறாமை, பகைமை, ஒன்றுக்கொன்று எதிராக செய்தல் எனும் இவ்வனைத்துமாகும். இவ்வனைத்துமே மனதை அழுக்கடையச்செய்பவை, வார்த்தையை அழுக்கடையச்செய்பவை, செயல்களை அழுக்கடையச்செய்பவைகளே. அமனுஷ்யர்கள் மனிதர்கள் அருகில் வரவேண்டுமாயின் அவர்கள் அதற்கான சூழலை மனிதர்களது மனதிற்கு பாதிப்புச் செலுத்தி உருவாக்கி கொள்வார்கள். இவற்றிலிருந்து மீள வேண்டுமாயின் நன்கு விழிப்புணர்வுடனும், பொறுமை அன்பு, கருணை போன்ற நற்பண்புகளை மேம்படுத்த வேண்டும். புண்ணியவர்களே, எமக்கு இவ்வாழ்விலேயே துணை செய்யும் இந்த தர்மம் மறுவாழ்விலும் கண்டிப்பாகவே உதவி செய்யும்.

## மனதினுள் எரியும் பொறாமை

புத்த பகவான் மேலும் இவ்வாறு விபரிக்கிறார். எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ ஏனையோரது முன்னேற்றத்தை விரும்பாதிருக்கிறார். ஏனையோருக்கு கிடைக்கும் இலாபங்கள், உபசாரங்கள், கீர்த்தி, புகழ் என்பன காணும் போது ஒருபோதும் குணமாக்க முடியாத பொறாமை எனும் நோய் அவருள் தோன்றுகிறது. அதன் பின்னர் என்ன நடக்கும்? அவர் செய்யும் நன்மைகள் ஒருபோதும் தெரியாது. அவருடைய பிழைகள் மாத்திரம் தான் கண்களுக்கு புலப்பட ஆரம்பிக்கும். அவருக்கு நிந்தனை செய்வதற்கான வாய்ப்புகளை தேடிக்கொண்டிருப்பார். பரிகாசம் செய்வதற்கும், ஏதேனும் இழப்போ அல்லது பாதிப்புகளோ செய்வதற்காக காத்துகிடப்பார். இதற்கு காரணம் என்ன? பொறாமை.

நாம் இவ்வாறு நினைத்துப் பார்ப்போம். மிகவும் ஏழையான ஒருவர் இருக்கிறார். அவர் மிகவும் வறுமையில் இருப்பதால் வீடு வீடாக சென்று வீட்டுப்பணிகளைச் செய்கிறார். தென்னை மரங்களில் ஏறி தேங்காய்களை பறிக்கிறார். இவ்வாறாக கூலி வேலைகளை செய்து கொண்டிருந்தவர், சில வருடங்களின் பின்னர் மிகுந்த வீரியத்துடன் உழைத்து முன்னேறுகிறார். வாகனம் ஒன்றையும் வாங்குகிறார். அவர் அந்த வாகனத்தை ஓட்டிக்கொண்டு வருவதை காணும் போது ‘அவன் இப்போது வாகனத்தில் சென்றால் என்ன? அவன் தான் எமது வீட்டின் தேங்காய்களை பிடுங்கினான். வீட்டில் பாத்திரங்களையும் கழுவியிருக்கிறான்.’ இவ்வாறு கூறுவதற்கு காரணம் என்ன? அவரது முன்னேற்றத்தை காணும் போது தன்னுள் தோன்றும் தாங்கமுடியாத பொறாமை.

## தேஜஸ் அற்றதன் இரகசியம்

இவ்வாறாக பொறாமை கொண்டிருக்கும் ஒருவர் மீண்டும் மனித

உலகில் பிறந்தால் அவர் செல்வாக்கு அற்றவராகத்தான் வாழ்வார். தேஜஸ் மற்றும் மகிமை அற்றவராகவே இருப்பார். சமூகத்தினுள் அவருக்கு நல்ல வரவேற்பு கிடைக்காது. ஆதிபத்தியம் இருக்காது. அதற்கு காரணம் என்ன? அவர் முற்பிறவிகளில் பொறாமை கொண்டிருத்தலே.

இந்த போதனையில் புத்த பகவான் ஒவ்வொன்றாகத்தான் விளக்கி கூறுகிறார். மனித உலகில் பிறக்கும் போது இவ் அனைத்து விடயங்களும் ஒன்று சேர்ந்து தான் பலனளிக்கும். பொறாமை கொண்டவரது அகத்தேயிருக்கும் பொறாமையின் வெளிப்பாடுகளாக அவரது வார்த்தைகளும், உடற்செயற்பாடுகளும் அமையும். அவை கண்டிப்பாக தீமையான விளைவுகளே தரும்.. ஒரு ஆணாகட்டும், அல்லது பெண்ணாகட்டும் நன்றாக உணவருந்தி சுகமாக வாழ்வாராயின் அதனை பார்த்து நாம் இன்புற வேண்டும். பொறாமை கொள்ளக் கூடாது. பொறாமை கொள்ளாதிருப்பதால் எம்மிடம் வளரும் குணம் யாது? ஆம் அதுதான் முதிதை. முதிதை என்றால் ஏனையோரது இன்பத்தினை கண்டு நாம் மனமார மகிழ்ச்சியடைதலாகும். பொறாமையின்மை என்பது எமது வாழ்வில் இருந்தால் அது மிகப்பெரிய பாக்கியமாகும். பொறாமையில்லாதவரது வாழ்க்கை மிகவும் சுந்தரமானது. அது அவருக்கு இவ்வுலகிலேயே பலனளிக்க கூடியதாகும். பொறாமை கொள்ளாதவர் ஏனையோருக்கு உதவி செய்ய விரும்புவார், ஏனையோரது நன்மையை விரும்புவார், அவர் மரணித்த பின்னர் தேவ உலகில் பிறப்பார்.

மீண்டும் எப்போதாவது மனித உலகில் பிறக்கும் போது அவர் செல்வாக்கு மிகுந்தவராகவும், ஆதிபத்தியம் மிகுந்தவராகவும் பிறப்பார். இங்கு கூறப்படும் அனைத்துமே எம்மால் பழக்கப்படுத்திக் கொள்ளக் கூடியவையாகும். ஒரு விடயத்தை நன்கு நினைவில் வைத்து கொள்ளுங்கள்

எம்மால் ஏனையோரை திருத்த முடியாது. முதலில் நாம் திருந்துவதற்கே முயற்சிக்க வேண்டும். பொறாமையின்மை எனும் குணம் மிகவும் அழகியதாகும். எவராயினும் சீலத்தினால் மேன்மையுறுவதை காணும் போது, சமாதியை மேன்மைபடுத்தும் போது ஞானத்தால் மேன்மையுறும் போது, அதனை பார்த்து முழு மனதுடன் மகிழ்ச்சிக் கொள்ள வேண்டும். இவ்வாறாக ஏனையோரது முன்னேற்றத்தைக் கண்டு சந்தோஷம் தோன்றாவிட்டால் அது எமது வாழ்வில் ஏற்படும் பெரும் இழப்பாகும். பொறாமையைப் போன்ற கீழ்த்தரமான குணங்கள் இருப்பின் எமது அக வாழ்க்கை மாத்திரமல்ல புற வாழ்க்கையும் முன்னேற்றமடையாது.

### பொறாமையை துறப்பதே பாதுகாப்பு

எனவே இந்த பொறாமை எனும் இழிகுணத்தை நாம் எமது வாழ்விலிருந்து முழுமையாக அகற்ற முயற்சிக்கவேண்டும். நாம் நினைப்போம், யாருக்காவது தலைமைத்துவ பதவி ஒன்று கிடைக்கிறது. நாம் அது தொடர்பாக சந்தோஷமடைந்து அடக்கத்துடன் அவரின் கீழ் இருந்தால் மிகவும் இலகுவாக இருக்கும். பொறாமையில்லாத வாழ்வினால் நாம் பாதுகாக்கப்படுகிறோம். நான் தர்மத்தை கற்கும் போது 'இவ் இவ் நல்ல போதனைகளை ஏனையோருக்கு சொல்லிக் கொடுக்க கூடாது' என்று ஒருபோதும் நினைத்ததில்லை. நான் 'இந்த தர்மத்தை வாசித்ததால் என்னுள் தர்மத்தினால் தோன்றிய அதே இன்பத்தினை ஏனையோரும் பெற்றால் எவ்வளவு நல்லது' என்றே நினைப்பேன். அதனால்தான் என்னால் இந்த குறுகிய காலத்தினுள் புனித திரிபடக நூல்களை மொழிப்பெயர்க்கக் கூடியதாக இருந்தது. அதற்கு காரணம் என்ன? பொறாமையின்மையாகும். பொறாமை இல்லாவிட்டால், எவரேனும் தர்மத்தை பின்பற்றுவது பார்க்கும் போது. நற்பண்புகளை கடைபிடிப்பதைப் பார்க்கும்

போது மகிழ்ச்சியாக இருக்கும். பொறாமை இன்மையானது செல்வாக்கு மிகுந்த ஆதிபத்தியம் மிகுந்த வாழ்விற்கான அடித்தளமாகும். தேவ உலகத்தில் பிறந்தாலும் ஆதிபத்தியம் நிறைந்த தேவனாக பிறக்க வேண்டுமானால், மனிதர்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த மனிதனாக பிறப்பதற்கு வேண்டுமானால், துறவு பூண்டால் அந்த துறவிகளின் மத்தியிலும் செல்வாக்கு மிகுந்தவராக வேண்டுமானால் நீங்கள் வளர்த்து கொள்ள வேண்டியது பொறாமையின்மை எனும் உன்னத குணத்தையாகும். இது மிகவும் சுந்தரமான குணமாகும். இதனை பழக்கப்படுத்தி கொள்ளுங்கள் இதனால் பெரும் பாதுகாப்பு எமக்கு கிடைக்கும்.

## ஏழைகள்? செல்வந்தர்கள்...?

சுப இளைஞன் கேட்ட அடுத்த கேள்வி என்ன? ஆம் **சிலர் ஏழையாக வாழ்கின்றனர். வேறு சிலர் செல்வந்தர்களாக வாழ்கின்றனர். அதற்கு காரணம் என்ன** என்பதாகும். புத்த பகவான் அந்த கேள்விக்கு இவ்வாறாக பதில் அளிக்கிறார். எவராயினும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ அன்னம், பானம், மலர்கள், வாசனை திரவியங்கள், உறையுள் எனும் இவற்றை தானமளிப்பதில்லை. உயிர்களை கொல்லாதிருப்பதற்கு, களவு எடுக்காமல் இருப்பதற்கு, தவறான காம செயலில் ஈடுபடாமல் இருப்பதற்கு, பொய் உரைக்காமல் இருப்பதற்கு, மதுபோதை பாவனை செய்யாமல் இருப்பதற்கு பணம் தேவைப்படுமா? இல்லை. ஆனால் தானமளிப்பதற்கு பணம் தேவைப்படும். தானமளிக்காதவர் பிறக்கும் எல்லா பிறப்புகளிலும் ஏழையாகத்தான் பிறப்பார். வறுமையை கொடூர நிலையை இந்தியாவில், ஆபிரிக்க கண்டத்தின் பல நாடுகளில் காண முடியும். எமக்கு இங்கு ஒரு பலாக்காயையாவது பிடுங்கிச் சாப்பிடலாம். அங்கு ஒன்றுமே இல்லை. (இந்தியாவில் எல்லா பிரதேசங்களிலும்

அல்ல) அவர்களது வாழ்வில் கட்டாய அங்கமாக பசி இருக்கிறது.

அவரவர்கள் தம் பிறவிப்பயணத்தின் போது ஈட்டிய கர்மத்தின் சொத்தாக அமைந்த விளைவுகளின் தன்மையே இதுவாகும். நாமும் அவ்வாறான இடங்களில் பிறந்தால் அவ்வளவுதான். அப்போதுதான் இந்த புண்ணியத்தின் மகிமையை உணரக்கூடியதாக இருக்கும். சிலர் இதனை தவறாக புரிந்து கொள்கின்றனர். புத்த பகவான்மார்கள் இந்த துக்கத்தினை கண்டுதான் இந்தியாவில் தோற்றம் பெறுகிறார்கள். என்ற கருத்து மிகப்பெரிய பொய்யாகும். புத்த பகவான்கள் இந்த உலகிற்கு தோன்றுவது ஏழைகளுக்காகவோ அல்லது வறுமையை போக்குவதற்காகவோ அல்ல. மாறாக ஞானமுள்ளவர்களுக்காகவே தோன்றுகிறார்கள். புத்த பகவானது தர்மம் ஞானமுள்ளவர்களுக்கே உரியது.

**தானமளிக்காவிடில் அவருக்கு ஆடைகள், உணவு, உறையுள், எதுவுமே கிடைக்காது.**

இந்தியாவில் சில இடங்களில் வாழும் மனிதர்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபம் தோன்றுகிறது. மனிதாபினம் என்பது சிறிதளவேனும் இல்லை. பஞ்ச பாவங்களில் அமிழ்ந்து தான் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் திருடர்கள். அவர்கள் பஞ்ச சீலங்களைப் பற்றி கேள்விபட்டது கூட இல்லை. அவர்கள், மும்மணிகள், பஞ்ச சீலம், நன்மை, தீமை, புண்ணியம், பாவம் என்பன கேள்விப்பட்டது கூட இல்லை. இப்போது உங்களால் அந்த சூழலை நினைத்து கொள்ளலாம் அல்லவா? அவர்கள் மரணித்து எங்கு சென்று பிறப்பார்கள்? நரகத்தில்தான். காரணம் என்ன? ஆம் அங்கு சென்று பிறப்பதற்கான அனைத்து காரணிகளையும் அவர்கள் செய்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் நாம்

மரணித்து நரகத்திற்கு செல்ல நேரிடும் என்பதனைக் கூட அறியாதவர்களாகத்தானே இருக்கிறார்கள். எனவே ஒரு விடயத்தை நன்கு நினைவில் வைத்து கொள்ளுங்கள். எமக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தானமளிக்க வேண்டும் இதனை அன்றாட வாழ்வினுள் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது தனக்கும் அவை திரும்ப கிடைக்கும். தானமளிக்காதவர்களுக்கு கிடைக்காது.

ஒரு சந்தர்ப்பத்தில் புத்த பகவானிடம் சுமனா எனும் கோசலை நாட்டு இளவரசி இவ்வாறாகக் கேட்டாள்.
“பாக்கியமுள்ள பகவானே, சீலத்தினாலும் தர்ம ஞானத்தினாலும் சமமான இருவர் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் தானமளிக்கிறார். மற்றவர் தானமளிக்கவில்லை. அவர்கள் இருவரும் மரணித்து தேவ உலகில் பிறந்தால் அந்த பிறப்பில் வேறுபாடுகள் இருக்குமா?” என்று.

“கண்டிப்பாக இருக்கும். தானமளித்தவர் தேவ சுகத்தில் முதன்மையானவராக இருப்பார். ஆனால் மற்றவருக்கு அவ்வாறில்லை” என்று புத்த பகவான் மறுமொழி தெரிவிக்கிறார். (அப்படியாயின் தேவர்களின் சுகத்திலும் குறைந்தளவான சுகம் , மேன்மையான சுகம் என்ற வேறுபாடுகள் இருக்கின்றன.)

“பகவானே இவர்கள் மீண்டும் மனித உலகில் பிறந்தால் வேறுபாடுகள் இருக்குமா?”

“ஆம் அந்த இரு பிறப்புகளிலும் வேறுபாடுகள் இருக்கும். தானமளித்தவர் செல்வந்த குடும்பங்களிலும் தானமளிக்காதவர் ஏழை குடும்பங்களிலும் பிறக்க நேரிடும்”

“இவர்கள் இருவரும் இல்லறந்துறந்து துறவிகளாக

மாறினாலும் வேறுபாடு இருக்குமா?"

"தானமளித்தவருக்கு தானம், சீவரம், ஔடதம், உறையுள் என்பன இலகுவாக கிடைக்கும். ஆனால் தானமளிக்காதவருக்கு அப்படிக் கிடைக்காது"

மீண்டும் சுமனா இராஜகுமாரி புத்த பகவானிடத்தில்,

"அவர்கள் இருவரும் வீரியம் செய்து அரஹத் நிலையை அடைந்தால் அந்த வீடுபேற்றில் வேறுபாடுகள் இருக்குமா" என கேட்கிறாள்.

அதற்கு புத்த பகவான் "இல்லை, வீடுபேறுகளில் மாற்றங்களில்லை" என மொழிகிறார். புண்ணியவர்களே, தானமளித்தல் மற்றும் தானமளிக்காமை எனும் இருவிடயங்கள் அரஹத் நிலை எனும் வீடுபேற்றில் மாத்திரம்தான் பாதிப்பு செலுத்தவில்லை. ஏனைய அனைத்து பிறப்புக்களிலும், அனைத்து விடயங்களிலும் அது பாதிப்பு செலுத்துகிறது. எனவே இந்த தானம் எனும் உன்னத பழக்கத்தை நாமும் ஏற்படுத்தி கொள்தல் மிகவும் அவசியமாகும். புத்த பகவான் 'சாப்பிட்டுக் கை கழுவிய பாத்திரத்திலுள்ள நீரை வீசும் போது கூட இதில் உள்ள உணவுத்துகல்கள் ஏதேனும் உயிரினங்களுக்கு உணவாகட்டும்' எனும் எண்ணத்தை கொண்டு வீசுமாறு மொழிந்திருக்கிறார். நான் உங்களிடம் அடிக்கடி நினைவுபடுத்தும் ஒரு விடயம் ஏனையோருக்கு உடைகளை தானமாக கொடுக்கும் போது பழைய ஆடைகளை கொடுக்க வேண்டாம்.

சுனாமி அனர்த்தத்தின் போது பாதிப்படைந்தவர்களுக்கு வழங்குவதற்காக சேர்த்த ஆடைகளிலே இருந்த அனைத்து பழைய ஆடைகளையும் நாம் தீயிலிட்டோம். அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்வர்களும் மனிதர்தானே. அவர்களுக்கு அந்நேரத்தில் தன் ஒரே உடைமையாக இருந்தது தான் அப்போது அணிந்திருந்த ஆடை மாத்திரந்தான். நாம்

தானமளிக்கும் போது சிறந்தவற்றைத்தான் தானமளிக்க வேண்டும். சாப்பாடும் அப்படித்தான் சாப்பிடக்கூடிய பிரியமானவற்றையே தானமளிக்க வேண்டும். அப்படியில்லாமல் ‘சாப்பிடுவதாயின் சாப்பிடு இல்லாவிட்டால் சும்மாயிரு’ எனும் மனப்பாங்கில் கொடுக்கக் கூடாது. எவருக்கேனும் தேனீரை கொடுக்கும் போது வேண்டா வெறுப்பாக அதனை தயார் செய்து ‘நீ குடித்தால் குடி, இல்லாவிட்டால் வீசு’ எனும் மனப்பாங்குடன் கொடுத்தால் கிடைப்பதும் அப்படித்தான். நாம் எவ்வாறு கொடுக்கிறோமோ அப்படித்தான் திரும்ப எமக்கு கிடைக்கும். சிறந்த முறையில் தானமளித்தால் எமக்கு சிறந்த முறையில் கிடைக்கும்.

**சிலர் சிக்கனத்தையும் கஞ்சத்தனத்தையும் பிரித்துணர்ந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்.**

சிக்கனத்தின் வேடத்தில் மனதில் உள்ள கஞ்சத்தனம் தான் வெளிப்படும். சிக்கனம் என்பது எமது வாழ்வில் இருக்க வேண்டிய ஒரு விடயமாகும். எனக்காக நான் செலவு செய்ய விரும்ப மாட்டேன். ஆனால் ஏனையோருக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்வேன் எனும் மனப்பாங்கு எம்மிடம் இருக்க வேண்டும். அப்போது எம்மால் சரளமான வாழ்வொன்றை வாழ முடியும். ஏனையோருக்கும் எம்மால் உபகாரங்களே கிடைக்கும். எனவே ஈகை எனும் குணத்தை நாம் மேன்மைபடுத்த வேண்டும். அது எமது வாழ்விற்கு மிகவும் துணையாக இருக்கும் ஒரு விடயமாகும். கொடையில் சிறந்தது எது? தர்மத்தை தானமளித்தலாகும். புத்த பகவானே முதன் முதலில் தர்மத்தை தானமாக உலக உயிர்களுக்கு அளித்தார். புத்த பகவான் 45 வருடங்களாக தர்மத்தையே தானமளித்தார். எனவே நீங்களும் இந்த தர்மத்தை கற்றுணர்ந்த பின்னர் ஆமிச தானங்களை போலவே தர்மத்தையும் தானம் செய்யுங்கள். இவ்வாறாக தானமளிப்பதை பழக்கப்படுத்தி

கொள்ளுங்கள். கொடுக்கும் போது இரு மனதோடு கொடுக்க வேண்டாம். மனதால் நொந்து கொண்டு, சிணுங்கிக் கொண்டு கொடுக்கக் கூடாது. நாம் கொடுப்பதைப் போன்றே திரும்பக் கிடைக்கும். முழு மனதுடன் தானமளிப்பவருக்கு அவை கிடைக்கும் போது சிறந்தவையாக அவரது காலடிக்கே வந்து கிடைக்கும். முழுமையான மனதுடன் கைவிடும் நோக்கத்தில் உலோபித்தனத்தை துறந்து தானமளியுங்கள்.

## பூஜிக்க தகுந்தவர்களை பூஜிக்க வேண்டும்.

அடுத்ததாக புத்த பகவான் மொழிகிறார் 'ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இருக்கிறார். அவர் கௌரவம் அளிக்க வேண்டியவர்களை கௌரவிக்காது இருக்கிறார். உபசரிக்க வேண்டியவர்களை உபசரிக்காது இருக்கிறார். நாம் பாதையில் நடந்து சென்றால் ஏனையோருக்கும் இடமளித்துதான் பயணிக்க வேண்டும். ஆனால் இவர் அப்படி செய்ய மாட்டார். மரியாதை செலுத்தாமல் செல்வார். அவர் மரணித்த பின்னர் நரகத்தில் பிறப்பார். அவ்வாறில்லாமல் அவர் மீண்டும் மனித உலகில் பிறக்க நேர்ந்தால் பிறப்பது மிகவும் இழிவான குலத்திலாகும். இழிகுலத்தில் பிறந்து சமூகத்தினது இழிசொற்களை கேட்டு வாழும் நிலை அவருக்கு ஏற்படும். இந்த உலகம் எவ்வளவு தான் தொழிநுட்பத்தால் முன்னிலையில் இருந்தாலும் இன்னும் இந்த குல பேதங்கள் அழியவில்லை. இதற்கு காரணம் என்ன? ஆம் இவை கர்ம பலன்களாக பலன் தர வேண்டுமல்லவா? குலபேதங்கள் இல்லாமல் போவது தர்மத்திற்கு வந்தால் மாத்திரம்தான்.

## உயர் குலத்தில் பிறக்க வேண்டுமாயின்

அடுத்ததாக புத்த பகவான் போதிக்கிறார். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பணிவன்புடன் கௌரவிக்க

வேண்டியவர்களை கௌரவித்து உபசரிக்க வேண்டியவர்களை உபசரித்து, பாதையில் செல்லும் போது மரியாதை செலுத்த வேண்டிவர்கள் முன்னே செல்வதற்கு இடமளித்து, மரியாதை கொடுக்க வேண்டியவர்களுக்கு மரியாதை கொடுத்து, பூஜிக்க தகுந்தவர்களை பூஜித்து வாழ்கிறார். அவர் மரணித்த பின்னர் சுவர்க்கத்தில் பிறப்பார்.

இவை அனைத்தும் எமது சம்சார பயணத்திற்கு மிகவும் தாக்கம் செலுத்துவனவாகும். நாம் நினைப்போம் நாம் இந்த பிறவியில் உயர் குலத்தில் பிறந்தோம் என்று. ஆனால் தாழ் குலத்தில் பிறந்தோர்களை நிந்திக்காதீர்கள். இதுவும் இழிகுலத்தில் பிறப்பதற்கு காரணமாக அமையும். ஏனெனில் நாம் இழி குலத்தில் பிறக்காமல் உயர் குலத்தில் பிறப்பதற்கு காரணம் நாம் சம்சார பயணத்தின் போது நாம் கௌரவிக்க வேண்டியவர்களை கௌரவித்ததாலேயே. அப்படியாயின் எமது வாழ்வினை நாம் நற்பண்புகளாலேயே நிர்மாணிக்க வேண்டும். கௌரவிக்க வேண்டியவர்களை கௌரவிப்பது, நற்பண்புகள் நிறைந்தோரை கௌரவிப்பது என்பன உன்னதமான விடயங்களாகும். எம்மதத்தவராயினும் நன்மையை செய்தால் அதனை மதிக்க வேண்டும். நாம் பௌத்தர்களாக இருப்பதால் நாம் தீமை செய்தால் அது நன்மையாக அமையுமா? இல்லை. வேறு மதத்தவர் நன்மையை செய்தால் நல்ல பண்புகளை வளர்ப்பார்களாயின் அதுவும் நன்மையே. இந்த கருத்தை நாம் ஏற்க வேண்டும். இது எமது அக வாழ்வினை முன்னேற்றும் ஒரு மனப்பான்மையாகும்.

### அறிவின்மைக்கான காரணம்...

அடுத்த விடயம் நாம் கண்டிப்பாக அறிந்துக் கொள்ள வேண்டியதொரு விடயமாகும். அது என்ன? ஆம்.. அறிவில்லாமைக்கு காரணமான பரம இரகசியத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா? இந்த அறிவின்மைக்கு

காரணம் என்ன? ஆம். ஒரு ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் அவர் குசல தர்மங்கள் என்னவென்று தேடாமல் இருக்கிறார். அகுசல தர்மங்கள் என்ன வென்று அறிந்துகொள்ளாமல் இருக்கிறார். நன்மை எது? தீமை எது? என அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யாமல் இருக்கிறார். வாழ்வில் எதனை பழக்கப்படுத்த வேண்டும்? எதனை பழக்கப்படுத்த கூடாது என தேடாமல் இருக்கிறார். அதனால் நான் இதனை பழக்கப்படுத்தினால் அது எனக்கு நீண்ட காலங்களுக்கு துர்விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்காமல் இருக்கிறார். நான் இதனை பழக்கப்படுத்தினால் இது எனக்கு நீண்ட காலங்களுக்கு நல்விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்காமல் இருக்கிறார். எனவே அவர் குசலங்களையும் அகுசலங்களையும் அறியாமல் இருப்பார். நன்மையானது என தீமையை செய்வார் தீமையானது என நன்மையை செய்யாமல் இருப்பார். இரண்டையும் குழப்பி கொள்வார். காரணம் என்ன? அறியாமைதான்.

அறிவில்லாவிட்டால் புத்த பகவான் ஒருவர் தோன்றினால் கூட எம்மால் அதன் பெறுமதியை உணர முடியாது. புத்த பகவானது தர்மத்தை கூட இனங்காண முடியாது. அறிவில்லாதவருக்கும் இன்னும் இரு விடயங்கள் இலவசமாக கிடைக்கும் அவை என்ன? ஆம் மூர்க்கத்தனமும் அகங்காரமும். அறிவுடமை எனும் குணத்துடன் இன்னும் ஒன்று சேர்ந்தே இருக்கும் அது என்ன? அதுதான் பணிவு. எனவேதான் மூடனுக்கு
ஒரு விடயத்தை விளக்குவதற்கு கடினமாகவும் அறிவுள்ள ஒருவருக்கு ஒரு விடயத்தை விளக்குவதற்கு இலகுவாகவும் இருக்கிறது. மூடனுக்கு ஏதேனும் கூறினால் அவன் அதனை கேட்பதற்கு தயாராக இருக்கமாட்டான். ஏதேனும் அறிவுரை செய்தாலும், தர்க்கஞ்செய்து வேறு வேறு விடயங்களைச் சொல்லி மூடி மறைத்துவிடுவார். இறுதிவரை அவர் குசல தர்மங்களையும் அகுசல தர்மங்களையும்

அறிந்துகொள்ளாமலே இருப்பார். செய்ய வேண்டியது என்ன? கூடாதது என்ன? என்பதனையும் அறிந்து கொள்ளாமலேயே இருப்பார். இவ்வாறாக குழப்பிக்கொண்டிருந்து இறுதியில் அனைத்து புண்ணியங்களையும் அழித்துக் கொண்டு நரகத்தில் சென்று பிறப்பார்.

எனக்கும் முன்னர் (துறவுபூண்ட ஆரம்பகாலத்தில்) இது தொடர்பான தெளிவான அறிவு இருக்கவில்லை. நான் முன்னர் தர்மத்தை கற்கும் போது எனக்கு புண்ணியம் போதாமை என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது. நான் இது தொடர்பாக கேட்டவர்கள் எல்லோரிடமிருந்தும், 'புண்ணியம் போதாது பாரமீ போதாது, எமக்கு தர்மத்தை உய்த்துணரும் பாக்கியம் இல்லை. அந்த தகுதி இல்லை' என்றுதான் கேட்கக்கிடைத்தது. எனக்கு இது பெரும் பிரச்சினையாக இருந்தது. இந்த ஞானத்தை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும் என சிந்திக்க தொடங்கினேன். அப்போது ஒரு சுவாமி என்னிடம் தீபங்களை ஏற்றி அவற்றை புத்த பகவானுக்கு பூஜியுங்கள், அப்போது ஞானம் விருத்தியடையும் என கூறினார். நானும் அவ்வாறே செய்தேன். இப்படியிருக்கும் போது ஒருநாள் எனக்கு **ஆலவக சூத்திரத்தை** வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த போதனையில், "புத்த போதனைகளை கேட்டு (வாசித்து) அவற்றை அறிவினால் ஆராயும் போது ஞானம் விருத்தியடையும்" என குறிப்பிடப்பட்டிருந்தது. பாருங்கள், அந்த சூத்திரம் இல்லாவிட்டால் எல்லாம் முடிந்திருக்கும். எமது வாழ்வின் மிக மிக முக்கியமாக இருக்க வேண்டிய ஒரு அங்கம் தான் இந்த ஞானமாகும். அந்த ஞானம் எனும் விடயம் இல்லாவிட்டால் இந்த தர்மத்தை எம்மால் அணுக முடியாது. அதேபோல்தான் இந்த அறிவு என்பது சுயமாக தோன்றும் விடயமல்ல. ஞானத்தை வளர்த்துக் கொள்வதற்கு நாம் மிகவும் முயற்சி செய்ய வேண்டும். அதற்காக நாம் அடிக்கடி புத்த போதனைகளை

கேட்க வேண்டும் வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசித்து, கேட்டறிந்த புத்த போதனைகளுக்கு ஏற்ப நாம் சிந்திக்க வேண்டும். ஞானம் இல்லாவிட்டால் தேடுதல் செய்ய முடியாது. அறிவினால் ஆராயாவிட்டால் ஞானம் தோன்றாது. ஏதேனும் ஒன்றை கூறியவுடன் அதனை அப்படியே ஏற்றுக்கொள்வது ஞானமல்ல. அறிவினால் ஆராய வேண்டும். வேண்டியவருக்கு வேண்டியதை சொல்லும் சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்வதும் அறிவை பயன்படுத்தி ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளுதலும் தன் சுய விருப்பாகும்.

## ஞானமுள்ளவராக இருக்கும் அரிய சந்தர்ப்பம்

நான் நினைக்கிறேன், உங்களால் ஞானமுள்ளவராக மாறுவதற்கு இதனை விட வேறு சிறந்த சந்தர்ப்பம் கிடைக்காது. புத்த பகவானது உன்னதமான தர்மம் எமக்கு மிக மிக தூய்மையாக கிடைக்கும் காலம் இதுவாகும். இதற்கு முன்னரும் திரிபிடக நூல்கள் இருந்தன. ஆனால் அப்புனித நூல்களை அலுமாரிகளில் பூட்டியே வைத்திருந்தனர். இவ்வாறாக எமக்கு தூய்மையான முறையில் தர்மத்தை இலகுவாக கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ள போதே நாம் அதனது உச்ச பயனை அடைய வேண்டும். இந்த தர்மத்தை கேட்டும், வாசித்தும் அறிவினால் ஆராய வேண்டும். அப்போதுதான் ஞானம் வளரும். நாம் ஒரு விடயத்தை நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஞானம் வளருவது அடக்கத்தினூடாகத்தான். பணிவு எனும் உயர்ந்த குணம் ஞானத்துடன் மிகவும் தொடர்புற்றதாகும். அகங்காரமும் மூர்க்கத்தனமும் இருக்கும் ஒருவருள் ஞானம் வளராது. அறிவினால் ஆராய வேண்டும் என்று நாம் அதனை நினைத்து செருக்கடைந்தால் ஞானம் வளருமா? வளராது. மாறாக நாம் ஏதேனும் தனிப்பட்ட கருத்துக்களை உருவாக்கி அவற்றிலேயே சிக்கி கொண்டிருப்போம். ஆகையால் தர்ம

மார்க்கத்தில் பயணிப்பதற்கு இந்த பணிவு எனும் குணம் மிக மிக அவசியமானதாகும். பணிவுடனும் அடக்கத்துடனும் இருந்துதான் இந்த தர்மத்தை அறிவினால் ஆராய வேண்டும். இவ்வகையாக புத்த பகவானது போதனைகளைத்தான் அறிவினால் ஆராய்ந்து ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக புரிந்து கொண்ட பின்னர் நாம் எம்மை பட்டை தீட்ட வேண்டும். அப்போது எம் அகத்தே ஞானம் வளரும். அறிவினது வளர்ச்சி எம் அனைவரதும் வாழ்விற்கும் மிக மிக அவசியமானதாகும். ஞானம் இல்லாவிட்டால் எமது வாழ்விற்கு எவ்வித ஒளியும் இல்லை என்றே கூற வேண்டும். ஞானமற்ற வாழ்வு காரிருளிலேயே மூழ்கியிருக்கும்.

**எண்பது வயதிலும் ஞானம் மங்கவில்லை.**

சில பாட்டிமார்கள் இருக்கிறார்கள். எனக்கு 85 வயது நிரம்பிய ஒரு பாட்டியை சந்திக்க நேர்ந்தது. அவர் கண்டி பிரதேசத்தில் வாழ்பவர். அவருக்கு 80 வயதிருக்கும் போதுதான் இந்த உத்தம தர்மம் கிடைத்துள்ளது. அவர் என்னிடம் ‘சுவாமியே எனது பரம்பரையில் எல்லோரும் 80 வயதிலேயே மரணித்தார்கள், ஆனால் நான் 80 வயதில் மரணிக்கவில்லை. நானும் 80 வயதில் இறந்திருந்தால் எனக்கு இந்த உத்தம தர்மம் கிடைத்திருக்காது. எனக்கு 80 வயதில் தான் சரியான முறையில் இந்த மும்மணிகளை சரணடையக்கிடைத்தது. இப்போது நான் இந்த தர்மத்தில் முழு மனதுடன் ஈடுபடுகிறேன். இந்த தர்மத்தை நான் முழு மனதுடன் எனது வாழ்வில் பழக்கப்படுத்துகிறேன்” என்று கூறினார். அவர் இந்த ஐந்து சேக பலங்களையும் மிகவும் அழகாக தன்னுள் நிலைநிறுத்தி வைத்துள்ளார்.

அப்படியாயின் பாருங்கள், அவருக்கு 80 வயதில் இந்த தர்மத்தை பின்பற்றுவதற்கு அவரது வயது தடையாகியதா?

இல்லையே. அந்த பாட்டி ஒரு எழும்பு கூட்டை போன்று மிகவும் மெலிந்தவர். உடல் ரீதியாக மிகவும் பலவீனமடைந்தவர். ஆனால் அவரது மனம் இளமையானது. எனவே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த உடல் பலவீனமுற்றால் நாம் அதன் காரணமாக எமது மனதை பலவீனப்படுத்திக் கொள்ளக் கூடாது. நாம் இப்போது மிகவும் வயதானவர்கள், எமக்கு இப்போது இந்த தர்மத்தை பின்பற்ற முடியாது என்று நினைக்கக் கூடாது. அறிவினால் ஆராய்வதற்கு வயது தடையில்லை. வேண்டியதெல்லாம் விழிப்புணர்வும் வீரியமும் அறிவும் தான். அறிவினால் ஆராய ஆராய இந்த ஞானம் சிறிது சிறிதாக வளர ஆரம்பிக்கும்.

**சோம்பலை தூரத்தே துரத்திவிட வேண்டும்.**

எமது வாழ்வினுள் ஞானத்தை தோற்றுவித்துக் கொள்வதற்கு தடையாக அமையும் பிரதான காரணிதான் சோம்பல். எமது வாழ்வினை பாருங்கள். வீடுகளில் சமைத்து சாப்பிட்டு, பாத்திரங்களை கழுவி, தூங்கி எழுந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டு ஏனையோரது விடயங்களை பேசிக்கொண்டிருந்தால் ஞானம் வளருமா? ஒருபோதும். இல்லை. ஞானம் வளர வேண்டுமாயின் அவர் அடிக்கடி தர்ம நூல்களை வாசித்து அவற்றை மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறாக தர்ம புத்தகங்களை வாசித்து மனதில் நிலைநிறுத்திக் கொள்ளும் போது தர்மத்தின் பால் எமது விழிப்புணர்வு திரும்பும். அப்போது அந்த தர்மத்தின் விடயங்கள் மனதில் மென்மேலும் நிலைபெறும். இவ்வாறாக மனதில் நிலைத்திருக்கும் தர்ம காரணிகளின் அடிப்படையில் சிந்திக்கும் போது ஞானம் தோன்றும். இவ்வாறாகவே ஞானம் வளர்ச்சியுறும்

நானும் அப்படித்தான் செய்வேன். உங்களாலும் முடியும். அறிவினால் ஆராய்வது என்பது கடினமானதுதான். ஆனால்

அது வாழ்வினுள் கட்டியெழுப்பட்ட பின்னர் அது வாழ்வின் ஒரு அங்கமாக மாறிவிடும். தர்மத்தை நினைவு கூர்ந்துகொண்டு தர்மத்தினாலேயே அதனை செய்ய வேண்டும். புத்த பகவான் எல்லா சந்தர்ப்பங்களிலும் தனது சீடர்களை பற்றி. தர்மஞானம் மிகுந்த சீடன், ஞானமிகுந்த சீடன், பிரக்ஞைமிகு சீடன், அறிவுமிகுந்த சீடன் என்றவாறு புத்த பகவான் ஒரு அடைமொழியை பயன்படுத்துவார். இந்த ஞானத்துடன் தான் எமது வாழ்வு பிரகாசமுடையதாகிறது. சுந்தரமாகிறது. ஒன்றை நினைவில் வைத்து கொள்ளுங்கள். இந்த தர்மத்தை கற்பதன் முக்கிய நோக்கம் ஏனையோருக்கு கூறுவது அல்ல. தான் அந்த தர்மத்தின் சுந்தரத்தை உணர வேண்டும். தர்மத்தின் உன்னத சுகத்தை தான் அனுபவிக்க வேண்டும். தான் அந்த தர்மத்தின் சுந்தரத்தை உணர்ந்த பின்னர் ஏனையோருக்கு கூறும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அப்போது ஏனையோர் மீது அனுதாபமும் அன்பும் கொண்டு அந்த தர்மத்தை கற்றுக்கொடுக்க வேண்டும். இன்னுமொருவருக்கு தர்மத்தினைக் கூறும்போது, அவர் மனதில் கருணை இருக்க வேண்டும். கருணை இருந்தால் தான் விபரித்து கூறுவதற்கான அனுதாபம் தோன்றும். ஆனால் இவ்வாறாக தர்மத்தை கற்றுக்கொடுக்கும் போது அவரது (கேட்பவரது) கருத்துக்களை முதலில் உணர வேண்டும். நான் ஒருபோதும் இந்த தர்மத்தை கட்டாயமாக திணிக்க முயற்சிக்க மாட்டேன். ஏனெனில் தர்மத்தை உய்த்துணரல், ஞானத்தை விருத்தி செய்துக்கொள்ளல் என்பதெல்லாமே இந்த உலகில் உள்ள மிக மிக கடினமான விடயங்களாகும். ஒருவர், தனது சுய விருப்பினால் தர்மத்தை அறிவினால் ஆராய வேண்டுமே தவிர அதனை வேறு ஒருவரால் கட்டாயப்படுத்தி திணிக்க முடியாது. 'யோனிசோ மனசிகாரத்தை பலவந்தப்படுத்தி ஊட்ட முடியாது' இங்கு வருபவர்களுக்கும் நான் இதனைத்தான் கூறுகிறேன். கற்றுக்கொடுக்கவில்லை கற்றுக்கொள்ளுங்கள்.' அப்போது யாருக்கு கற்க வேண்டிய தேவை இருக்கிறதோ

அவர் கற்றுக்கொள்வார். நான் இப்போது தர்மத்தை உங்களிடம் கூறுகிறேன். இவற்றை நீங்கள் பின்னர் நினைவு கூறாவிடில் அறிவினால் ஆராயாவிடில் இது உங்களுடைய கற்றலாகாது. இது உங்களுடைய கற்றலாக வேண்டுமானால் இவ்வாறு கேட்கும் தர்மத்தை அறிவினால் ஆராயுங்கள்.

எனவே இந்த தர்மத்தினூடாக அனைத்து நல்ல விடயங்களையும் கற்று கொள்ளுங்கள். அப்போது அந்த நல்ல பண்புகள் சிறிது சிறிதாக எமது வாழ்வினுள் வளர ஆரம்பிக்கும். அந்த பண்புகளுள் முதன்மையானது தான் பிரக்ஞை எனப்படும் ஞானமாகும். இந்த வாழ்வினுள் ஞானத்தை நன்கு பழக்கப்படுத்தி கொண்டால் அடுத்த பிறவியில் அவர் எப்படி பிறப்பார்? ஆம் கூர்மையான அறிவு கொண்டவாராகத்தான் அவர் தேவர்கள் மத்தியிலும் பிறப்பார். மனிதர்கள் மத்தியில் பிறந்தாலும் அப்படித்தான். அதற்கு காரணம் என்ன? அவர் அவ்வாழ்வில் நன்கு அறிவினை விருத்தி செய்து கொள்ள முயற்சித்திருக்கிறார். அந்த அரிய வாய்ப்பு இப்பொழுது உங்களுக்கும் கிடைத்துள்ளது. அந்த அதிஷ்டத்தினை நீங்களும் உணர வேண்டும்.

முதலில் தர்மத்தினை நன்கு கற்றுக் கொள்ளுங்கள். தர்மத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுயமாக ஆராய முயற்சி செய்யுங்கள். என்னிடம் யாரேனும் ஏதேனும் தர்மம் தொடர்பாக கேள்விகள் கேட்கும்போது நான் ‘அந்த சூத்திரத்தை ஆராய்ந்து பாருங்கள், இந்த சூத்திரத்தை ஆராய்ந்து பாருங்கள்’ என கூறுவேன். அப்போது அவர் என்ன செய்வார்? ஆம் அவர் அதனை தேடுதல் செய்ய வேண்டும். ஒருவருள் ஞானம் வளருவதை விரும்பாவிட்டால் என்ன செய்ய வேண்டும்? ஆம் ஒவ்வொரு வார்த்தைகளாக கற்றுக்கொடுக்க வேண்டும். அப்போது அவர் அறிவினால் ஆராய மாட்டார். அவர் அதனை நினைவில் வைத்திருப்பாரே தவிர அறிவு வளராது. அவருள்

ஞானம் விருத்தியடைய உதவ வேண்டுமாயின் நான் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் அந்த புனித நூலை வாசியுங்கள். இந்த போதனையை கேளுங்கள், என்று தான் கூற வேண்டும். அப்போது அவர் அதனை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அதனை கண்டிப்பாக வாசிக்க வேண்டும். அப்போதுதான் அவரது மனம் செயற்படும். அதனடிப்படையில் அவரது ஞானம் வளரும் வாய்ப்புகளும் ஏற்படும்.

### கர்மத்தின் இயல்பு

தோதெய்ய அந்தணரின் மகனிடம் புத்த பகவான் மொழிகிறார். “புண்ணியமிகு சுப, ஒருவர் ஆயுள் குறையும் செயற்பாட்டில் இருப்பாராயின் அவருக்கு ஆயுள் குறைவாகும். ஒருவர் ஆயுள் அதிகரிக்கும் செயற்பாட்டில் இருப்பாராயின், அவருடைய ஆயுள் நீளும். ஒருவர் நோய்நொடிகள் அதிகமாக ஏற்படக்கூடிய கர்மங்களைச் செய்வாராயின் அவருக்கு நோய்களே நீடித்திருக்கும். ஒருவர் நோய்நொடிகள் குறையக் காரணமாக அமையும் கர்மங்களைச் செய்வாராயின், அவர் சுகாதாரமானவராக இருப்பார். ஒருவர் உருவம் அவலட்சணமாகும் செயற்பாட்டில் இருப்பாராயின் அவருக்கு எதிர்காலத்திலும் அவலட்ணசமான தோற்றமே கிடைக்கும். ஒருவர் உருவம் அழகாகும் செயற்பாட்டில் இருப்பாராயின், அவருக்கு எதிர்காலத்திலும் அழகிய தோற்றமே கிடைக்கும். ஒருவர் செல்வாக்கு அற்ற பிறப்பிற்கான செயற்பாட்டில் ஈடுபடுவாராயின் அவர் எதிர்காலத்தில் செல்வாக்கு அற்றவராகவே இருப்பார். ஒருவர் செல்வாக்கு, ஆதிபத்தியம் தோன்றும் செயற்பாட்டில் ஈடுபடுவாராயின் அவருக்கு எதிர்காலத்தில் செல்வாக்கும் ஆதிபத்தியமும் நிறைந்த வாழ்வே கிடைக்கும். ஒருவர் ஏழையாக பிறக்க காரணமாக அமையும் கர்மங்களைச்செய்து கொண்டிருப்பாராயின் அவர் இனி வரும் பிறப்புக்களில் ஏழையாகவே பிறப்பார். ஒருவர்

செல்வந்தராக பிறக்க கூடிய செயற்பாட்டினை செய்து கொண்டிருப்பாராயின் அவர் இனி வரும் பிறப்புக்களில் செல்வந்தராகவே பிறப்பார். ஞானம் தோன்ற முடியாத செயற்பாட்டினை ஒருவர் செய்து கொண்டிருப்பாராயின் அவர் இனி வரும் பிறப்புக்களிலும் மூடனாகவே வாழ்வார். ஒருவர் ஞானம் தோன்றக் கூடிய செயற்பாட்டினை பழக்கப்படுத்தி கொண்டிருப்பாராயின் அவர் இனி வரும் பிறப்புக்களில் அறிவுடையவராவார்.

## பிரார்த்தனையினால் முடியுமா..?

அப்படியாயின் பாருங்கள் புண்ணியவர்களே, இங்கு இருப்பது பிரார்த்தனைகளா? அல்லது காரண காரிய விதியா? காரண காரிய விதிதானே. இவ்வாறான ஒப்பற்ற காரண காரிய விதியை கொண்ட தர்மம் எமக்கு இருக்கும் போது வெறுங்கொடிகளை போதி விருட்சத்தில் தொங்கவிடுவதால் ஏற்படுவதால் கிடைக்கும் பயன் என்ன? அப்படியானவரின் ஞானம் எப்போதுதான் விருத்தியடையும்? அத்தகையவர்கள் இந்த தர்மத்தை எப்போது உணர்ந்து கொள்வாரகள்? எமது நாட்டில் எமக்கு வேண்டிய நேரத்தில் தர்மத்தை கேட்கக்கூடியதாக இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது ஏன் நாம் இன்னும் இப்படி இருக்கிறோம். இந்த உத்தம தர்மம் அறிவுக்கு எட்டுவதற்கு தூக்கம், முதுகு வலி, இடுப்பு வலி, என்பன தாக்கம் செலுத்துவனவாக இருக்கலாம்.

ஆனால் தன் அகத்தே **'நான் எனது வாழ்வினை நன்மையானதாக்கிக் கொள்ள வேண்டும், நான் என்னை பாவத்தில் செலுத்தாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், நான் அனைத்து துக்கங்களிலிருந்தும் நிரந்தரமாக நீங்க வேண்டும்'** எனும் மனப்பாங்கு ஆணித்தரமாக நிலைத்திருக்குமாயின், யார் வேண்டாம் என்று சொன்னாலும் தம் வாழ்விற்கு வெளியிலகில் இருந்து எத்தனை தடைகள் வந்தாலும், அவர்

இந்த தர்மத்தில் ஈடுபடுவதை கைவிடாதிருப்பார்.

### உயர்வு தாழ்வு எனும் வேறுபாட்டிற்கான காரணம் கர்மமே

புத்த பகவான் மொழிகிறார், 'புண்ணியமிகு இளைஞனே, இந்த உயிர்கள் கர்மத்தை தமதாக்கி கொண்டுள்ளனர். கர்மத்தை தமது சொத்தாக கொண்டுள்ளனர். கர்மத்தை தமது பிறப்பிடமாக கொண்டுள்ளனர். கர்மத்தை தமது உறவினராக கொண்டுள்ளனர். கர்மத்தினை தன் புகலிடமாக கொண்டுள்ளனர். இங்கு கூறப்படும் உயர்வு தாழ்வு எனும் வேறுபாட்டிற்கு இந்த கர்மமே காரணமாகும்" என்றார். சுப எனும் அந்த இளைஞன் புத்த பகவான் கூறிய இந்த போதனையை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டான்.

### உவகை கொள்ளும் விளக்கம்

அந்த இளைஞன் இதற்கு முன்னர் அவ்வாறானதோர் விடயத்தை அறிந்திருந்தாரா? இல்லை. இதனை கேட்டவுடன் அவர் இதுதான் வாழ்வின் யதார்த்தம் என உணர்ந்தார். அப்போது சுப இளைஞன் கூறுகிறார், "பாக்கியமுள்ள பகவானே, இந்த போதனை மிகவும் சுந்தரமானது. இந்த போதனை மிகவும் அழகானது. தாங்கள் மொழிந்தருளிய இந்த தர்மம் தலைகீழாக கவிழ்ந்து கிடந்த ஒன்றை நிமிர்த்தி நேராக வைத்தது போன்றதாகும். மூடி வைக்கப்பட்டிருந்த ஒன்றை திறந்து காட்டியது போலாகும். வழி தவறிய ஒருவருக்கு சரியான வழியைக் காட்டியது போன்றாகும். இருளில் இருந்த ஒருவருக்கு தீபத்தினை ஏற்றி வைத்து உலகை பார்க்கச் செய்தது போலாகும். முழுமையாகவே இதனை தாங்கள் மொழிந்தருளினீர்கள். பரிபூரணமாகவே தாங்கள் இந்த உத்தம தர்மத்தினை மொழிந்தருளினீர்கள்' என்று கூறினார்.

**நான் மும்மணிகளை உய்த்துணர்வுடன் சரணடைகிறேன்.**

அதன் பிறகு சுப இவ்வாறாக சொல்கிறார். (ஏசாஹங் பவந்தங் கோதமங் சரணங் கச்சாமி) 'பாக்கியமுள்ள பகவானே, நான் தங்களை சரணடைகிறேன்' பாருங்கள், அவர் எவ்வாறு புத்த பகவானை சரணடைந்தார் என்று. நாமும் இவ்வாறாக சரணடையாவிட்டால், புத்த பகவானது பரந்த ஞானத்தின் மீது பக்தி கொண்டு நாமும் சரணடையாவிட்டால் எம்மால் ஒருபோதும் ஞானமுள்ள ஒரு சீடனாக வாழ்வை வெற்றிக் கொள்ள முடியாது. இவ்வாறான பக்தியுடனே சரணடைய வேண்டும். சுப இளைஞன் மேலும் கூறுகிறார், "(தம்மஞ்ச பிக்குசங்கஞ்ச) நான் இந்த உத்தம தர்மத்தையும் சரணடைகிறேன். ஆரிய மஹா சங்கத்தினரையும் சரணடைகிறேன். எனது உயிர் இருக்கும் வரை மும்மணிகளை சரணடைந்த ஒரு ஆரிய சீடனாக என்னை ஏற்றுக்கொள்வீராக" என்று வேண்டுகிறார்.

**எதிர்பாராத வெற்றிகளுக்கான காரணம்...**

பாருங்கள் புண்ணியவர்களே. இந்த சுப எவ்வாறு பௌத்தனாகினார்.? புத்த பகவான் மொழிந்த தர்மத்தை கேட்டு இதுதான் இந்த உலக உயிர்களின் உயர்வு தாழ்வு நிலைகளுக்கு காரணம் எனும் உண்மையை உணர்ந்து கொண்டார். அந்த காரணம் என்ன? ஆம் அதுதான் கர்மம். எம் அனைவருக்கும் நாம் செய்த கர்மங்களின் படிதான் கிடைக்கும். எனக்கு இதனை சொல்லும்போது ஒரு போதனை நினைவிற்கு வருகிறது.

(வணிஜ்ஜா சூத்திரம் - அங்குத்தர நிகாயம்)
ஒருவர் புத்த பகவானிடம் கேட்கிறார். ‘சிலர் வியாபாரங்கள் தொடங்கினால் அந்த வியாபாரம் அவர் எதிர்பாராத வண்ணம் முன்னேறும். அதன் காரணம் என்ன?
“அவர் தனது சன்சார பயணத்தின் போது சீலமிகுந்தவர்களை குணமுள்ளவர்களை தானத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறார். அவ்வாறு வருகை தந்த பின்னர் அவர்களுக்கு மிகவும் சுவையானவற்றை சிறந்தவற்றை நிறைந்த மனதுடன் தானமளிக்கிறார். அப்போது அந்த தானத்தை ஏற்று அதனை சாப்பிட்டவர்களும் மிகவும் சந்தோஷமடைவார்கள். அதன் விளைவினால் அவர் சன்சாரப்பயணத்தின் போது சிறிய அளவிலேனும் ஏதேனும் வியாபாரம் துவங்கினாலும் அது கண்ணெதிரே முன்னேற்றமடையும்.

## படுதோல்விகளுக்கு காரணம்.

அப்படியாயின் அந்த வியாபாரிகள் இப்போது அதனை அறிந்திராவிடினும் தம் சன்சார பயணத்தின் போது மிகவும் உயர்ந்தளவிலான வகையில் ஏனையோருக்கு தானங்கள் அளித்திருக்கிறார்கள். மீண்டும் அவர் புத்த பகவானிடம் வினவுகிறார், ‘பகவானே, சிலர் வியாபாரங்களை செய்கிறார்கள் ஆனால் பெரிய முன்னேற்றங்கள் இல்லை. வாழ்வதற்கு மாத்திரம் போதுமானதாக இருக்கும். அதற்கு காரணம் என்ன? ‘அவர் தனது சன்சார பயணத்தின் போது சீலமிகுந்தவர்களை குணமுள்ளவர்களை தானத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறார். அவ்வாறு வருகை தந்த பின்னர் அவர்களுக்கு அரைகுறையாக தானமளிக்கிறார். அன்னத்தினால் பானங்களினால் சுவையினால் தரத்தினால் குறைந்தளவிலான வகையில் தானமளிப்பார். ஆகையால் அவர் வியாபாரத்தில் பெரிய முன்னேற்றங்களை காணவும் மாட்டார். அதேபோல் பின்னடையவும் மாட்டார்.

சிலர் தனது வீடுவாசல்களை அடகு வைத்து கடன் வாங்குகிறார்கள். கனவு மாளிகைகள் கட்டிக்கொள்கிறார்கள். இலட்சக்கணக்கான பணத்தை முதலீடு செய்து வியாபாரங்களை துவங்குவார்கள். ஆனால் ஆரம்பித்த இடத்திலேயே அது முடிவடைந்துவிடும். இருந்த கொஞ்சமும் இல்லாமல் போய்விடும். இதற்கு காரணம் என்ன?'

'அவர் தனது சன்சார பயணத்தின் போது சீலமிகுந்தவர்களை குணமுள்ளவர்களை தானத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறார். "நான் இந்த தினத்தில் உங்களுக்கு தானமளிக்கிறேன், அன்று நீங்கள் வரவேண்டும்" என்று கூறுகிறார். அந்த சீலமிகுந்த, குணம் மிகுந்தவர்களும் இன்று எமக்கு அவர் வீட்டில் தானம் கிடைக்கும் என எதிர்பார்த்து கொண்டிருப்பார்கள். ஆனால் தானம் கிடைக்காது. எனவே அவர்கள் தம்மிடம் இருக்கும் ஏதேனும் உட்கொண்டு அந்த பொழுதை கழிப்பார்கள். அந்த கர்மம் இவர் வியாபாரம் துவங்கும் போது பலனளிக்க ஆரம்பிக்கும். அவருடைய வியாபாரங்கள் ஒருபோதும் முன்னேற்றமடையாது.

இவற்றையெல்லாம் கவனித்து பார்க்கும் போது நாம் எவ்வளவு நேர்மையானவர்களாக இருக்க வேண்டும்? என்பதனை உணர முடிகின்றதல்லவா? ஆகையால் இதனை நன்கு நினைவில் வைத்து கொள்ளுங்கள். எமது வாழ்விற்கு தீய முறையில் தாக்கம் செலுத்துபவை, நன்மையை விளைவிப்பவை என்பன நாம் வாழும் இந்த வாழ்விலே நாமே கட்டியெழுப்பி கொள்பவை. எனவே, இந்த வாழ்விலேயே சுகம் நிறைந்த ஞானத்தை தோற்றுவித்துக் கொள்வதற்கு உபகாரமான விடயங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கும் இந்த வாழ்வை நிறைவானதாக்கி கொள்ளவும், இந்த புத்த சாசனத்திலேயே ஞானத்தை விருத்தி செய்து கொண்டு பிரக்ஞை மிகுந்த சீடனாகும் அதிஷ்டமும் கிடைக்க வேண்டும்!

**நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மா சம்புத்தஸ்ஸ**

அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மா சம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரங்கள்!

# 03.

# கம்ம சூத்திரம்.

எமது பரம குருவான பாக்கியமுள்ள புத்த பகவான் உன்னத பரிநிர்வாணத்தினை எய்தி இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கும் மேலாகிறது. பகவான் உன்னத பரிநிர்வாணத்தினை எய்துவதற்கு முன்னர் ஆனந்த தேரரிடம் பின்வருமாறு மொழிந்தருளினார். "புண்ணியமிகு ஆனந்த, உங்களுக்கு இவ்வாறு தோன்றலாம். 'ததாகதர் பரிநிர்வாணம் அடைந்த பின்னர் எமக்கு சரணம் இல்லை. புகலிடம் இல்லை' என்று. அவ்வாறு ஒருபோதும் நினைக்க வேண்டாம்.! என்னால் இதுவரை காலமும் போதிக்கப்பட்ட தர்மமும் ஒழுக்கமுமே எனது மறைவிற்கு பிறகு உங்களது குருவாக ஏற்க வேண்டும்" என்று. புத்த பகவானது உடம்பு பரிநிர்வாணத்தின் பின் மறைந்தாலும் பகவானது தர்மம் எனும் உடல் இன்னும் உயிரோட்டமாகவே நிலைத்திருக்கிறது. ஆகையால் பகவானது தர்ம காயத்தினை உன்னத தர்மத்தின் வழியே காண முடியும். புத்த பகவான் என்பவர் யார்? என்பதனை பகவான் மொழிந்த தர்மத்தினை அறிந்துகொள்வதின் மூலமே நாம் உணர முடியும். வெறும் கண்களினால் மாத்திரம் புத்த பகவானை எம்மால் இனங்காண முடியாது.

நாம் புத்த பகவான் மொழிந்த தர்மத்தினை செவிமடுத்த பின்னர் வெறும் கண்ணால் மாத்திரம் இந்த உலகினை காணாது தர்மத்தினூடாக இந்த உலகினை காண பழகிக்கொள்கிறோம். பொதுவாக நாம் இவ் உலகத்தினோரை கண்களால் கண்டே இனங்கண்டுகொள்கிறோம். ஆனால் புத்த பகவானை நாம் கண்களினால் காண்பதில்லை. மாறாக பகவான் மொழிந்த தர்மத்தின் வழியே காண முயற்சிக்க வேண்டும்.

**தர்மத்தினை காணுவதன் மூலம் நாம் புத்த பகவானை காண முடியும்.**

புத்த பகவான் தரித்திருந்த காலத்தில் 'வக்கலீ' எனும் பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். அவர் புத்த பகவான் மீது கொண்ட அளவிலாத அன்பினால் பகவானை தினமும் தம் கண்களினால் காண வேண்டும் எனும் ஒரே நோக்கத்தில் பிக்குவாக துறவு பூண்டார். இவ்வாறு துறவு பூண்ட இந்த வக்கலீ தேரர் சிறிது காலத்தின் பின்னர் மிகவும் நோய்வாய்ப்பட்டார். தனது இறுதி காலத்தில் பகவானை காண வேண்டும் எனும் அவா அவருள் தோன்றவே அவர், 'நான் நன்றாக நோய்வாய்ப்பட்டுள்ளேன். பகவானை தரிசிப்பதற்கு எனக்கு மிகவும் ஆசையாக உள்ளது. ஆனால் என்னால் வர முடியவில்லை. என் உடல் மிகவும் பலவீனமாக இருக்கிறது' என்று, பகவானுக்கு செய்தியனுப்பினார். புத்த பகவான் மகா கருணையுடன் வக்கலீ தேரர் இருக்குமிடத்திற்கு வருகைதந்தார். தூரத்தே தன்னை நோக்கிவரும் சுந்தர குணங்கள் படைத்த பகவானை கண்டதும் இதுவரை சயன நிலையில் இருந்த அந்த தேரர் எழுந்திருக்க முயற்சி செய்தார்.

புத்த பகவான் வக்கலீ தேரரது அருகே வந்து "எழுந்திருக்க முயற்சி செய்ய வேண்டாம். இங்கு ஆசனம் இருக்கிறது. நான் அதிலே அமர்ந்துக்கொள்கிறேன்" என்று அருகே

இருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

“புண்ணியமிகு வக்கலீ, இப்போது உங்களது நோயின் நிலை என்ன?”
“பகவானே, இந்த நோயின் நிலை அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை”
“மனதில் ஏதேனும் நினைத்து வருந்திக் கொண்டிருக்கிறீர்களா,?”
“பகவானே, மனதில் பெரும் சுமை ஒன்று இருக்கிறது. அதனால் என் மனதில் பெரும் கவலை குடிகொண்டிருக்கிறது”
“புண்ணியமிகு வக்கலீ, அது என்ன கவலை? என்ன சுமை?”
“பாக்கியமுள்ள பகவானே, இந்த கொடிய நோயின் காரணமாக தங்களை காண்பதற்காக என்னால் வர முடியவில்லையே! அதுவே எனது பெரும் கவலையாகும்”

அதனை செவிமடுத்த புத்த பகவான் பின்வருமாறு மொழிந்தருளினார்.

“புண்ணியமிகு வக்கலீ, அழுகிப்போகும் இயல்பிலான அறுவறுக்கத்தக்கவையின் உறைவிடமான இந்த உடலை பார்ப்பதால் உங்களுக்கு என்ன பயன் கிடைக்கும்? **(யோ வக்கலீ, தம்மங் பஸ்ஸதீ, சோ மங் பஸ்ஸதி)** புண்ணியமிகு வக்கலீ, எவராயினும் ஒருவர் தர்மத்தினை காண்பாராயின் அவர் என்னையே காண்பார். என்னை காண்பாராயின் அவர் தர்மத்தினையே காண்கிறார்” என்று.

### இன்றும் எம்மால் புத்த பகவானை காண முடியும்

புண்ணியமிக்கவர்களே, புத்த பகவான் உன்னத பரிநிர்வாணத்தினை எய்தியிருந்தாலும் இன்றும் புத்த பகவானை தர்மத்தினூடாக நாம் காண முடியும். தர்மத்தினால் புத்த பகவானை காணும் வண்ணம் எமது வாழ்வினை நாம்

நடாத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.
தர்மத்தினை காண்பதற்கு முக்கியமானதொரு திறமை எம்மிடம் இருக்க வேண்டும். அதுவே யோனிசோ மனசிகாரம் எனப்படுகிறது. அதாவது தர்மத்தினை செவிமடுத்து, செவிமடுத்த அந்த தர்மத்தினை அறிவினால் ஆராயும் திறனாகும். இந்த யோனிசோ மனசிகாரம் இல்லாவிடில் மூவகை திரிபிடகங்களையே மனப்பாடம் செய்துகொண்டிருந்தாலும் அவர் தர்மத்தினை காண்பவரல்ல. தர்மத்தினை தன் வாழ்வினுள் காண வேண்டுமாயின் அவர் செவிமடுத்துக்கொள்ளும் அந்த தர்மத்தினை அறிவால் ஆராய வேண்டும். அது ஒரு அபூர்வமான திறமையாகும்.

## யோனிசோ மனசிகாரம்

ஒரு கோடை காலத்திலே பாக்கியமுள்ள புத்த பகவான் சூகரகத எனும் கற் குகையில் வசித்திருந்தார். சாரிபுத்த மகா தேரர் அச்சமயம் அரஹத் நிலையை எய்தி இருக்கவில்லை. அவர் பகவானுக்காக சாமரம் வீசிக்கொண்டிருந்தார். அப்போது அந்த குகைக்கு தீகநக எனும் பெயர் கொண்ட ஒரு தவசி வந்தார். வந்து புத்த பகவானிடம் அவர் சில கேள்விகளைக் கேட்டார். புத்த பகவான் அவருக்கு அனுபவிப்பு* தொடர்பாக ஒரு போதனையை போதித்தார். அறுவகை புலன்களுக்கு தேவையான உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வு, எண்ணங்கள் என்பன கிடைப்பதால் ஏற்படும் சுகம், துக்கம், சமனிலை மனம் எனும் உபேக்கா நிலை எனும் அனுபவிப்புகள் தோன்றும். இவை தொடர்பாகவே பகவான் அந்த தீகநக எனும் தவசிக்கு போதித்துக்கொண்டிருந்தார்.

அந்த போதனையை தீகநக செவிமடுப்பதைப்போன்றே

*.சுகம், துக்கம், மற்றும் சுக துக்கம் எனும் உணர்ச்சிகள் அற்ற சமனிலை மனம் எனும் பிரதானமாக மூவகை அனுபவிப்புகள்.

சாமரம் வீசிக்கொண்டிருந்த மகா சாரிபுத்த தேரரும் மிகவும் உண்ணிப்பாக செவிமடுத்துக்கொண்டிருந்தார். போதனையின் முடிவின்போது தீகநக உன்னத சோவான்* நிலையை அடைந்தார். புத்த பகவான் அந்த போதனையை தீகநக எனும் தவசிக்கே போதித்தார். அதனை செவிமடுத்த சாரிபுத்த தேரர் புத்த சாசனத்தின் உயரிய நிலையான அரஹத்* நிலையை அடைந்தார். ஒரே போதனையை செவிமடுத்த இருவர் இருவகையான ஞானப்பேறுகளை பெறுவதற்கு காரணம் என்ன? அதுவே 'யோனிசோ மனசிகாரம்' எனும் அறிவினால் ஆராயும் திறனாகும்.

அறிவினால் ஆராயும் திறன் எனப்படும் இந்த யோனிசோ மனசிகாரம் எம்முள் நன்கு விருத்தியடைந்திருக்கும் போது எமக்கு புத்த பகவானது தர்மத்தினை செவிமடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த தர்மம் வெறும் ஞாபகமாக மாத்திரம் இருக்காது. அந்த தர்மம் எமது வாழ்வினை உய்த்துணர்வதற்கு ஏற்ற வகையில் எம் உள்ளே செயற்படும். தர்மத்தினை கேட்கும் சாதாரண ஒருவருக்கு அது வெறும் ஞாபகமாகவே இருக்கும். ஒரு கிளியை போல் நன்கு தர்மத்தினை ஞாபகம் வைத்திருந்து போதிப்பவராக அவர் இருப்பாரேயன்றி அவர் தர்மத்தினை தன் அகத்தே கண்டவரல்ல. ஆனால் செவிமடுத்த அந்த தர்மத்தினை அறிவினால் ஆராயும் ஒருவருக்கு அந்த தர்மத்தினை தன் வாழ்வினுள் காண முடியும்.

புண்ணியவர்களே, இந்த யோனிசோ மனசிகாரம் எனும் ஆச்சரியமிகுந்த திறன் அவரவர் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. புத்த பகவானிடத்தில் துறவு பூண்ட அனைவருமே அரஹத் நிலையை அடைந்தனரா? இல்லை.

---

*. ஞானப்பேறுகள் நான்கு வகைப்படும். பத விளக்க பகுதியை காண்க.

மும்மணிகளை சரணடைந்த அனைவரும் ஞானப்பேற்று நிலைகளை அடைந்தனரா? இல்லை. அறிவினால் ஆராயும் திறமை கொண்டோர்கள் மாத்திரமே பகவானது தர்மத்தினை உய்த்துணர்ந்து ஞானப்பேற்று நிலைகளை அடைந்தனர்.

புண்ணியவர்களே, யோனிசோ மனசிகாரம் (அறிவினால் ஆராயும் திறன்) எனும் அற்புத திறமை எம்முள் இருக்கின்றதா என நாம் முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வர முடியாது. நாம் செய்யவேண்டியதெல்லாம் செவிமடுக்கும் தர்மத்தினை அறிவினால் ஆராய்வதாகும். அப்போது எம்முள் அறிவினால் ஆராயும் திறமை இருக்கிறதா இல்லையா என்பதனை நாமே உணர்ந்துக் கொள்ள முடியும். மனித வாழ்வினை பரிபூரணமாக்கிக் கொள்ள வேண்டுமாயின் புத்த பகவானது தர்ம போதனைகளை செவிமடுத்த பின்னர் அந்த தர்மத்தினை அறிவினால் ஆராய வேண்டும்.

நாம் மனித உலகில் பிறக்கும் போதே அறிவினால் ஆராயும் திறமை எனும் அதிஷ்டத்தினை கொண்டே பிறக்கிறோம். எனவே நாம் அந்த அதிஷ்டத்தினை அழியாது நிலைக்கச்செய்து கொள்ள வேண்டும். புத்த பகவான் ஒவ்வொரு வகையாக மனிதர்களை வகைப்படுத்தியுள்ளார். நாம் அனைவருமே இங்கு மனிதர்களாகவே இருந்தாலும் நாம் மரணத்தினை தழுவுவதோடு எமது வாழ்க்கை கதை முழுமையாகவே மாற்றமடைந்துவிடும்.

**நால்வகையானோர்...**

புத்த பகவான் பின்வருமாறு போதிக்கின்றார். “சிலர் மரணித்த பின்னர் **(கப்பமேகே உப்பஜ்ஜந்தி)** மீண்டும் கருவறையில் கருவுறுகின்றனர். **(நிரயங் பாபகம்மினோ)** பாவம் செய்தவர்கள் மரணித்த பின்னர் நரகத்தில் பிறக்கின்றனர். **(சக்கங்**

**சுக்கதிநொயன்தி)** புண்ணியம் செய்தவர்கள் சுவர்க்கத்தில் பிறக்கின்றனர். **(பரினிப்பன்தி அனாசவா)** கிலேச மற்றவர்கள் உன்னத பரிநிர்வாணத்தினை அடைகின்றனர்" என்று.

இந்த நால்வகை மனிதர்கள் மரணத்தின் பின்னர் ஒவ்வொரு வகையாக பிரிந்து செல்கின்றனர். அப்படியாயின் எமது அடுத்த பிறவியின் தலைவிதியை எம்மால் இப்பிறவியில் மாற்றியமைக்க கூடிய மிகவும் அற்புதமான திறமையே இந்த யோசிசோ மனசிகாரம் எனும் அறிவினால் ஆராயும் திறனாகும். அறிவினால் ஆராயும் திறமை இல்லாவிடில் எமது வாழ்விற்கு சன்சார (பிறவிப்பெருங்கடலின்) பழக்க வழக்கங்களே பாதிப்பு செலுத்துவதாக அமையும். சிலவேளை நாம் எமது சன்சாரம் முழுவதும் பாவத்தினையே விரும்பியவர்களாக இருந்திருக்கலாம். எனவே இந்த விருப்பம் இவ் வாழ்விலும் எமக்கு தாக்கம் செலுத்துவதாக அமையக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம். நன்மை எது? தீமை எது? குசலம் எது? அகுசலம் எது? எதனை பழக்கப்படுத்தினால் அது இருவுலக வாழ்விற்கு நன்மை அளிக்கும்? இரு உலகங்களுக்கு துன்பத்தினை விளைவிக்கும் பாவங்கள் எவை? எவற்றை தீமை என கருதி துறக்க வேண்டும்? என்பவற்றை ஒருவர் அறிவினால் ஆராயாவிடில் அவற்றை கூறும் பகவானது தர்மத்தினை அறிவினால் ஆராயாவிடில் அவரது வாழ்வில் பாவமே பாதிப்பு செலுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

### நீரினுள் மூழ்கியோர்.

புத்த பகவான் தமது ஒரு போதனையில் இது தொடர்பான ஒரு உவமையை மொழிந்துள்ளார். ஒரு பாரிய நீர்ப்பிரவாகத்தில் விழுந்த சிலர் இருக்கின்றனர். அவர்கள் நீரினுள் விழுந்ததேதான், நீரினுள் வெளி வருவதற்கு எவ்வித

முயற்சியும் எடுக்க மாட்டார்கள். அதேபோல்தான் பாவமிகுந்த நண்பர்களுடைய பழக்கத்தினால் சிலர் பாவத்திற்கு அடிபணிகின்றனர். பாவத்திற்கு பணிந்த அவர்களது உள்ளம் மென்மேலும் பாவத்தினுள்ளே அமிழ்ந்துவிடும். அவர்களால் பாவத்திலிருந்து மேலே வர முடியாது. அதற்கு காரணம் அந்த பாவமிகுந்த நண்பரோடு ஏற்பட்ட பாவ உறவின் துர் விளைவுகளாகும். அவர்கள் பாவத்தினுள்ளே மென்மேலும் அமிழ்ந்துவிடுவர். அகுசலத்தின் பக்கமே சாய்ந்து கொள்வர். குசலத்தினை நோக்கி அவர்களால் பயணிக்க முடியாது. இன்றைய உலகின் பெரும்பாலான மக்கள் இவ் வகையை சார்ந்தோர்களாகவே இருக்கின்றனர்.

வேறு சிலர் இருக்கின்றனர். அவர்களும் ஒரு பாரிய நீர்ப்பிரவாகத்தில் விழுந்து கிடக்கின்றனர். இவ்வாறு விழுந்தவர்கள் நீரின் மேற்பரப்பிற்கு வந்து சில கண நேரம் இருந்து மீணடும் நீரினுள்ளே அமிழ்ந்து விடுகின்றனர். அதேபோல்தான சிலர் சத்புருஷ நண்பர்களது (தர்மத்தினை பின்பற்ற உதவுபவர்) சகவாசம் இருக்கும் காலத்தில் மாத்திரம்தான் ஒழுக்கத்துடன் வாழ்வார்கள். பஞ்ச மகா பாதகங்களில் இருந்து தவிர்த்து வாழ்வார்கள். தர்மத்தினை செவிமடுப்பார்கள். தர்மத்தின் படி வாழ முயற்சிப்பார்கள். இவர்கள் தர்மத்தின் படி வாழ முயற்சி செய்தாலும். அவர்களுள் தர்மம் தொடர்பானதொரு உய்த்துணர்வு இருக்காது. ஒரு சிறு விடயத்தினை முன்னிட்டு எல்லாவற்றையும் கைவிடுவார்கள். நீரிலிருந்து ஒரு தடவை மேலே எழுவார்கள். மீண்டும் நீரினுள் அமிழ்ந்துவிடுவார்கள். அப்படியானவர்களும் இருக்கிறார்கள்.

வேறு சிலர் இருக்கின்றனர். அவர்கள் நீரின் மேற்பரப்பிற்கு வருவார்கள். மீண்டும் நீரினுள் அமிழமாட்டார்கள். சுற்றும் முற்றும் பார்க்கவும் மாட்டார்கள். அப்படியே

இருந்த இடத்திலேயே இருப்பார்கள். அதேபோன்று சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தர்மத்தினை செவிமடுப்பார்கள். சீலத்துடன் (ஒழுக்கத்துடன்) பஞ்ச மகா பாதகங்களை தவிர்த்து வாழ்வார்கள். தியானம் செய்வார்கள். ஆனால் விசேடமானதொரு முன்னேற்றமும் இல்லை. பின்னேற்றமும் இல்லை. இவ்வாறானவர்களும் எம் மத்தியில் வாழ்கிறார்கள்.

### தீவை காண்பவர்கள்.

இன்னும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் நீரிலிருந்து மேலே வருவார்கள். வந்து சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். சுற்றும் முற்றும் பார்க்கும் ஒருவருக்குத்தான் சுற்றுச்சூழலை கண்டுகொள்ள முடியும். இவ்வாறு நீரிற்கு மேலே வந்த மனிதர்கள் சுற்றும் முற்றும் பார்க்கும்போது ஒரு தீவை காண்கிறார்கள். அவர்களே சோதாபண்ண நிலையை (ஞானப்பேற்றின் முதலாவது) அடைந்தவராவர்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நீரிலிருந்து மேலே வருவார்கள். வந்து சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். தீவை காண்பார்கள். கண்ட பிறகு தனக்கு அபயம் அளிக்கும் அந்த தீவை நோக்கி நீந்தி செல்வார்கள். அவர்களே இரண்டாவது ஞானப்பேறான சகதாகாமீ நிலையை அடைந்தவர்களாவர். இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நீரிலிருந்து மேலே வருவார்கள். வந்து சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். தீவை காண்பார்கள். கண்ட பிற்கு தனக்கு அபயம் அளிக்கும் தீவின் அருகிற்கே நீந்தி செல்வார்கள். அவர்களே மூன்றாவது ஞானப்பேறான அநாகாமீ நிலையை அடைந்தவர்களாவர்.

### தீவை அடைபவர்கள்.

நான்காவது வகையானவர்கள் நீரிலிருந்து மேலே வருவார்கள்.

வந்து சுற்றும் முற்றும் பார்ப்பார்கள். தீவை காண்பார்கள். கண்ட பிற்கு தனக்கு அபயம் அளிக்கும் அந்த தீவை நோக்கி நீந்தி செல்வார்கள். அதன் விளைவாக தீவை அடைந்து அந்த தீவிலேயே சுகமாக காலம் கழிப்பார்கள். அவர்களே உயர்ந்த ஞானப்பேறான அரஹத் நிலையை அடைந்தவர்களாவர். இங்கு கூறப்பட்ட மனிதர்களுள் நீங்கள் எந்நிலையில் இருக்கிறீர்கள் என்பதனை நீங்களே உணர்ந்துக் கொள்ளலாம். தனக்கான சாட்சி தானேதான். அங்கு தர்மமே நீதிபதியாகும். இந்த போதனையை துவங்கும் போதே புத்த பகவான் போதிக்கிறார். “புண்ணியமிகு பிக்குகளே, நான் உங்களுக்கு பழைய கர்மங்கள் தொடர்பாக போதிக்கிறேன். புதிய கர்மங்கள் தொடர்பாக போதிக்கிறேன். அதேபோல் கர்மத்தின் அழிவினையும் அதனை அழிக்கும் வழியையும் போதிக்கிறேன்” என்று. இந்த போதனையில் பகவான் இவ் அனைத்தும் தொடர்பாக போதித்துள்ளார்.

**பழைய கர்மங்கள் ஆறு**

புத்த பகவான் முதலாவதாக பழைய கர்மங்கள் தொடர்பாக மொழிந்தார். **(சக்குங் பிக்கவே, புராணங் கம்மங்)** புண்ணியமிகு பிக்குகளே, கண் ஒரு புராதன கர்மமாகும். **(அபிசங்கதங்)** விசேடமாக ஒழுங்கமைந்ததாகும். **(அபிசங்சேதயிதங்)** சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு தோன்றியதாகும். **(வேதனீயங் தட்டப்பங்)** அனுபவிப்பதனால் அதன் இயல்பினைக் காண வேண்டியதாகும். இதுவே புராதன கர்மமாகும். அப்படியாயின் எமக்கு கிடைத்திருக்கும் இந்த கண் புராதன கர்மமாகும். **(சோதங் புராணங் கம்மங்)** காது புராதன கர்மமாகும். **(காணங் புராணங் கம்மங்)** மூக்கு புராதன கர்மமாகும். **(ஜிவ்ஹா புராணங் கம்மங்)** நாக்கு புராதன கர்மமாகும். **(காயோ புராணங் கம்மங்)** உடல் ஒரு புராதன கர்மமாகும்

**(மனோ புராணங் கம்மங்)** மனம் ஒரு புராதன கர்மமாகும்.

இந்த ஆறும் எம்மிடம் இருக்கிறதா? இல்லையா? எம்மிடம் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறும் இருக்கின்றன. நாம் பிறப்பு என்று கூறுவது, இவ் ஆறு புலன்களின் தோற்றத்திற்கே. இவ் ஆறு புலன்களும் கிடைப்பதற்கு காரணம் என்ன? பிறப்பு. பிறப்பு எனும் காரணத்தினாலேயே ஆறு புலன்கள் எமக்கு கிடைத்தன. அப்படியாயின் இந்த பிறப்பிற்கு காரணம் என்ன? பவம். **பவம் என்றால் என்ன? விளைவு தரும் கர்மங்களாகும்.** விளைவு தரக்கூடிய கர்மங்கள் இருப்பதாலேயே நாம் பிறக்கிறோம். நாம் செய்துகொண்ட கர்மங்களின் விளைவுகளினாலேயே நாம் முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளோம் என்றால் அது மிகையல்ல. நாம் கர்ம விளைவுகள் இருப்பதனாலேயே தோன்றியுள்ளோம். இந்த வாழ்க்கையில் எமக்கு மனித கண், காது, நாசி, நாவு, உடல், மனம், என்பன இருக்கின்றன. எமது கண் இவ்வாறாக தோற்றம் பெறுவதற்கு நாம் முன்னர் சிந்தனை செய்த விதமே தாக்கம் செலுத்தியுள்ளது. இந்த காதுகள், நாசி, நாவு, என்பன இவ்வாறாக தோற்றம் பெறுவதற்கு நாம் முன்னர் சிந்தனையை அடிப்படையாக கொண்டு செய்தவையே காரணமாகின.

### வேறுபாட்டிற்கான காரணம்

நாம் இங்கிருப்பவர்களையே எடுத்துக்கொண்டோமேயானால் இங்கிருப்போர்களது பார்வையின் அளவின் வேறுபாடுகள் இருக்கின்றன. கேட்கும் திறன், நுகர்தல், சுவைத்தல், என்பன வேறுபாடுடையவை. நாம் அனைவரும் மனிதர்களாக இருந்தாலும் நாம் ஒருவருக்கொருவர் வேறுபாடுகள் உடையவர்களாகவே இருக்கிறோம். எமது மனங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்டவையாகும். இந்த

வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டே திறமைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. சிலர் தம் மனங்களை சீக்கிரமாகவே விருத்தி செய்துகொள்வார்கள். அவர்களது மனம் விரைவாக ஒன்றிணையும். சமாதியடையும். ஆனால் சிலருக்கு அப்படியில்ல. கர்மத்தினை அறியாதவர்கள் இவற்றை நினைத்து துக்கமடைவார்கள்.

## அதிஷ்டம்

நாம் ஒரு காணியை விலைகொடுத்து வாங்குகின்றோம் என நினையுங்கள். அந்த நிலத்தின் நில வளம், நீர் என்பன தத்தமது அதிஷ்டத்தின் படியே கிடைக்கும். சில நிலங்கள் இருக்கின்றன எவ்வளவு தோண்டினாலும் நீரே கிடைக்காது. சில நிலங்களை சிறிதளவு தோண்டும் போதே நீர் கிடைத்துவிடும். சில நிலங்களை தோண்டவே தேவையில்லை. நீர் மேலோட்டமாகவே ஓடிக்கொண்டிருக்கும். இப்படிப்பட்டதே எம் ஒவ்வொருவது வாழ்க்கைகளும். சிலருக்கு நல்ல அறிவு கிடைக்கும். சிலருக்கு அப்படியல்ல.

ஆனால் எம் அனைவருக்கும் இதில் ஒரு பொதுவான நியதி இருக்கிறது. **(வேதனீயங் தட்டப்பங்)** அதாவது அனுபவித்து அனுபவித்தே இதனை காண வேண்டும். உணர வேண்டும். நாம் மனித உலகில் பிறந்த பின் உடலினாலும் மனதினாலும் சுகம் அனுபவிக்கிறோம். உடலினாலும் மனதினாலும் துக்கம் அனுபவிக்கிறோம். மனிதர்கள் மத்தியில் இந்த சுக அனுபவிப்பின் வேறுபாடுகள் இல்லையா? உடலினாலும் மனதினாலும் அனுபவிக்கும் துக்கங்களில் வேறுபாடுகள் இல்லையா? எப்பேர்ப்பட்ட வேறுபாடுகளாக இருந்தாலும் அவற்றினை அனுபவிப்பினாலேயே அறிந்துகொள்ள முடியும். நீண்ட காலமாக நாம் இந்த பிறவிப்பயணத்தில் பிறந்துகொண்டும் மடிந்துகொண்டும் செல்வதற்கு காரணம் நாம் செய்துகொள்ளும் கர்மங்களே. அதேபோல் நாம் இன்னும்

இன்னும் புதிய கர்மங்களையும் சேகரித்துக்கொள்கிறோம். ஆதி புலப்படாத இந்த பிறவிப்பயணத்தில் பயணிக்கும் நாம் இதுவரை இரு விடயங்களை அறிந்திருக்கவில்லை. அவை முறையே கர்மத்தின் அழிவும் கர்ம அழிவிற்கான மார்க்கமுமாகும். எமக்கு துக்கம் ஏற்பட்டால் நாம் அதனை கர்மம் என நினைக்கிறோம். அந்த துக்கம் முடிந்துவிடும்போது கர்மமும் முடிந்துவிடும் என்றே நினைக்கிறோம். ஆனால் இந்த கர்மம் தொடர்பாகவோ அல்லது இந்த கர்மம் பலனளிக்கும் விதம் தொடர்பாகவோ எம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை. எம் யாராலும் இந்த கர்மங்கள் எவ்வாறு எம்மை பின்தொடர்ந்து வருகிறது என்பதனை கூற முடியாது.

புத்த பகவான் போதித்த போதனைகளின் மூலமே நாம் இந்த கண், காது, நாசி, நாவு, உடல், மனம் என்பன பழைய கர்மங்களின் விளைவுகள் என்பதனை அறிந்துகொண்டோம். பழைய கர்மங்களினால் நாம் உருவாகியிருக்கின்றோம் என்றால் நாம் முன்னர் செய்த கர்மங்களின் தாக்கம் இந்த கண், காது, நாசி, நாவு, உடல் மனம் எனும் பழைய கர்மங்களுக்கு தாக்கம் செலுத்த முடியுமா? முடியாதா? அது அப்படியாயின் நாம் முற்பிறவிகளில் செய்த நல்வினைகளும் எமது இந்த பிறப்பிற்கு தாக்கம் செலுத்தும். நாம் செய்த தீயனவும் தாக்கம் செலுத்தும்.

நாம் வாழும் இந்த மனித வாழ்க்கை தொடர்பாக உங்களுக்கு புதினமாக ஒன்றும் சொல்ல அவசியமில்லை. எம் அனைவருக்குமே அது தெரியும். கடந்து வந்த இந்த வாழ்க்கையில் நீங்கள் செய்த அனைத்துமே நல்ல விடயங்களா? உடலினால் நீங்கள் தவறு செய்யவில்லையா? மனதினால் நீங்கள் பிழை செய்ததில்லையா? நாம் அனைவரும் செய்திருக்கிறோம். இந்த மனித வாழ்வினுள் நாம் செய்த நன்மையையும் தீமையையும் எம்மால் காண

முடியும். இந்த பழைய கர்மங்களை தோற்றுவித்து கொடுத்த முற்பிறவிகளில் நாம் செய்த கர்மங்கள் எத்தகையன என்று யூகிப்பதற்கு கூட எம்மால் முடியுமா?

**திருப்தி அடைய முடியுமா?**

இந்த வாழ்வினுள் எமக்கு இரு கண்கள் கிடைத்துள்ளன. யாரிடமாவது கேட்டால் உங்களுடைய இந்த கண்ணை பற்றி நீங்கள் திருப்தி அடைகின்றீர்களா? என்று. இல்லை என்பார்கள். காதுகள், உடல் இந்த மனம் தொடர்பாக நீங்கள் திருப்தி அடைகிறீர்களா என்று கேட்டால் இல்லை என்றே சொல்வார்கள். எம் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ள இவை தொடர்பாக நாம் திருப்தி கொண்டவர்களல்ல. நாம் இந்த மனதினால் நினைக்கும் விடயங்களை, எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புக்களை இந்த கண்களினால் பூர்த்தி செய்ய முடியாது. எமது தேவைகளை முழுமையாக இந்த காதுகளினால் பூர்த்தி செய்ய முடியாது. இந்த நாசிக்கு முடியாது. நாவிற்கு முடியாது. இந்த உடலிற்கு முடியாது. இந்த மனதிற்கும் முடியாது. அந்தளவிற்கு எமது எதிர்பார்ப்புக்களும் தேவைகளும் மிக விசாலமானவை. அதுவே தண்ஹா எனும் பேராசையுமாகும்.

இதன் காரணமாகவே நாம் அனைவரும் கண்ணினால் உருவங்களை காண்பதற்கு ஆவலாய் உள்ளோம். காதினால் சப்தங்களை கேட்கும் எதிர்பார்ப்புடன் இருக்கிறோம். நாசியினால் மணங்களை நுகருவதற்கு ஆவலாய் இருக்கிறோம். நாவினால் பற்பல சுவைகளை அனுபவிப்பதற்கு ஆவலாய் இருக்கிறோம். உடலினால் உடல் உணர்வுகளை பெறுவதற்கு ஆவலாய் இருக்கிறோம். மனதினால் இவ் அனைத்து எதிர்பார்ப்புக்களுடனுமே இருக்கிறோம். பலதரப்பட்ட எதிர்பார்ப்புக்களினுள் நாம்

எம்மையே சிறைப்படுத்தி வைத்திருக்கிறோம் .

புத்த பகவான், தர்ம உய்த்துணர்வு இல்லாத ஒருவருடைய வாழ்வு அறியாமை எனும் காரிருளில் மூழ்கி இருப்பதாகவே மொழிந்துள்ளார். எவ்வளவு ஒளி இருந்தாலும் அந்த ஒளி இந்த உலகில் உள்ள விடயங்களை காண்பிக்கவே உதவும். ஆனால் எமது வாழ்வின் யதார்த்தத்தினை உணர்ந்து கொள்வதற்கு தேவையான ஒளியினை சூரியன் சந்திரன் மூலம் பெற முடியுமா? முடியாது. அதனை புத்த பகவானது தர்மத்தினாலேயே செய்ய முடியும். வேறு எதனாலும் அதனை செய்ய முடியாது. தர்மம் இல்லாத வாழ்வினை உடையவர் அழகானவராக, செல்வாக்கு மிகுந்தவராக, செல்வந்தவராக, கற்றவராக புற உலகிற்கு தெரிந்தாலும் அவரது அகவாழ்வு இருள் நிறைந்ததாகும். நாம் புத்த பகவானது தர்மத்தினை கற்கும் போது பகவான் ஏன் இந்த தர்மத்தினை மொழிந்தார் எனும் உண்மையான நோக்கத்தினை உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதாவது அனைத்து துன்பங்களில் இருந்து தன்னை நீக்கிக்கொள்ள வேண்டும் எனும் உயர் நோக்கத்தினை நம்முள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் கண்களினால் உருவங்களை காணும் போது இந்த கண்கள் பழைய கர்மங்கள் என்பதனை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் . காதுகளினால் சப்தங்களை கேட்கும்போது, நாசியினால் நுகரும்போது, நாவினால் சுவையுணரும் போது உடலினால் உடலுணர்வுகளை பெறும்போது, மனதினால் எண்ணங்களை நினைக்கும்போது இவை பழைய கர்மங்கள் என்பதனை நன்கு உணர்ந்துக்கொள்ள வேண்டும். எமக்கு இவை மூலம் சுக துக்கங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறாக சுக துக்க அனுபவிப்புக்கள் ஏற்படும்போது துக்கத்தினை மறுத்து சுகத்தின் பின்னே ஓடுவது அர்த்தமில்லாத விடயமே. அதற்கு

காரணம் நாம் பயணிக்கும் இந்த பிறவிப்பயணத்தில் கர்மமே பின்னணியாக இருப்பதாகும்.

**காரணமாக அமைபவை**

எமக்கு அடுத்த பிறவியில் கண் கிடைக்குமாயின் அதற்கு காரணம் என்ன? இந்த பழைய கர்மங்கள்தான். அடுத்த பிறவிகளில் காதுகள், நாசி, நாவு, உடல், மனம் எனும் இவை கிடைத்தால் அது எதன் காரணமாக கிடைக்கும்? பழைய கர்மத்தின் காரணமாகவே. நாம் அடுத்த பிறவியில் தேவராக பிறப்போமேயானால் அதற்கு நாம் இப் பிறவியில் செய்யும் கர்மங்கள் காரணமாக அமையாதா? அமையும். அந்த தேவ நிலைக்கு அவசியமான திவ்விய கண்கள், திவ்விய காதுகள், திவ்விய நாசி, திவ்விய நாவு, திவ்விய உடல், தெய்வீக மனம் என்பன கிடைப்பதற்கு காரணம் இந்த வாழ்விலும் இதற்கு முற்பிறவிகளில் நாம் செய்த கர்மங்களாகும். அந்த பிறவியை அடையும்போது எமக்கு கிடைக்கும் ஆறு புலன்களும் பழைய கர்மங்களாகும். நாம் இப்பிறவியில் செய்யும் கர்மங்கள் அங்கு ஆறு புலன்கள் எனும் பழைய கர்மங்களாக பிரதிபலிக்கும். இங்கு நாம் ஒரு விடயத்தினை நன்கு உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதாவது புத்தர் ஒருவரது தர்மத்தினால் வாழ்வினை உணர்ந்துகொள்ளும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்காது. அது மிகவும் அரிதானது. அதேபோல்தான் நாம் இந்த சன்சாரத்தில் தனியே பயணிக்கவில்லை. தனியே பயணிப்பதாயின் எமக்கு அபாயமுமில்லை. பிரச்சினையுமில்லை. நாம் இன்னுமொருவருடனேயே பயணிக்கிறோம். அது தண்ஹா எனும் பெரும் வேட்கையாகும். இந்த தண்ஹாவினை வழிநடத்த ஒருவன் இருக்கிறான். அவனே மாரன்*

*.உயிர்களை பிறவிப்பயணத்தில் பிணைத்து வைத்திருப்பவன். மோட்சமடைவதனை தடுப்பவன்.

புத்த பகவானது தர்மத்தினை வாசிக்கும்போது உலகில் வேறு யாராலுமே இவ்வாறு கூற முடியாது என்பதனை நாம் உணர்ந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். புத்த பகவான் இவற்றினை உய்த்துணர்ந்திராவிட்டால், அறிந்து உலகிற்கு உரைத்திருக்காவிட்டால் எமது வாழ்வின் உண்மைநிலையை எம்மால் அறிந்துகொள்ள முடியாது. புத்த பகவான் தன் போதனைகளில் பெரும்பாலும் உவமைகளை உபயோகித்துள்ளார். இதுவும் அப்படியானதொரு உவமையே. ஒரு ஆற்றங்கரையோரத்தில் ஒரு ஆமை உணவு தேடிக்கொண்டு சென்றது. ஒரு நரியும் உணவு தேடிக்கொண்டு சென்றுக்கொண்டிருந்தது. இந்த நரியோ ஆமை இறைச்சியை தேடிக்கொண்டுதான் போனது. அது ஆமையை தூரத்தே கண்டு ஆமையிடம் ஓடோடிச்சென்றது. நரியை கண்ட ஆமை விரைவாகவே ஓட்டினுள் மறைந்துகொண்டது. நரி ஆமையின் அருகிலேயே நின்றுகொண்டு 'கை வெளியே வரட்டும் பிடித்துக்கொள்கிறேன்' 'காலை வெளியே நீட்டு பிடித்துக்கொள்கிறேன்' 'கழுத்து வெளியே வரட்டும்' என்று காத்துக்கிடக்கிறது. ஆனால் ஆமை ஓட்டினுள்ளேயே மென்மேலும் தன்னை பத்திரப்படுத்திக்கொண்டு உள்ளேயெ இருந்துவிடுகிறது. நரி காத்திருந்து காத்திருந்து இறுதியில் களைப்பினால் அங்கிருந்து நகர்ந்துவிடுகிறது.

## மாரனது இருப்பிடம்

புத்த பகவான் போதிக்கிறார். 'புண்ணியமிகு பிக்குகளே, மாரன்* உங்களில் தொலைவில் இல்லை. உங்கள் கண்கள் அருகிலேயே இருக்கிறான், காதுகள், நாசி, நாவு, உடல், மனம் என்பவற்றின் அருகிலேயே இருக்கிறான். உங்களுள் ஆசை, கோபம், அறியாமை என்பன தோற்றம் பெறும்போதே

*.உயிர்களை பிறவிப்பயணத்திலிருந்து மீள தடை செய்பவன்

மாரன் உங்களை அவனது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவான். அதன் பிறகு மாரனுக்கு ஏற்றாற்போலவே நீங்கள் நடந்துகொள்வீர்கள். புண்ணியமிகு பிக்குகளே, எனவே நீங்களும் இந்த ஆமையை போன்று இருங்கள். நீங்கள் கண்ணினால் உருவத்தினை காணும்போது அந்த உருவத்தினுள் சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் பார்க்க வேண்டும். காதினால் சப்தத்தினை கேட்கும்போது அந்த சப்தத்துடன் சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் கேட்க வேண்டும். நாசியினால் மணத்தினை நுகரும்போது அந்த மணத்தோடு சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் நுகர வேண்டும். நாவினால் சுவை உணரும்போது அந்த சுவையுடன் சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் சுவைக்க வேண்டும். உடலினால் உடல் உணர்வுகளை பெறும்போது அந்த உடலுணர்வுகளில் சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் உணர வேண்டும். மனதினால் எண்ணங்களை நினைக்கும்போது அந்த எண்ணங்களில் சிக்கிக்கொள்ளாது, விழிப்புணர்வுடன் நினைக்க வேண்டும்.

இது கடினமான விடயமா? நிலவிற்கு செல்வது, எவரெஸ்ட் மலையுச்சியை தொடுவது, என்பன இலகுவானவையே. தன்னை ஒருவரால் அடக்கிக்கொள்ள முடியுமாயின் அதுவே கடினமானதாகும். எனவேதான் புத்த பகவான் “ஆயிரம் யுத்தங்களை வெல்வது சிறந்த வெற்றியாகாது. தன்னை ஒருவர் வெற்றிக்கொள்வதே அதி சிறந்த வெற்றியாகும்” என போதித்தார்.

### கழிவு நீரில் பிறந்த பாட்டி

ஒரு பாட்டி இருந்தாள். அவள் நோயுற்றதால் அவளது பிள்ளைகள் அவளை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். அந்த பாட்டிக்கு மிகவும் பசி. வைத்தியர்கள் அவளது

நோயின் தன்மைக்கு ஏற்ப உணவு அளிக்கக்கூடாது என கூறிவிட்டார்கள். இந்த பாட்டி தம் பிள்ளைகளிடம் சாப்பாடு கேட்கும்போது அவர்கள் அதற்கு அனுமதியில்லை என சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்த பாட்டியை குணப்படுத்துவதற்காகவே வைத்தியசாலைக்கு கொண்டு வந்தார்கள். ஆனால் பாட்டி தன்னை தன் பிள்ளைகள் கஷ்டப்படுத்துவதாகவே நினைத்தாள். அவளுடைய மனநிலை நன்கு வளர்ந்த ஒருவருடையதை போன்றதா? அல்லது சிறுபிள்ளையின் மனநிலையை கொண்டதா? பாருங்கள், நன்கு விருத்தி செய்யாத ஒருவருடைய உடல் பலவீனமடையும்போது மனமும் பலவீனமடையும். சின்ன பிள்ளைகள் தாம் விரும்பிய உணவேதும் இருந்தால் அதனை வாங்கிக்கொடுக்கும் வரை அழும். பிடிவாதமான குணம் கொண்ட பிள்ளைகள் இருக்கிறார்கள். அவ்வாறு வாங்கிக்கொடுக்காவிடில், அவர்கள் கோபித்துக்கொள்வார்களே, அதேபோன்றுதான் இந்த பாட்டியும் தன் பிள்ளைகளுடன் கோபித்துக்கொண்டாள். தன் இறுதி காலத்தில் தன்னை பார்க்க வந்த மகனிடம் “நீ என்னை இங்கே சாப்பாடு கொடுக்காம கொல்வதற்காகத்தான் கொண்டு வந்தாய்...! நான் செத்த பிறகு உனக்கெல்லாம் நல்ல பாடம் சொல்லித்தாரேன்” என்று கூறி கண்களை மூடிக்கொண்டாள்.

புண்ணியவர்களே, இந்த பாட்டி தர்ம போதனைகளை செவிமடுத்திருப்பாள், பௌர்ணமி தினங்களில் வெள்ளை உடுத்திக்கொண்டு தர்ம நிகழ்ச்சிகளுக்கும் சென்றிருப்பாள். ஆனால் அவள் தனது மனதினை பாதுகாத்துக்கொள்ளவில்லை. தன் மனதின் நிலையை உணர்ந்துக்கொள்ளும் நால்விழிப்பு நிலைகளில் இருக்கவில்லை. வைத்தியசாலைக்கு வரும்போதும் வந்த பின்னரும் இருந்த மனநிலையின் மாற்றத்தினை அவளால் உணரக்கூடியதாக இருந்ததா? அவளுக்கு கண்கள், காதுகள், மனமிருந்தும் தன்னுள் நிகழ்பவற்றை அவளால் காண முடியவில்லை.

பாட்டியின் மரணத்தின் சில நாட்களின் பின்னர், பாட்டியின் ஒரு பேர்த்தி சமயலறைக்குச் சென்றாள். அவர்களது வீட்டின் சமயலறை வழியாக கழிவுநீர் காண் ஒன்று மலசலகூடத்தின் அருகே செல்லுமாறு அமைக்கப்பட்டிருந்தது. அந்த கழிவுநீர் காணிலிருந்து ஏதோ ஒரு கரும்புகை வெளிவருவதையும் அந்த புகையில் அந்த பாட்டியின் உருவம் தோன்றியதையும் கண்டு மயக்கமுற்றிருக்கிறாள்.

அந்த பாட்டி எங்கு பிறந்திருக்கிறாள். கழிவுநீர் காணில். நாம் மரணித்து எங்கு பிறக்கிறோம் எனும் எண்ணம் எமக்கிருக்கிறதா? உண்மையில் நாம் வாழும் வாழ்வில் எமக்கிருக்கும் பிரச்சினைகளை மட்டுமே யோசித்துக்கொண்டிருக்கிறோம். அதற்காகவே வேண்டுதல் பிரார்த்தனைகள் செய்கிறோம். ஆனால் மரணத்தின் பின் உள்ள வாழ்வினை பற்றி நாம் சிந்தித்ததுண்டா? “எப்போதாவது செத்த பிறகு பார்த்துக்கொள்ளலாம்” என வீம்பாக பேசும் நாம் மரணித்த பின்னர் உள்ள வாழ்வினை தனிமையாகவே பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த அம்மா, அப்பா, கணவன் மனைவி யாரும் எம்முடன் வருவதில்லை. தனக்கு தானே துணை. நான் என் தந்தைக்காக , தாயிக்காக, மனைவிக்காக பாவம் செய்தேன். எனவே எனக்கு மன்னிப்பு கிடைக்கும் என்றெல்லாம் நினைப்பது வீணான விடயங்களாகும்.

## தர்மத்தின் தீர்ப்பும் கர்மத்தின் தீர்ப்பும்

தன்னுள் நன்றாக விழிப்புணர்வு நிலைத்திராவிட்டால், தன்னுள் அறிவினால் ஆராயும் திறன் இல்லாவிட்டால், தான் இதுவரை சேகரித்துக்கொண்ட புண்ணியங்கள் இல்லாவிட்டால் மறுவாழ்வினை பற்றி நாம் என்ன நினைத்து ஆறுதல் அடைய முடியும்? தன்னை தீமையில் செல்லவிடாது, பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நாம் பிறரை மதிப்படுவதில்

எவ்வித அர்த்தமுமல்லை. ஒவ்வொருவரும் தன்னை தாமே உண்மையாக மதிப்பிடும் சந்தர்ப்பம் ஒன்று கண்டிப்பாக வரும். அப்போது யார் தன்னுடைய சாட்சியாளன்? ஆம்... தன்னுடைய சாட்சியாளன் தன் மனசாட்சியேதான். தன்னை விசாரணைக்கு உட்படுத்துவது யார்? தர்மமாகும். தர்மம் விசாரணைக்கு உட்படுத்துமாயின் தர்மம் இல்லாத வாழ்வினை யார் விசாரணை செய்வது? கர்மமே. தன்னுள் தர்மம் இருக்குமாயின் தன்னை விசாரணைக்கு உட்படுத்துவது தர்மம். தன்னிடம் தர்மம் இல்லாவிடில் கர்மம்தான் தன்னை விசாரணைக்கு உட்படுத்தும்.

இந்த உலகின் பெரும்பாலானோர் தர்மத்தின் தீர்ப்புக்கு அல்ல. கர்மத்தின் தீர்ப்பிற்கே உட்படுத்தப்படுகிறார்கள். அந்த பாட்டி இந்த உத்தம தர்மத்தினை செவிமடுத்து அதனை அறிவினால் ஆராய்ந்து இருந்திருந்தால் அவள் தன் மனதினை நம்பியிருக்கமாட்டாள். அவள் தர்மத்தினை பின்பற்றுபவளாக இருந்திருந்தால், தன் மனதின் மாற்றங்களை நன்கு உணர்ந்து மனதில் தோன்றிய அகுசலங்களை இனங்கண்டு அவற்றினை அகற்றி மனதினை தூய்மைப்படுத்தியிருப்பாள்.

புண்ணியவர்களே, தன்னகத்தே உரிய நேரத்தில் செயற்படக்கூடிய தர்மம் இல்லாதபோது அது எவ்வளவு தீங்காக அமைகிறது என்பதனை இப்போது உங்களால் உணர்ந்துகொள்ள முடிகிறதா? நான் முன்னர் குறிப்பிட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? புத்த பகவானின் தர்மத்தினை செவிமடுத்த பின்னர் அதனை விளங்கிக்கொள்வது தன் சொந்த திறமையாகும். அந்த திறமைதான் அறிவினால் ஆராய்தல் எனும் யோனிசோ மனசிகாரமாகும். அந்த பாட்டியினுள் இவை இருக்காததால்தான் அவள் ஒரு குப்பை கானில் பேயாக பிறக்க நேரிட்டது. ஒருவருக்கு பல்வேறு தீய ஆசைகள் தோன்றலாம், முரண்படும் எண்ணங்கள்,

என்பன வரலாம். இவ்வாறான நேரங்களில் சுயவுணர்வுடன் இருந்து அவற்றை இல்லாமல் செய்வதற்கு வீரியம் செய்ய வேண்டும்.

விழிப்புணர்வுடன் இருந்து அகுசலங்களை (தீமைகளை) இனங்கண்டு அவற்றை அவ்வப்பொழுதே அழித்துவிட வீரியம் செய்ய வேண்டும். இவ்வாறாக அவர் செய்யும் வீரியத்தின் அளவிலேயே அவரது முன்னேற்றத்தினை அளவிடலாம். இந்த வாழ்வின் இரகசியத்தினை அறிந்துகொள்ளவிருக்கும் முதலாவது தகுதி நாற்பேருண்மைகள் தொடர்பாக அறிந்திருத்தலாகும். புத்த பகவான் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறு புலன்களும் துன்பத்திற்குரியனவாகவே போதித்தார். இந்த ஆறும் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு காரணம் தண்ஹா எனும் வேட்கையே. எனில் துன்பங்களில் இருந்து நீங்க வேண்டுமாயின் ஆசையை துறக்க வேண்டும். இந்த தண்ஹா எனும் பேராசையை துறப்பதற்கு ஆரிய எண்சீர் வழியில் பயணிக்க வேண்டும். இந்த எண்சீர் வழியை பின்பற்றி நன்கு விருத்தி செய்த பின்னர் அனைத்து துக்கங்களில் இருந்தும் விடுதலை அடைய முடியும். துன்பங்களில் இருந்து விலகுவதற்கு வேறு எந்த வழியுமில்லை. கேட்டு, பிராத்தனை செய்து வாழ்வினை மாற்றிக்கொள்ள முடியாது. ஏனெனில் இந்த வாழ்க்கை அநாத்மமானது. அநாத்மம் என்றால் தன் வசத்தில் வைத்துக்கொள்ளக்கூடிய எதுவுமே இந்த வாழ்வினுள் இல்லை என்பதாகும். அந்த ஆச்சிக்கு ஆத்மம் என்று ஒன்றிருந்தால், “என் மனம் இப்படியாக வேண்டும். என் பிறப்பு நல்ல இடத்தில் இருக்க வேண்டும்” என மாற்றிக்கொள்ள முடியுமல்லவா? ஏன் முடியாது? இந்த வாழ்க்கையில் எம் வசத்தில் வைத்திருக்க கூடிய எதுவுமே இல்லை. இதனை நாம் முதலில் உணர்ந்துக் கொள்ள வேண்டும். உணர்ந்து கொள்வது மட்டுமல்லாமல் அதனை

நாம் எமது வாழ்வினுள் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக வாழ்வின் உண்மையினை போதிக்கும் புத்த பகவான்மாரது தர்மத்தினை இந்த பிறவிபெருங்கடலில் பயணிக்கும் எமக்கு கேட்கக்கிடைப்பதே மிகவும் அரிது.

நாம் இந்த வாழ்வினை எமக்கு வேண்டியமாதிரி நடத்தலாம் என்றே நினைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த கண்ணை எமக்கு ஏற்றாற்போல் வைத்திருக்கலாம் என்றே நினைக்கிறோம். இந்த காது... நாசி... நாவு... என்பனவற்றையும் நாம் அப்படியே நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஒருவேளை இன்றே எமது ஆயுள் முடிவடைந்துவிடுமோ என்று யாருக்கு தெரியும்? நாளை முடிந்துவிடுமோ என்று யாருக்கு தெரியும்? எனவே எம் அனைவருக்கும் ஒரு வரையறுக்கப்பட்ட வாழ்வே இருக்கிறது. இந்த கர்மத்தினால் அதற்கு மேற்பட்ட எதையும் எமக்கு அளிக்க முடியாது.

எமக்கு தெரியும் மனிதர்களின் ஆயுள் 84000 இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் தற்காலத்தில் இவ்வளவு ஆயுள் கொண்டவர்கள் இருக்கிறார்களா? இல்லையே. (நிலையாமை) அநித்தியம் அவ் அனைத்தினையும் அநித்தியமாக்கி விட்டிருக்கிறது. அப்படியாயின் இந்த பழைய கர்மங்கள் அநித்தியமாகுபவை அல்லவா? எனவே இந்த கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் அறுவகை புலன்களும் பழைய கர்மங்கள் எனவும் அவை அநித்தியமானவை எனவும் உணர வேண்டும்.

### புதிய கர்மம்

அடுத்தாக புத்த பகவான் புதிய கர்மம் தொடர்பாக மொழிந்தார். புதிய கர்மம் என்றால் என்ன? **(யங் கோ பிக்கவே, ஏதரஹி கம்மங் கரோதி காயேன வாசாய மனசா,**

**இதங் வுச்சதி பிக்கவே, நவங் கம்மங்)** புண்ணியமிகு பிக்குகளே, இப்போது உடலினால், வார்த்தையினால், மனதினால் ஏதேனும் கர்மத்தினை செய்வதாயின் அதுவே புதிய கர்மம் எனப்படுகிறது.

இதனை நன்கு உணர்ந்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். பழைய கர்மத்தினுள் அதாவது கண், காது, நாசி, நாவு, உடல் மனம் என்பனவற்றில் நாம் இப்போது நிலைத்துள்ளோம். இவற்றினுள் நாம் 'நான்', எனது எனும் எண்ணத்துடன்தானே நிலைத்துள்ளோம். இந்த பழைய கர்மங்களில் இவ்வாறான திடமான எண்ணத்துடன் கூடிய நாம் எண்ணங்களை அடிப்படையாகக்கொண்டு உடலினால் கர்மங்கள் செய்கிறோம். வார்த்தையினால், மனதினால் கர்மங்கள் சேகரிக்கிறோம். இவ்வாறு நாம் செய்யும் கர்மங்களே புதிய கர்மங்களாகும். அதாவது நாம் பழைய கர்மங்களுள் நிலைத்திருந்து புதிய கர்மங்களை செய்கிறோம். நாம் இந்த பழைய கர்மங்களில் நிலைத்திருந்து உடல், மனம், வாக்கு என்பனவற்றினால் சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு செயற்படும்போது விளைவுகள் தரும் கர்மங்கள் உருவாகின்றன.

## கர்மத்தின் வகைகள்

புத்த பகவான் கர்ம விளைவுகளை மூன்று வகையாக வகைப்படுத்தியுள்ளார். திட்டதம்மவேதனீய, உபபஜ்ஜவேதனீய அபராபரீய கர்மங்கள் என்று. இவை **(வேதனீயங் தட்டப்பங்)** அனுபவித்துக்கொண்டு அறியக்கூடியன. அப்படியாயின் நாம் மனம், வாக்கு, உடல், என்பனவற்றால் புதிதாக கர்மங்கள் செய்யும்போது அவற்றின் விளைவுகளை நாம் கண்டிப்பாக அனுபவித்தே தீர வேண்டும்.

புத்த பகவான், **(கம்ம விபாகோ அசிந்தயோ)** கர்ம விளைவுகள் சாதாரண மனிதர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது என மொழிந்துள்ளார். சிலர் தவறுகள் செய்தால் அதன் பலன் அந்நேரத்திலேயே அவருக்கு கிடைக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்போம். அது கிடைக்காத போது நாம், "அவர் எவ்வளவு தவறான வேலைகளை செய்தார். ஆனால் அவருக்கு எந்தத் தீங்கும் இல்லையே" என நொந்துக்கொள்வோம். இதற்கு காரணம் என்ன? கர்மம், கர்மத்தின் இயல்பு, கர்மத்தின் விளைவு என்பன தொடர்பாக அறியாமையே ஆகும்.

கர்மத்தின் தொழிற்பாடு தொடர்பாக புத்த போதனைகளில் **ந ஹி பாபங் கதங் கம்மங் சஜ்ஜு கீரங்வ முச்சதி** அதாவது சேகரித்த பாவங்களின் விளைவுகள் பால் உறைவதை போன்று சீக்கிரமாக பலனளிக்காது. **டஹங் தங் பால மன்வேதி பஸ்மச்சன்னோ வ பாபகோ** அந்த பாவங்களின் விளைவுகள் சாம்பலுக்குள்ளே இருக்கும் தீயைப்போன்று தகுந்த காலத்தில் துர்விளைவுகளை தரும். தீய கர்மங்களின் விளைவுகள் பால் உறைவதைப்போன்று சீக்கிரம் விளைவுகள் தராது. சாம்பலுக்குள் தீயை போன்று புதைந்திருந்து தகுந்த நேரத்தில் சுட்டெரிக்கும். அதிலிருந்து யாராலும் தப்பியோட முடியாது. மறையவும் முடியாது. அதன் துர் விளைவுகளை அனுபவித்தே தீர வேண்டும்.

கர்மங்களின் சில விளைவுகள் திட்டதம்ம வேதனீய எனும் முறையில் பலன்தரும். திட்டதம்ம வேதனீய என்றால் இவ் வாழ்விலேயே விளைவுகள் தரும். சில கர்மங்கள் **(அபராபரி வேதனீய)** மறுவுலகில் விளைவுகள் தரும். இன்னும் சில கர்ம விளைவுகள் **(உபபஜ்ஜனீய)** மோட்சம் அடையும் வரை பிறவிப்பெருங்கடலில் பின்னாலேயே வந்து விளைவுகள் தருவனவாகும். இவை அனைத்துமே கர்மத்தின் தீர்ப்பிற்கு

அமைவானவையாகும்.

## உடலா? உள்ளமா?

நீங்கள் நினைத்து பாருங்கள் உங்கள் மனம் பிரதானமானதா? அல்லது உடல் பிரதானமானதா? என்று. மனமே பிரதானமானதாகும். நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியதும் இந்த மனதினையே. மனம் பிழையான வழியில் செல்வதாலேயே வார்த்தை பிழையாகிறது. உடலியல் செயற்பாடுகள் பிழையாகின்றன. எனவே நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இந்த மனதினையே. மனதினை தார்மீகமான நல்வழியில் செலுத்த வேண்டும். அதனை சதிபட்டானத்தின் மூலமே செய்ய முடியும். அதற்கு அவர் தர்மத்தினை அறிந்திருத்தல் மிக அவசியம்.

நாம் பழைய கர்மங்கள் தொடர்பாக பேசினோம். எமக்கு கண்கள், காதுகள் , நாசி, நாவு, என்பனவற்றோடு ஒரு உடல் கிடைத்துள்ளது. ஒரு மனம் கிடைத்துள்ளது. இவை தொடர்பாக நாம் மேலும் செய்யக்கூடியன எதுவுமில்லை. இவை வரையறுக்கப்பட்டனவாகும். பழைய கர்மங்களை எம்மால் கட்டுப்படுத்த முடியாவிடிலும் நாம் புதிதாக செய்யும் கர்மங்களை எம்மால் கட்டுப்படுத்த முடியும். உடலினால் வார்த்தையினால் செய்யும் கர்மங்களை மனதை கட்டுப்படுத்திக்கொள்வதன் மூலம் தூய்மையாக்கிக்கொள்ள முடியும். மூன்று கதவுகளினாலும் நன்மைகளை செய்வதற்கு முடியும். உடலினால் செய்யும் நற்செயல்கள் யாவை? உயிர்களை கொல்லாதிருத்தல், களவிலிருந்து தவிர்த்திருத்தல், தகாத காம செயலிலிருந்து தவிர்த்திருத்தல் என்பனவாகும். வார்த்தையினால் செய்யும் நன்மைகள் யாவை? பொய் பேசாதிருத்தல், புறம் பேசாதிருத்தல், வெறுமையான பேச்சுக்களை பேசாதிருத்தல், கொடிய

வார்த்தைகளை பேசாதிருத்தல் என்பனவாகும். மனதினால் செய்யும் நன்மைகள் யாவை? ஏனையோரது உடமைகள் மீது ஆசை கொள்ளாதிருத்தல். அவ்வாறான எண்ணங்கள் மனதில் தோன்றும்போது சுயவுணர்வுடன் இருந்து அதனை இனங்கண்டு அவ் எண்ணங்களை அகற்ற வேண்டும். கோபம் தோன்றும் போது அதனை இனங்கண்டு கோபத்திற்கு பதிலாக அன்பினை தோற்றுவித்துக்கொள்வதற்கு வீரியம் செய்ய வேண்டும். இம்சிக்கும் எண்ணங்கள் தோன்றும்போது கருணையை தோற்றுவித்துக்கொள்ள வேண்டும். இவற்றை செய்வதற்கான வழிமுறைகளை புத்த பகவான் தன் போதனைகளில் விரிவாகவும் விபரமாகவும் மொழிந்தருளியுள்ளார். இவற்றை செய்வதாலும் கர்மங்கள் சேரும். ஆனால் அந்த கர்மத்தின் விளைவுகள் தீமையானவையாக அமையாது. அவை இனிமையான விளைவுகளை தருவனவாகவே அமையும்.

## கர்மத்தின் அழிவு

அடுத்ததாக புத்த பகவான் கர்மம் இல்லாமல் போதல் தொடர்பாக மொழிந்தார். “**(யோச பிக்கவே காயகம்மவசீகம்ம மனோகம்மஸ்ஸ நிரோதோ விமுத்திங் புசதி)** புண்ணியமிகு பிக்குகளே, மனம், வாக்கு, காயம் எனும் கர்ம அழிவினால் மோட்சத்தினை ஸ்பரிசிக்க முடியுமானால் அதுவே கர்மத்தின் முடிவு எனப்படுகிறது”

இங்கு மனம், வாக்கு, காயம் என்பனவற்றின் நிரோதம் அதாவது முடிவு தொடர்பாக பேசப்பட்டது. கர்மங்கள் இல்லாமல் போவதால்தான் வர் கர்மத்திலிருந்து விடுதலை அடைய முடியும். இதுவே கர்மத்திலிருந்து தப்பிக்க உள்ள ஒரே வழியாகும். சோதாபண்ண நிலையை அடைந்த ஒருவருக்கு நால்வகை நரகங்களில் பிறக்க காரணமாகும் கர்மங்கள் இல்லாமல் போய்விடும். சகதாகாமீ நிலையை எய்தியவர்

காம உலகில் ஒரு முறை பிறப்பதற்கான கர்மத்தினையே கொண்டிருப்பார். அநாகாமீ நிலையை எய்தியவருக்கு காம உலகில் பிறப்பதற்கான அனைத்து கர்மங்களும் இல்லாமல் போய்விடும். அரஹத் நிலையை எய்தியவருக்கு அனைத்து கர்மங்களும் அழிந்துவிடும். பிறப்பதற்கு காரணமாக அமையும் எந்த கர்மமும் அவரிடம் இருக்காது. எனவேதான் அரஹத் தேரர்கள் “கம்மக்கய” அதாவது கர்மத்தினை இல்லாமல் செய்தவர்கள் என குறிப்பிடப்படுகிறார்கள்.

இவ் அனைத்து கர்மங்களும் இல்லாமல் போவதற்கு காரணம் கர்ம அழிவிற்கான பாதையில் பயணித்ததாகும். **(கதமா ச பிக்கவே, கம்மநிரோதகாமினி படிபதா)** “புண்ணியமிகு பிக்குகளே, கர்ம அழிவிற்கான மார்க்கம் எது? **(அயமேவ அரியோ அட்டங்கிகோ மக்கோ)** அதுவே இந்த ஆரிய எண்சீர் வழியாகும்”

## நிரந்தரமான தீர்வு

எமது வாழ்க்கைக்கான நிரந்தர தீர்வு இந்த ஆரிய எண்சீர் வழியாகும். இவ் அனைத்து உலகங்களில் இருந்து மீள, அனைத்து துக்கங்களிலிருந்து மீள இருக்கும் ஒரே வழி இந்த ஆரிய எண்சீர் வழியாகும். இது சாதாரண கண்களுக்கு தெரியும் வழியல்ல. இது அகத்தினால் காண வேண்டிய பாதையாகும். இன்னுமொருவரால் எம்மை இந்த வழியில் இழுத்துச் செல்ல முடியாது. பகவானும் இந்த எண்சீர் வழியை சுட்டிக்காட்டி இதில் பயணியுங்கள் என உபதேசித்தாரே தவிர ‘என்னுடன் வாருங்கள். என்னை நம்புங்கள் நான் அழைத்து செல்கிறேன்’ என கூறவில்லை. அதனை ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் செய்துகொள்ள வேண்டியதாகும். தானே தன்னை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டும். தானே தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஆரிய எண்சீர் வழி எனும் சொல்லைக் கேட்கும்போதே இங்கு எட்டு அங்கங்கள் இருப்பதனை நாம் அறிந்துகொள்ள முடியும். எட்டு அங்கங்களை கொண்ட இதன் முதலாவது அங்கம் சம்மா திட்டி எனும் நற்காட்சியாகும். சம்மாதிட்டி இருவகைப்படும். ஆன்மீக நற்காட்சி மற்றும் லௌகீக நற்காட்சி என்பனவே அவையாகும். இங்கு ஆன்மீக நற்காட்சி என்றால் துக்கம், துக்கத்தின் தோற்றம், துக்கத்தின் அழிவு, துக்க அழிவிற்கான மார்க்கம் எனும் நாற்பேருண்மைகள் தொடர்பான உய்த்துணர்வாகும்.

சம்மா திட்டி என்றால் வாழ்க்கை தொடர்பான உய்த்துணர்வாகும். வாழ்க்கை தொடர்பான பூரண உய்த்துணர்வினை இந்த சம்மா திட்டி மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஒருவருக்கு சம்மா திட்டி உதயமாகியதென்றால் அதன் பொருள் அஞ்ஞானத்தினால் இருண்ட வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக மெய்ஞானத்தினால் பிரகாசிக்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது என்பதாகும். புத்த பகவானது போதனைகளில் அதற்கு ஒரு உவமை உள்ளது. வைகரைப்பொழுதில் கிழக்கு திசையின் கீழ்வானம் சிவந்து இருக்கும். கீழ்வானம் சிவந்திருந்தால் சூரியன் உதிக்கப்போகிறது என்பதனை அனைவரும் அறிவர். அதேபோல் அஞ்ஞானத்தினால் இருண்ட அகவாழ்வு இந்த சம்மா திட்டி எனும் நற்காட்சி தோன்றும் போது பிரகாசிக்கும். அவ்வாறு தோன்றிய நற்காட்சி எனும் ஆதவனின் காரணமாக அவரது வாழ்வின் அஞ்ஞான இருள் முழுமையாக அகன்றுவிடும் என்பதில் எவ்வித சந்தேமுமில்லை.

இந்த சம்மா திட்டி எனும் நற்காட்சியை உடலினால் ஒருவரால் பெற முடியாது. இது முழுக்க முழுக்க மனம் சார்ந்ததாகும். புத்த பகவானது ஆரிய தர்மத்தினை செவிமடுத்த பின்னர் அதனை நன்கு அறிவினால் ஆராய்வதன் விளைவே இந்த

1. லௌகீக நற்காட்சி தொடர்பாக அறிந்துக்கொள்ள பதவிள்ளவுரையை காண்க

உயர்பேறுகளாகும். இதற்கு பெறும் தடையாக அமைவது பிரபஞ்சங்களாகும் (பல்வேறுபட்ட எண்ணவலைகள்). எமக்கு பல்வேறு வகையான சிந்தனைகள் தோன்றுகின்றன அல்லவா? நாம் கண்களினால் கண்டவை தொடர்பான சிந்தனைகள், காதினால் கேட்டவை தொடர்பான சிந்தனைகள், நுகர்ந்த மணங்கள், சுவைத்த பல சுவைகள் தொடர்பான சிந்தனைகள், உடலினால் பெற்றுக்கொண்ட ஸ்பரிசங்கள் தொடர்பான சிந்தனைகள் என்றவாறு, எண்ணற்ற சிந்தனைகள் தோன்றுகின்றன அல்லவா? இதில் முடிவிருக்கிறதா? இல்லையே. ஒவ்வொரு சிந்தனையுள்ளும் எண்ணங்களுடனும் நாம் வாழ பழகியுள்ளோம். எமது மனம் பெரும்பாலும் இறந்தகால சிந்தனைகளையே சிந்தித்துக்கொண்டிருக்கிறது. எதிர்காலத்தினை பற்றி கனவு காண்கிறது. யாராவது ஏசியது, பேசியது, என பலநூறு சிந்தனைகள் எந்நேரமும் எம் மனதில் ஓடிக்கொண்டே இருக்கிறதல்லவா? மனதிற்கு வரும் எல்லா வகையான சிந்தனைகளையும் நாம் சிந்தித்து கொண்டிருக்கிறோம். இவ்வாறாக வாழும்போது மனித வாழ்வினை வாழ்வதற்கான எமது ஆயுளே குறைந்துகொண்டு போகிறது என்பதனை நாம் மறந்துவிடுகிறோம்.

அவசியமற்ற சிந்தனைகள் எம் முயற்சியின்றியே எம் மனதில் ஓடிக்கொண்டிருக்கிறது. தர்மத்தினை அறிந்து அதனை பழக்கப்படுத்தும் ஒருவருக்கு இதனை கட்டுப்படுத்தலாம். எமக்கு பல்வேறு சிந்தனைகள் இடைவிடாமல் மனதிற்கு வந்து கொண்டே இருக்கும் போது சிலவேளை 'நான் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறேன்... சீ!' என நினைக்கும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அவ்வாறு நினைக்கும் மாத்திரத்திலேயே தேவையற்ற எண்ணங்களை எம் மனதில் இருந்து அகற்றிவிட முடியுமா? முடியாது. சிந்தனை எனும் நீர்ச்சுழியில் நாம் இவ்வாறே எம்மையறியாமலே சுழன்று கொண்டிருக்கிறோம்.

ஒரு நீர்ச்சுழியில் அகப்படும் துரும்பின் கதி என்னவென்று எம்மால் நினைத்துக்கொள்ள முடியும்தானே? அதைவிட இந்த பிரபஞ்சம் எனும் எண்ணவலைகள் எம் வாழ்வினுள் பாதிப்பு செலுத்துகின்றன. இது தர்மத்தினை பின்பற்றுவதற்குள்ள ஒரு பெரும் தடையாகும். நாம் நன்மையாகட்டும் இல்லை தீமையானதாக இருக்கட்டும் ஏதேனும் எண்ணம் மனதில் எழுந்த பின்னர் நாம் மென்மேலும் அது தொடர்பாகவே நினைத்துக்கொண்டிருப்போம். நல்ல சிந்தனையா? தீய சிந்தனையா எனும் பேச்சுக்கு அங்கே இடமில்லை. மனதிற்கு எந்த எண்ணம் வந்ததோ அதனையே நாம் சிந்திக்கிறோம். இவ்வாறு சிந்திப்பதனூடாக நாம் ஏதோ வகையான சுகத்தினை அனுபவிக்கிறோம். இது ‘பபஞ்சார’ எனப்படும். தர்மத்தினை பின்பற்றுவதற்கு இது பெரும் தடையாகும்.

## தர்மத்தினை வாழ்வினுள் நிலைப்படுத்துங்கள்

தர்மத்தினை பின்பற்றும் ஞானமுள்ளவர், சிந்தனை எனும் சுழியில் அகப்படும் துரும்பினை போலாக விரும்பமாட்டார். அவ்வாறான எண்ணவலைகள் **(பிரபஞ்சங்கள்)** தோன்றும் போதே அதனை நல்ல உணர்வுடன் இருந்து இனங்கண்டு வீரியத்தினால் அழித்துவிட்டு தர்மம் தொடர்பான சிந்தனைகளை நினைக்க முற்படுவார். இந்த தர்மம் ஒருவரது உள்ளத்தில் ஆயாசமின்றி நிலைக்காது. அதற்கு பலத்த முயற்சி எடுக்க வேண்டும். புத்த பகவான் மொழிந்த இந்த பகுதி நினைவிருக்கிறதா? **(உப்பன்னானங் காம விதக்கங் நாதிவாசேதி பஜஹதி ப்யன்தீகரோதி அனபவாங்கமேதி)** மனதில் காமம் தொடர்பான எண்ணவலைகள் தோன்றும் போது **(நாதிவாசேதி)** பொறுமையாக இராமல் **(பஜஹதி)** கைவிட வேண்டும். **(ப்யன்தீகரோதி)** இல்லாமல் செய்ய வேண்டும். **(அனபவாங்கமேதி)** அவ் எண்ணங்கள் மீண்டும் தோன்றாத வண்ணம் அழிக்க வேண்டும். இந்த திறமையை

நாமும் தோற்றுவித்துக்கொள்ள வேண்டும்.

ஒருநாள் ஆச்சிரமத்தின் பிக்குமார்கள் ஒவ்வொரு பக்கமாக அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தனர். அவ்வாறு சிந்திக்கும் ஒரு விடயம் கூட தர்மம் தொடர்பானதல்ல. புத்த பகவான் அவ் அனைவரையும் தன்னை காண வருமாறு பணித்து, பின்வருமாறு மொழிந்தார். “புண்ணியமிகு பிக்குகளே, காமம் தொடர்பாக மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டாம். கோபத்தினை தோற்றுவிக்கும் முரண்பாடான எண்ணங்களை சிந்திக்க வேண்டாம். இவற்றை சிந்திக்க வேண்டாம் என கூற காரணம் என்ன? புண்ணியமிகு பிக்குகளே, இதனால் ஏற்படும் நன்மை ஏதும் இல்லை. ஒருபோதும் அமைதி ஏற்படாது. புண்ணியமிகு பிக்குகளே, நீங்கள் சிந்திக்க வேண்டுமாயின் துக்கத்தினை பற்றி சிந்தியுங்கள். மீண்டும் மீண்டும் பிறப்பது துக்கம். அவ்வாறு பிறப்பதனால் ஏற்படும் துக்கங்களை சிந்தியுங்கள். இதுவே துக்கத்தின் தோற்றம் என சிந்தியுங்கள். இதுவே துக்க அழிவு என மோட்சத்தினை பற்றி சிந்தியுங்கள். இதுவே துக்க அழிவிற்கான பாதை என ஆரிய எண்சீர் வழியினை சிந்தியுங்கள்”

## யோனிசோ மனசிகாரம்

ஏன் இந்த நாற்பேருண்மைகள் தொடர்பாக சிந்திக்குமாறு பகவான் பணித்தார்? ஆம் அவ் வகையான சிந்தனைகளே யோனிசோ மனசிகாரம் அதாவது அறிவினால் ஆராயும் திறனை தோற்றுவித்துக்கொள்ள பேருதவியாக அமைவனவாகும். ஒருவர் ஆரிய எண்சீர் வழியின் இரண்டாவது பகுதியான நற்சிந்தனை என்பதனை உணர்ந்துகொண்டவராயின் பிரபஞ்ச, பபஞ்சாராம போன்ற சிந்தனைகளில் இருந்து மீள வேண்டும் எனும் தேவை அவருக்குள் தோன்றும். அதன் விளைவாக அவர் காம எண்ணங்களுக்கு பதிலாக நிஷ்காமீய எண்ணங்களை

நினைப்பதற்கு முயற்சிப்பார். கோபம், முரண்பாடு போன்ற எண்ணங்களுக்கு எதிரான அன்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கு முயற்சிப்பார். இம்சிக்கும் எண்ணங்களுக்கு இடமளிக்காமல் அஹிம்சையான எண்ணங்களுக்கு மனதில் இடமளிப்பார். நிஷ்காமியம், அன்பு, அஹிம்சை எனும் உயர்பண்புகளை தோற்றுவிக்கும் உயர்வான எண்ணங்களை மனதில் நினைப்பதற்கு அவகாசமளிப்பார்.

அதன் விளைவாக அவர் சம்மா வாசா எனும் நற்பேச்சு உடையவராவார். அவர் உண்மை பேசும் ஒருவராவார். பிறரை பிரிக்கும் எண்ணத்துடன் புறம் (கோல்) கூறாதிருப்பார். கொடிய வார்த்தைகளை பேசாதிருப்பார். அர்த்தமற்ற வீண் பேச்சுக்களை பேசாதிருப்பார்.

அதேபோல் அவர் எவரையும் இம்சிக்காதிருப்பார். கொல்லாதிருப்பார். திருடாமல் இருப்பார். அதேபோல் துறவறம் பூண்டிருந்தால் பிரம்மச்சரியத்தினை மீறாதிருப்பார். இல்லறத்தவராயின் தகாத காமத்தில் ஈடுபடாதிருப்பார்.

அதேபோல் அவர் தன் வாழ்வினை கொண்டு நடாத்துவதற்காக தவறான வழிமுறைகளை மேற்கொள்ளாதிருப்பார். அவருள் சம்மா ஆஜீவ எனும் நல் ஜீவனோபாயத்தினை கொண்டவராக இருப்பார்.

இவர் மிகுந்த வீரியத்துடன் தன்னை நல்வழிப்படுத்துபவராக இருப்பார். தன் மனதில் தீய எண்ணங்கள் தோன்றும்போது அவற்றை அகுசலங்கள் என இனங்கண்டு பலத்த முயற்சி கொண்டு அழிப்பார். அவ்வாறு அகுசலங்களை அழிக்கும் அவர் நன்மைகள் எனும் குசலங்களை தோற்றுவித்துக்கொள்ள முயற்சிப்பார். நன்முயற்சி எனும் சம்மா வாயாமவினை தன்னுள் தோற்றுவித்துக்கொள்ளும் அவர் தன்னுள் தோன்றும்

நன்மைகளை மென்மேலும் விருத்தி செய்ய முயற்சிப்பார். இவ்வாறாக செயற்படுபவரது விழிப்புணர்வு மேன்மையடையும் அல்லவா? விழிப்புணர்வு தர்மத்தில் ஈடுபடுபவருக்கு மிக மிக அவசியமானதாகும். விழிப்புணர்வு இல்லாமல் தர்மத்தினை பின்பற்றுவது மிகவும் கடினமாகும். தர்மத்தினை உய்த்துணர விழையும் ஞானமுள்ளவர் இந்த உடலின் உண்மை நிலையை உணர்ந்தவராக உடலின் மீது விழிப்புணர்வு உடையவராக வசிப்பார். அதேபோல் அவர் தன் மனதில் எழும் சுகம், துக்கம், சுகதுக்கம் அற்ற சமநிலை மனம் என்பன தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பார். மனம் தொடர்பாக மனதின் மாற்றங்கள் தொடர்பாக முழு விழிப்புணர்வுடன் இருப்பார். அதேபோன்று பஞ்ச நீவர்ணங்கள், ஆறுபுலன்கள், எழுவகை போதி தர்மங்கள் என்பன தொடர்பாக முழு விழிப்புணர்வுடன் இருப்பார். இவ்வாறாக அவர் சம்மா சதி எனும் நல்விழிப்புணர்வுடன் வசிப்பார்.

இவ்வாறாக வாழும் அவர் பஞ்ச நீவரணங்களை துறந்த மனதுடன் இருப்பதற்கு திறமையானவராவார். அதாவது அவர் நற்சமாதி எனும் சம்மா சமாதியுடையவராவார். இவ்வாறாக அவர் தன்னுள் ஆரிய எண்சீர் வழியையே மேம்படுத்தியுள்ளார்.

ஒருவருக்கு இந்த திறமை புத்த பகவானது தர்மத்தின் மூலம் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். இந்த கண், காது, நாசி .... என்பன புராதன கர்மங்கள் என நாம் இதற்கு முன் அறிந்திருந்தோமா? யாரும் அறிந்திருக்கவில்லை. புதிய கர்மம் என்றால் என்ன என்பதனை நாம் அறிந்திருந்தோமா? இல்லை. இதுவரை யாரேனும் நம்மிடம் சொல்லித்தான் இருக்கிறார்களா? கர்மத்தினை அழிப்பதனால் விடுதலையை ஸ்பரிஸிக்க முடியும் என நாம் அறிந்திருந்தோமா? இல்லை இதுவரை யாரேனும் நம்மிடம் சொல்லித்தான் இருக்கிறார்களா?

கர்மத்திலிருந்து விடுதலை அடைவதற்கான வழி ஆரிய எண்சீர் வழி என்பதனை நாம் முன்னர் அறிந்திருந்தோமா? இல்லை. இவை அனைத்தும் புத்த பகவானது போதனைகளின் மூலமே நாம் அறிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

**புண்ணியமிக்கவர்களே, இந்த வீடு வாசல், தொழில்கள், பிள்ளைக்குட்டிகள், சொந்த பந்தம், அலுவலகம், காசு பணம் என்பன மத்தியில் வாழும் நாம் எமது அக வாழ்வினை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும். நாம் மரணித்த பின்னர் பெயர், புகழ், குலம், கோத்திரம், பணம், சொந்தபந்தங்கள், செல்வாக்கு எனும் எதுவுமே எம்மை தொடர்ந்து வராது. ஆனால் ஒரு விடயம் எம்மை தொடரும் அது நாம் நன்மையாகவோ அல்லது தீமையாகவோ செய்த கர்மங்களின் விளைவுகளாகும். எனவே தம் அக வாழ்வினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனும் எண்ணத்தினை தன்னுள் எப்போதும் உறுதியாக நிலைத்து வைத்துக் கொள்ளுங்கள்**.

இவ் உலகில் உலகியல் வாழ்வினை மேற்கொள்ளும் நீங்கள் வீடு வாசல் கட்டுவது. திருமணம் முடிப்பது என பல எண்ணங்களுடனும் இலட்சியங்களுடனும் வாழக்கூடும் அது பிழையல்ல. ஆனால் வாழ்வின் ஒரே குறிக்கோள் அதுவே என வாழ வேண்டாம். இவை அனைத்தும் இந்த பௌதீக உடலுடன் தொடர்புடைய விடயங்களாகும். இந்த உடலை நாம் அனைவரும் ஒருநாள் துறக்க நேரிடும். அப்போது உங்களிடம் ஒரு ஆன்மீக இலக்கொன்று இல்லாவிடில் நீங்கள் வெறுங்கையுடனேயே மரணிக்க நேரிடும். வீடுவாசல் , மனைவி மக்கள், சொந்தங்கள், நிலம், தனம், வியாபாரம் என்பவற்றினூடாகவே அவருடைய இவ் வாழ்வு சம்பந்தப்பட்டிருக்கிறது. இவ் அனைத்தும் உடலை மையப்படுத்தியே இருக்கிறது என்பதனை

அவர்கள் மறந்துவிடுகின்றனர். உடல் அழிந்துபோகும்போது மேற்கூறப்பட்ட அனைத்துமே இல்லாமல் போய்விடும். ஆனால் அவரது மனம் அவற்றின் மீது பற்றுக்கொண்டிருப்பதால் அவரது மனம் அவற்றையே சுற்றி சுற்றி இருக்கும். இறுதியில் மிருகமாக, பேயாக பிசாசாகச் சரி அவர் இவ் இடங்களினையே சுற்றிக்கொண்டிருப்பார்.

இந்த அபாயத்திலிருந்து மீள வேண்டுமாயின் ஞானமுள்ள அனைத்து மனிதர்களும் வாழ்வினை உய்த்துணரல் எனும் ஆன்மீக இலட்சியத்தினை கொண்டிருத்தல் அவசியமாகும். இந்த புத்த சாசனத்தின் மகா உபாசகியான விசாகா உபாசிகை ஏழு வயதிலேயே தர்மத்தினை உய்த்துணர்ந்து (சோதாபண்ண நிலை) கொண்டவர். அவர் திருமணம் செய்துகொண்டார். பிள்ளைகள் ஈன்றெடுத்து வளர்த்தார். அவர் அழகாக ஆடை ஆபரணங்களை அணிந்தார். அவர் இடையில் தரித்த மேகலை இருபத்தி ஏழு கோடி பொற்காசுகள் பெறுமதியானது. அவர் இவ்வாறானவராக வாழ்ந்தார் என அந்த தர்ம உய்த்துணர்வு அற்றுப்போய் விட்டதா? இல்லையே. பட்டாடைகளை அணிவதால், உயர் பதவிகளை வகிப்பதால் தர்ம உய்த்துணர்வு அற்றுப்போகாது. காரணம் என்ன? இந்த தர்ம உய்த்துணர்வு என்பது உடல் சம்பந்தப்பட்டதல்ல. அது முழுக்க முழுக்க மனம் சம்பந்தப்பட்டதாகும். பிரக்ஞைக்கே தொடர்புடையதாகும்.

## உலகியல் இலட்சியங்களைப் போன்றே ஒரு ஆன்மீக இலட்சியமும் வேண்டும்.

ஒருவர் தம் ஆன்மீக இலட்சியத்தினை வேகமாக அடைய வேண்டும் எனும் காரணத்தினாலேயே துறவறத்தினை மேற்கொள்ள வேண்டும். பிள்ளை பருவத்தோர் முதல் முதியோர் வரை அனைவரது வாழ்விலும் ஒரு ஆன்மீக இலட்சியத்தினை

கொண்டிருத்தல் அவசியமாகும். அது அவருக்கு நன்மையையே அளிக்கும். அவர் திடீரென மரணமடைந்தால் கூட ஆன்மீக இலக்கொன்றினை கொண்டுள்ள ஒருவர் இவ் உலகத்தின் மீது பற்றுக்கொண்டவராக மரணிக்க மாட்டார். அவர் இந்த இலட்சியத்தில் நிலைத்திருந்து செய்து கொண்ட புண்ணியங்களின் காரணமாக சுவர்க்கத்தில் பிறப்பார்.

எனவே நாம் இவ் உலக வாழ்வினை மேம்படுத்திக்கொள்ள முயற்சிப்பதைப் போன்றே எமது மறுவாழ்வினை மேம்படுத்திக்கொள்ளவும் பாதுகாத்துக்கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். இவ் இரண்டு வேறுபட்ட விடயங்களையும் புத்த பகவானது போதனைகளின் படி எமது வாழ்வினை நடாத்திக்கொள்ளும் போது இலகுவாகிறது. இல்லையென்றால் அழகான ஒருவரை நாம் காணும்போது “அவருடைய உருவம் போன்ற உருவம் எனக்கிருந்தால், அவருடைய குரலைப்போன்று இனிமையான குரல் எனக்கிருந்தால் , அந்த மாதிரி பெரிய வாகனத்தில் போகவிருந்தால், அடுத்த ஜென்மமாவது அவரைப்போல வாழக்கிடைத்தால்” எனும் எண்ணங்கள் எம்மில் தோன்றுவதில்லையா? அதற்கு காரணம் என்ன? இவ்வுலகில் நாம் அனைவரின் மத்தியிலும் தனி நட்சத்திரமாக தெரிய வேண்டும் எனும் எண்ணமாகும். அனைவரும் தனக்கு மரியாதை செலுத்த வேண்டும், தனக்கு இலாபங்கள் கிடைக்க வேண்டும். அதுவே இவ்வாறான ஆசைகள் தோன்றுவதற்கு காரணமாகும். ஆனால் ஒருவர் தர்மத்தினை உய்த்துணர முயற்சிக்கும்போது அவர் இவ் அனைத்து விடயங்களுமே அநித்தியம் என்பதனை உணர்ந்துக் கொள்வார். இதனை உணர்ந்து கொண்ட ஒருவருக்கு எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் கலங்க மாட்டார். புதிது புதிதாக பிரார்த்தனைகள் செய்ய மாட்டார். அவரது ஒரே இலட்சியம் எண்சீர் வழியாகும். அவ் வழியே அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு என்பதனை

உணர்ந்துக்கொள்வார். புண்ணியவர்களே, வாழ்வின் ஒரே தீர்வு ஆரிய எண்சீர் வழியே என்பது வெறும் பேச்சினால் அல்ல. உள்ளுணர்வினால் உணர்ந்துக்கொள்ள வேண்டிய விடயமாகும்.

தனித்தனியொருவருக்கு வெவ்வேறுபட்ட புகலிடங்கள் இல்லை. தத்தமது புகலிடத்தினை தானே அமைத்துக்கொள்ள வேண்டும். வேறு யாரும் யாருக்காகவும் புகலிடம் தர முடியாது. இந்த ஆரிய எண்சீர் வழியே எமக்கு உள்ள புகலிடம் என்பதனை முதலில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். புத்த பகவான் இந்த போதனையில் மேலும் போதிக்கிறார். **“(இதி கோ பிக்கவே தேசிதங் வோ மயா புராணங் கம்மங்)** புண்ணியமிகு பிக்குகளே, நான் உங்களுக்கு புராதன கர்மங்கள் தொடர்பாக போதித்தேன். **(தேசிதங் நவங் கம்மங் தேசிதோ கம்ம நிரோதோ)** புதிய கர்மங்கள் தொடர்பாகவும், கர்மத்தின் அழிவு தொடர்பாகவும் போதித்தேன். **(தேசிதா கம்மநிரோதகாமினீ படிபதா)** கர்ம அழிவிற்கான மார்க்கத்தினையும் போதித்தேன். **(யங் வோ பிக்கவே சத்தாரா கரணீயங் சாவகானங் ஹிதேசினா அனுகம்பகேன அனுகம்பங் உபாதாய)** பிக்குகளே, சீடர்கள் மீது அனுதாபம் கொண்ட, அவர்களது நன்மையை விரும்பும் ஸாஸ்தா (வழிகாட்டி) அனுதாபத்துடன் ஏதேனும் போதிக்க வேண்டுமாயின் **(கதங் வோ தங் மயா)** நான் அதனை இப்போது போதித்தேன். **(தோனி பிக்கவே ருக்க மூலானி)** பிக்குகளே, இங்கே அடர்ந்த மரநிழல்கள் இருக்கின்றன. **(ஜாயத பிக்கவே)** சென்று தியானம் செய்யுங்கள். **(மா பமாதத்த)** இந்த வெறுமையான விடயங்களை நினைத்து காலத்தை வீணாக்க வேண்டாம். **(மா பச்சா விப்படிசாரினோ)** பின்வருந்த வேண்டாம். **(அயங் வோ அம்ஹாகங் அனுசாசனீதி)** இதுவே நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரையாகும்.

பாருங்கள் புண்ணியவர்களே, புத்த பகவானது வழிகாட்டல் என்பது எவ்வளவு செம்மையானதென்று. புத்த பகவான் ஒருவர் இவ்வாறு போதிக்கும்போது அவ்வாறு நடந்துகொண்ட பெரும்பாலான பிக்குமார்கள் ஞானப்பேறுகளை பெற்றார்கள் என்பதில் ஐயமேது?

அதே தர்ம போதனையை செவிமடுக்கும் நாம் ஏன் இன்னும் இந்த தர்மத்தில் ஈடுபடுவதற்கு தாமதமடைகிறோம்? நாம் ஏன் இந்த வாய்ப்பினை நழுவவிடுகிறோம், ஏன் தர்மத்தில் ஈடுபடுவதற்கு வீரியம் செய்யாமல் இருக்கிறோம்? இந்த காலம் புத்த பகவான் தரித்திருந்த காலத்திலும் பார்க்க மிகவும் வேறுபாடானதாகும். இப்போது வாழும் மனிதர்கள், உருவங்களினால், இனிமையான சப்தங்களினால், நறுமணங்களினால், சுவைகளினால், ஸ்பரிசங்களினால் தன்னிலை மறந்து விடுகின்றனர். பின்னர் தூண்டிலில் அகப்பட்ட மீனைப் போன்று துடித்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

எனவே புண்ணியவர்களே, இந்த லௌகீக வாழ்வினை சிறப்பாக வாழும்போதே ஆன்மீக வாழ்விற்கான ஒரு இலட்சியத்தினை உருவாக்கிக்கொள்ளுங்கள். கர்ம விளைவுகள் இடைவிடாது பின்தொடரும் இந்த கொடிய பிறவிப்பயணத்தில் இருந்து நிரந்தரமாக விடுதலை அடைய வேண்டும் எனும் எண்ணத்தினைக்கொண்டு இந்த தர்ம மார்க்கத்தில் பயணியுங்கள். சிறிது சிறிதாகச் சரி வாழ்வினை உயர்வடையச்செய்யும் இந்த தர்மத்தில் பயணியுங்கள். தனக்கு தான் புகலிடம் இதனை வேறு யாராலும் செய்து கொடுக்க முடியாது.

'நான் எனது குடும்பத்தினரை வாழ வைப்பதற்காக இந்த பாவத்தினை செய்தேன், அவளுக்காகத்தானே இதனை

செய்தேன், அவருக்காக இந்த பாவத்தினை செய்தேன்' என்று சொல்வதனால் இந்த பாவத்தின் கொடிய விளைவுகளில் இருந்து தப்ப முடியாது. உலகில் எங்கு சென்று மறைந்தாலும் இந்த கர்மங்களில் விளைவுகளில் இருந்து யாரும் தப்ப முடியாது. எனவே இந்த புராதன கர்மங்களை புரிந்துணர்ந்து கொள்வேன், புதிய கர்மங்களில் இருந்து விடுதலை அடைவேன். துன்பங்கள் நிறைந்த இந்த பிறவிப்பெருங்கடலில் இருந்து நீங்கிவிடுவேன் எனும் உயரிய நோக்கத்தினை உங்கள் வாழ்வின் ஆன்மீக இலட்சியமாக ஏற்படுத்திகொள்ளுங்கள்.

நன்று!

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மா சம்புத்தஸ்ஸ
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மா சம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரங்கள்!

# 03.
# மல்லிகா சூத்திரம்

ஒரு சமயத்தில் பாக்கியமுள்ள புத்த பகவான் சாவத்திய நகரின் ஜேதவனராமத்தில் ஆனேபிண்டு சீமானின் ஆராமத்தில் வசித்திருந்தார். அச்சமயம் கோசலை நாட்டு பட்டத்தரசியான மல்லிகா அரசி பகவானை காண வந்து மரியாதையுடன் வணங்கி ஒரு புறத்தில் அமர்ந்தாள். அமர்ந்து பகவானிடம் பின்வருமாறு வினவினாள்.

“பகவானே, சில பெண்கள் அவலட்சணமானவர்களாக இருக்கிறார்கள், விரூபிகளாக இருக்கிறார்கள், பார்ப்பதற்கு பிரியமற்றவர்களாக இருக்கிறார்கள், ஏழைகளாக இருக்கின்றனர், குறைவான தன தானியம் கொண்டோராக இருக்கின்றனர். குறைவான செல்வாக்கு உடையோராக இருக்கின்றனர். இதற்கு காரணம் என்ன? தோற்றக் காரணி என்ன?”

“பகவானே, சில பெண்கள் அவலட்சணமானவர்களாக இருக்கிறார்கள், விரூபிகளாக இருக்கிறார்கள், பார்ப்பதற்கு பிரியமற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செல்வமுடையோராக இருக்கின்றனர், அதிகளவிலான தன தானியம் கொண்டோராக இருக்கின்றனர். மிகுந்த செல்வாக்கு உடையோராக இருக்கின்றனர். இதற்கு காரணம் என்ன? தோற்றக் காரணி என்ன?”

“அதேபோன்று பகவானே, சில பெண்கள் அழகியோர்களாக

இருக்கின்றனர். காண்போரின் மனதை கொள்ளைக் கொள்ளும் அளவிற்கு அழகானோராக இருக்கின்றனர். உன்னத அழகுடன் ஜொலிக்கின்றனர். சௌந்தரியமானவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கின்றனர். குறைவான தன தானியம் கொண்டோராக இருக்கின்றனர். குறைவான செல்வாக்கு உடையோராக, ஆனுபாவமிக்கோர்களாக இருக்கின்றனர். இதற்கு காரணம் என்ன? தோற்றக் காரணி என்ன?"

"பகவானே வேறு சில பெண்கள் அழகியோர்களாக இருக்கின்றனர். காண்போரின் மனதை கொள்ளைக் கொள்ளும் அளவிற்கு அழகானோராக இருக்கின்றனர். உன்னத அழகுடன் ஜொலிக்கின்றனர். சௌந்தரியமானவர்களாக இருக்கின்றனர். செல்வமுடையோராக இருக்கின்றனர், அதிகளவிலான தன தானியம் கொண்டோராக இருக்கின்றனர். மிகுந்த செல்வாக்கு உடையோராக, ஆனுபாவமிக்கோர்களாக இருக்கின்றனர். இதற்கு காரணம் என்ன? தோற்றக் காரணி என்ன?"

"புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் இருக்கிறாள் அவள் அதிகளவிலாக கோபம் கொள்பவளாக இருக்கிறாள். சிறு சிறு விடயங்களுக்கும் கோபம் கொள்வாள். முரண்படுவாள். குரோதம் கொள்வாள், கொடியவளாவாள். கோபத்தினையும், துவேசத்தினையும், மகிழ்ச்சியின்மையினையும் வெளிப்படுத்துவாள். அதேபோல் அவள் சிரணம்கள், அந்தணர்கள் , துறவிகள் என்போருக்கு தானம் வழங்க மாட்டாள், அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளிக்க மாட்டாள். பொறாமை கொண்டவளாக இருப்பாள். ஏனையோருக்கு கிடைக்கும் இலாபங்கள், உபசாரங்கள், கௌரவிப்புகள், என்பன தொடர்பாக பொறாமை கொள்வாள். கோபம் கொள்வாள். இவ்வாறாக வாழ்வினை நடாத்தும் அவள்

மரணித்து மீண்டும் இந்த மனித உலகில் பிறப்பாளாயின், அவலட்சணமான ஒருவளாவாள், விரூபியாவாள், பார்ப்பதற்கு அழகானவளாக இருக்கமாட்டாள். ஏழையாக இருப்பாள், குறைவான தன தானியம் கொண்டவளாக இருப்பாள் செல்வாக்கு அற்றவளாக இருப்பாள்"

"புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் இருக்கிறாள் அவள் அதிகளவிலாக கோபம் கொள்பவளாக இருக்கிறாள். சிறு சிறு விடயங்களுக்கும் கோபம் கொள்வாள். முரண்படுவாள். குரோதம் கொள்வாள், கொடியவளாவாள். கோபத்தினையும், துவேசத்தினையும், மகிழ்ச்சியின்மையினையும் வெளிப்படுத்துவாள். ஆனால் அவள் சிரமணர்களுக்காக, அந்தணர்களுக்காக, துறவிகளுக்காக தானம் அளிப்பாள். அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளிப்பாள். பொறாமை அற்றவளாக இருப்பாள். பொறாமையை தன்னுள் சுமந்துகொண்டு இருக்கமாட்டாள். அவள் மரணித்து மீண்டும் இந்த மனித உலகில் பிறப்பாளாயின் அவள் அவலட்ணமான ஒருவளாவாள், விரூபியாவாள், பார்ப்பதற்கு அழகானவளாக இருக்கமாட்டாள். ஆனால் அவள் செல்வமுடையவளாக இருப்பாள், அதிகளவிலான தன தானியம் கொண்டவளாக இருப்பாள். செல்வாக்கு மிகுந்தவளாக ஆனுபாவமிகுந்தவளாக இருப்பாள்".

"புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் இருக்கிறாள், அவள் குரோதமற்றவளாக இருப்பாள். முரண்படாமல் இருப்பாள். எவ்வளவு முரண்படும் விடயங்களைக் கூறினாலும் செய்தாலும் கோபம் கொள்ளமாட்டாள். முரண்படாமல் இருப்பாள். கொடியவளாக மாட்டாள். கோபமோ துவேசமோ கொள்ளாமல் இருப்பாள். ஆனால் அவள் சிரணம்களுக்காவோ, அந்தணர்களுக்காகவோ அல்லது துறவிகளுக்காகவோ

தானம் வழங்க மாட்டாள், அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளிக்க மாட்டாள். பொறாமை கொண்டவளாக இருப்பாள். ஏனையோருக்கு கிடைக்கும் இலாபங்கள், உபசாரங்கள், கௌரவிப்புகள், என்பன தொடர்பாக பொறாமை கொள்வாள். கோபம் கொள்வாள். இவ்வாறாக வாழ்வினை நடாத்தும் அவள் மரணித்து மீண்டும் இந்த மனித உலகில் பிறப்பாளாயின் அவள் அழகியவளாக பிறப்பாள். காண்போரின் மனதை கொள்ளைக் கொள்ளும் அளவிற்கு அழகானவளாவாள். உன்னத அழகுடன் ஜொலிப்பாள். சௌந்தரியமானவளாக இருப்பாள். ஆனால் ஏழையாக இருப்பாள், குறைவான தன தானியம் கொண்டவளாக இருப்பாள். செல்வாக்கு அற்றவளாக இருப்பாள்"

"புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் இருக்கிறாள் அவள் குரோதமற்றவளாக இருப்பாள். முரண்படாமல் இருப்பாள். எவ்வளவு முரண்படும் விடயங்களை கூறினாலும், செய்தாலும் கோபம் கொள்ளமாட்டாள். முரண்படாமல் இருப்பாள். கொடூரமானவளாக மாட்டாள். கோபமோ துவேசமோ கொள்ளாமல் இருப்பாள். அதேபோல் அவள் சிரமணர்களுக்கு, அந்தணர்களுக்கு, துறவிகளுக்கு தானம் அளிப்பாள். அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளிப்பாள். பொறாமை அற்றவளாக இருப்பாள். பொறாமையை தன்னுள் சுமந்துகொண்டு இருக்கமாட்டாள். இவ்வாறாக வாழும் அவள் மரணித்து மீண்டும் மனித உலகில் பிறப்பாளாயின் அவள், அழகு மிகுந்தவளாக, காண்போரின் மனதை கொள்ளைக் கொள்ளும் அளவிற்கு அழகானவளாவாள். உன்னத அழகுடன் ஜொலிப்பாள். சௌந்தரியமானவளாக இருப்பாள். அதேபோல் அவள், செல்வமுடையவளாக இருப்பாள், அதிகளவிலான தன தானியம் கொண்டவளாக இருப்பாள்.

செல்வாக்கு மிகுந்தவளாக இருப்பாள்.

“புண்ணியமிகு மல்லிகா எவரேனும் ஒரு பெண், அவலட்சணமானவளாக வீரூபியாக இருப்பதற்கு, பார்ப்பதற்கு பிரியமற்றவளாக இருப்பதற்கு, ஏழையாக பிறப்பதற்கு, குறைவான தன தானியம் கொண்டவளாக இருப்பதற்கு செல்வாக்கு அற்றவளாக இருப்பதற்கு காரணம் தோற்றம் (மேற்கூறப்பட்டதே) இதுவே”

“புண்ணியமிகு மல்லிகா எவரேனும் ஒரு பெண், அவலட்சணமானவளாக வீரூபியாக, பார்ப்பதற்கு பிரியமற்றவளாக இருப்பதற்கும் ஆனால் செல்வமிகுந்தவளாக, அநேக தன தானியங்கள் உடையவளாக, செல்வாக்கு மிகுந்தவளாக இருப்பதற்கு காரணம் தோற்றம் (மேற்கூறப்பட்டதே) இதுவே”

“புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் அழகு மிகுந்தவளாக, காண்போரின் மனதை கொள்ளை கொள்ளும் அளவிற்கு அழகானவளாக. உன்னத அழகுடன் ஜொலிப்பவளாக. சௌந்தரியமானவளாக இருப்பதற்கும் ஆனால் ஏழையாக பிறப்பதற்கு, குறைவான தன தானியம் கொண்டவளாக இருப்பதற்கு செல்வாக்கு அற்றவளாக இருப்பதற்கு காரணம் தோற்றம் (மேற்கூறப்பட்டதே) இதுவே”

“புண்ணியமிகு மல்லிகா, ஒரு பெண் அழகு மிகுந்தவளாக, காண்போரின் மனதை கொள்ளை கொள்ளும் அளவிற்கு அழகானவளாக. உன்னத அழகுடன் ஜொலிப்பவளாக. சௌந்தரியமானவளாக இருப்பதற்கும் அதேபோல் செல்வமிகுந்தவளாக, அநேக தன தானியங்கள் உடையவளாக, செல்வாக்கு மிகுந்தவளாக இருப்பதற்கு காரணம் தோற்றம் (மேற்கூறப்பட்டதே) இதுவே”

இவ்வாறாக பாக்கியமுள்ள புத்த பகவான் மொழிந்த பின்னர் மல்லிகா பட்டமகிஷி பின்வருமாறு கூறினாள்.

“பாக்கியமுள்ள புத்த பகவானே, நான் எனது முற்பிறவிகளில் குரோதம் கொண்டவளாக, அடிக்கடி கோபம் கொள்ளும் இயல்புடையவளாக, சிறு சிறு விடயங்களுக்கும் கோபம் கொள்பவளாக, முரண்படும் இயல்புடையவளாக, கடுமையான குணம் கொண்டவளாக இருந்திருக்கிறேன். பகவானே, அதன் காரணமாகத்தான் நான் இப்பிறவியில் அவலட்ணமானவளாக, பார்ப்போரின் மனதை கவராத ஒருவளாக பிறந்திருக்கிறேன். அதேபோல் பகவானே, நான் முற்பிறவிகளில் சிரமணர்களுக்காக, அந்தணர்களுக்காக, துறவிகளுக்காக தானங்கள் அளித்திருக்கிறேன். அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளித்திருக்கிறேன். எனவேதான் நான் இப்பிறவியில் செல்வமிகுந்தவளாக, அநேக தன தானியங்கள் உடையவளாக, செல்வாக்கு மிகுந்தவளாக இருக்கிறேன்”

“பகவானே, நான் எனது முற்பிறவிகளில் பொறாமை அற்றவளாக இருந்திருக்கிறேன். பொறாமையை என்னுள் தாங்கியிருக்கவில்லை. ஏனையோருக்கு கிடைக்கும் இலாபங்கள், உபசாரங்கள், கௌரவிப்புகள், என்பன தொடர்பாக நான் பொறாமை கொள்ளாதிருந்திருக்கிறேன். எனவேதான் பகவானே, நான் எனது இவ்வாழ்வில் ஆதிபத்தியம் மிக்கவளாக இருக்கிறேன். பகவானே, இந்த ராஜ்ஜியத்தில் ஷஸ்திரிய பெண்கள், பிராமண பெண்கள், மற்றும் வேறு உயர்வகை இல்லற பெண்கள் இருக்கின்றனர். ஆனால் நானே அவர்கள் அனைவரையும் விட செல்வாக்கு மிகுந்தவளாக, ஆதிபத்தியம் மிகுந்தவளாக இருக்கிறேன்.”

“பகவானே, நான் இன்றிலிருந்து குரோதம் அற்றவளாவேன். சிறு சிறு வியடங்களுக்கும் கோபம் கொள்ள மாட்டேன். கோபம் கொள்ள வேண்டிய பெரிய விடயங்களுக்கும் கோபம் கொள்ளாதிருப்பேன். பகைமை கொள்ளாதிருப்பேன், அதேபோல் கொடுமையானவளாக செயற்பட மாட்டேன். அதேபோல் சிரமணர்களுக்காக, அந்தணர்களுக்காக, துறவிகளுக்காக தானங்கள் அளிப்பேன். அன்னம், பானம், வஸ்திரங்கள், பாதணிகள், மலர், வாசனை திரவியங்கள், உறையுள் என்பன தானமளிப்பேன். பொறாமை அற்றவளாவேன். ஏனையோருக்கு கிடைக்கும் இலாபங்கள், உபசாரங்கள், கௌரவிப்புகள், என்பன தொடர்பாக நான் பொறாமை கொள்ளாதிருப்பேன். நான் பொறாமை கொள்ளாதிருப்பேன். கோபம் கொள்ளாதிருப்பேன். பகைமை கொள்ளாதிருப்பேன்.

பகவானே தாங்கள் மொழிந்தருளிய இந்த தர்ம விடயம் மிகவும் அழகியது. பகவானே தலைகீழாக கவிழ்ந்து கிடப்பதனை மீண்டும் நேராக நிமிர்த்தி வைத்ததைப்போன்று, மூடி வைத்த பொருளை திறந்து காட்டினாற் போன்று, வழி அறியாமல் தடுமாறும் ஒருவருக்கு சரியான வழியைக் காட்டியது போன்று, இருளில் உள்ள ஒருவருக்கு தீபத்தினை ஏற்றிக்கொடுத்தாற் போன்று பகவானே தாங்கள் இந்த உத்தம தர்மத்தினை மொழிந்தருளினீர்கள். அந்த உத்தம தர்மத்தினை மொழிந்த கௌதம சம்மா சம்புத்தரான தாங்களை சரணமடைகிறேன். தாங்கள் மொழிந்தருளும் உன்னத ஸ்ரீ தர்மத்தினை சரணமடைகிறேன். தங்களுடைய சீடர்களான ஆரிய சங்கையரை சரணமடைகிறேன். இன்றிலிருந்து நான் வாழ்நாள் முழுவதும் இந்த மும்மணிகளை சரணடைந்த உபாசகியாக ஏற்றுக்கொள்வீராக!

நன்று! நன்று!! நன்று!!!

**நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மா சம்புத்தஸ்ஸ**
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மா சம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரங்கள்!

# 04.
# அபாய சங்வத்தனிக சூத்திரம்

(நரகத்தில் பிறப்பதற்கு ஏதுவான காரணிகள் தொடர்பாக மொழிந்த போதனை)

சாவத்திய நகரின்போது...

“புண்ணியமிகு பிக்குகளே, உயிர்களை கொல்லுதல், மீண்டும் மீண்டும் அதனையே (உயிர்களை கொல்லுதல்) அதிகளவாக செய்தலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். உயிர்களை கொல்லுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவரது ஆயுள் குறைவானதாக இருக்கும்.

புண்ணியமிகு பிக்குகளே, பிறர் பொருளை களவு எடுத்தல், மீண்டும் மீண்டும் அதனையே அதிகளவாக செய்தலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். களவு எடுப்பதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவருடைய சொத்துக்கள் செல்வங்கள் அழியும்.

புண்ணியமிகு பிக்குகளே, தகாத காம செயலில் ஈடுபடுதல், மீண்டும் மீண்டும் அதனையே அதிகளவாக செய்தலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். தகாத காம செயலில் ஈடுபடுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவருக்கு அதிகளவிலாக பகைமை நிறைந்த எதிரிகள் இருப்பார்கள்.

புண்ணியமிகு பிக்குகளே, பொய் பேசுதல், மீண்டும் மீண்டும் அதிகளவாக பொய் பேசுதலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். பொய் பேசுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவருக்கு பொய் குற்றச்சாட்டுகள் சாடப்படும். காரணமே இன்றி அவருக்கு நிந்தனைகள், பரிகாசங்கள் அனுபவிப்பதற்கு நேரிடும்.

புண்ணியமிகு பிக்குகளே, (கோல்) புறம் பேசுதல், மீண்டும் மீண்டும் அதிகளவாக புறம் பேசுதலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். புறம் பேசுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவருடைய உறவினர்கள், நண்பர்கள் என்போர் அவரிடமிருந்து பிரிந்துவிடுவார்கள்.

புண்ணியமிகு பிக்குகளே, கொடிய வார்த்தைகளை பேசுதல்,

மீண்டும் மீண்டும் அதிகளவாக கொடிய பேச்சுக்களை பேசுதலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். கொடிய பேச்சுக்களை பேசுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், மனித உலகில் பிறந்த அவருக்கு அவர் விரும்பாத கொடிய பேச்சுக்களையே கேட்க நேரிடும்.

புண்ணியமிகு பிக்குகளே, வீண் பேச்சுக்களை பேசுதல், மீண்டும் மீண்டும் அதிகளவாக வீண் பேச்சுக்களை பேசுதலானது நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். வீண் பேச்சுக்களை பேசுவதனால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின் மனித உலகில் பிறந்த அவருடைய பேச்சினை ஏனையோர் நம்பாதிருப்பர். ஏற்றுக்கொள்ளாதிருப்பர்.

புண்ணியமிகு பிக்குகளே, மதுபானம் போதைப்பொருள் என்பன உபயோகப்படுத்தல், மீண்டும் மீண்டும் அதிகளவாக மதுபானம், போதைப்பொருள் என்பன உபயோகித்தல் நரகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். மிருகலோகத்தில் பிறப்பதற்கு காரணமாகும். பிரேத உலகில் (பேய்களின் மத்தியில்) பிறப்பதற்கு காரணமாகும். மதுபானம், போதைப்பொருள் பாவனையினால் ஒருவருக்கு இலகுவான விளைவுகள் கிடைக்குமாயின், அவர் மனித உலகில் பிறக்கும்போது அவருடைய மனம் வளர்ச்சி குன்றியதாக இருக்கும். பித்து பிடிப்பதற்கும் காரணமாக இருக்கும்.

நன்று! நன்று!! நன்று!!!

## பதவிளக்கவுரை

01. மும்மணிகள் - புத்தபகவான், ஶ்ரீ சத்தர்மம், ஆரிய மகா சங்கத்தினர்

02.அரஹத் - ஆசை, கோபம், அறியாமை எனும் மனவழுக்குகளையும் அதன் படிவுகளையும் முற்றாக நீக்கியவர். மீண்டும் பிறவி எடுக்காத நிலையை எய்தியவர்.

03.ஆர்ய தர்மம், ஶ்ரீ சத்தர்மம் - புத்தபகவான் போதித்த தர்மம்

04. மூட பார்வைகள் (திருஷ்டிக்கள்) துர்பார்வை:

*. தானம் அளிப்பதில் விளைவுகள் இல்லை.

*. பூஜைகளில் விளைவுகள் இல்லை

*. சேவை மற்றும் பணிவிடை செய்வதில் விளைவுகள் இல்லை.

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் இல்லை.

*.இவ்வுலகம் என்று ஒன்றில்லை.

*.மறுவுலகம் என்று ஒன்றில்லை.

*. தாய் என்பவள் விசேடமானவள் அல்ல.

*. தந்தை என்பவர் விசேடமானவர் அல்ல.

*. தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்தில் இல்லாது எடுக்கும் பிறவிகள் அதாவது ஓபபாதிக பிறப்புக்கள் உண்டு என்பதனை நம்பாதிருத்தல்

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, சாதாரண மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள், என்பதனை நம்பாதிருத்தல். இவையே புத்தபகவான் மூடபார்வைகளாக மொழிந்தருளியுள்ளார்.

05. சம்மா திட்டி அல்லது உலகியல்சார் நற்பார்வை.

*.தானம் அளிப்பதில் விளைவுகள் உண்டு

*. பூஜைகளில் விளைவுகள் உண்டு

*.சேவை, பணிவிடை செய்வதில் விளைவுகள் உண்டு

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் உண்டு

*.இவ்வுலகம் என்று ஒன்றுள்ளது

*.மறுவுலகம் என்று ஒன்றுள்ளது.

*.தாய் என்பவள் விசேடமானவள்.

*.தந்தை என்பவர் விசேடமானவர்.

*.தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்திலில்லாது எடுக்கும் பிறவிகள் உண்டு அதாவது ஓபபாதிக பிறப்புகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள் என்பதனை நம்புதல். இவையே புத்தபகவான் தெளிவான பார்வை அதாவது 'சம்மா திட்டி' என மொழிந்தருளியுள்ளார்.

06. சதுரார்ய சத்தியங்கள் அதாவது நான்கு பேருண்மைகள் தொடர்பாக தன்னுள் தோன்றும் என்றுமே மாறாத உய்த்துணர்வே ஆன்மீக நற்பார்வை எனப்படுகிறது. இவ்வாறாக ஒருவருள் ஆன்மீக நற்பார்வை தோன்றுவதற்கு உலகியல் ரீதியான சம்மா திட்டியில் உள்ள பத்து அங்கங்களும் கண்டிப்பாக அவசியமாகும்.

நாற்பேருண்மைகள் பின்வருமாறு,

*. துக்கம் - பிறப்பு, முதுமை, நோயுறல், மரணம், பிரியமற்றவைகளுடன் பிரியமற்ற நபர்களுடன் சேர்ந்து வாழல், பிரியமானவை மற்றும் பிரியமான நபர்களை பிரிந்து வாழல், விரும்புபவை கிடைக்காமை, சுருங்கக்கூறின் இந்த பஞ்ச உபாதானஸ்கந்தங்களும் துக்கத்திற்குரியனவே

*. துக்கத்தின் தோற்றம் : காம தண்ஹா (காமத்தின் மீதான ஆசை)

பவ தண்ஹா : மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசை

விபவ தண்ஹா : நிலையாதிருப்பதற்கான ஆசை

*. துக்க நிவாரணம் துக்கத்தின் அழிவு அதாவது மோட்சம்

*. துக்க நிவாரண மார்க்கம். : மோட்சத்தை அடைவதற்கான மார்க்கம் இதுவே எண்சீர் மார்க்கமாகும்.

07. சம்மா சம்புத்தபகவான் - தன் சுய ஞானத்தினாலேயே துக்கம், துக்கத்தின் தோற்றம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் எனும் நாற்பேருண்மைகளை உய்த்தறிந்து மோட்சத்தை உறுதிசெய்தவர். அஞ்ஞானத்தை முழுமையாகவே இல்லாதொழித்தவர். ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றுமுழுதாக நீக்கியவர். இவ்வாறாக தான் உன்னத நிலையை அடைந்து ஏனையவர்களும் இந்நிலையை

அடைவதற்காக தர்மத்தை போதிப்பவர்.

08. மாரன்: உயிர்களை சன்சாரத்தில் பிணைத்து வைத்திருப்பவன். உயிர்கள் மோட்சம் அடைவதை விரும்பாதவன். தடுப்பவன். புத்தபகவான் மாரனை பமத்தபந்து என கூறியுள்ளார். அதன் பொருள் தர்மத்தை பின்பற்ற தாமதமாகியவர்களின் உறவினன் என்பதே.

09. சோவான் நிலை: வீடுபேற்றின் முதலாவது நிலை. மனதிலுள்ள சக்காய திட்டி, சீலப்பத பராமாசம், சந்தேகம் என்பவற்றை நீக்கியவர். இப்பேற்றினை அடைந்தவர் ஒருபோதும் நால்வகை நரகங்களில் பிறக்கமாட்டார். அதேபோல் கூடியபட்சம் ஏழு பிறவிகளிலே மோட்சத்தை அடைந்து விடுவார்.

10. அநாகாமி: மனமாசுகளில் மூன்றில் இரண்டினை முற்றாக நீக்கியவர். அதாவது ஆசை மற்றும் கோபத்தினை முழுமையாக நீக்கியவர். ஒரு பிறவியை பிரம்ம உலகத்தில் பிறந்து அங்கேயே பரிநிர்வாணம் அடையும் உத்தமர்.

11 சத்தா - தமிழில் இதனை பக்தி என்று மொழிபெயர்த்தாலும் இது வெறும் பக்தி மட்டுமல்ல. **சத்தஹதி ததாகதஸ்ஸ சம்போதிங்** அதாவது புத்தபகவானது ஞானத்தினை ஏற்றுக்கொள்வதுதான் தர்மத்தில் சத்தா எனப்படுகிறது. புத்தபகவான் போதித்த தர்மத்தினை செவிமடுத்து அதனை அறிவினை முதற்கொண்டு ஆராயும், ஒருவரால் மாத்திரமே இந்த சத்தாவை தன்னுள் தோற்றுவித்து கொள்ள முடியும். இவ்வாறாக தோன்றிய சத்தாதான் இந்த தர்மத்தினை பின்பற்றுவதற்கு பாரிய உந்துதலாக இருக்கிறது.

12. தர்மத்தில் குறிப்பிடப்படும் காமம் :

கண்களுக்கு தெரியும் பிரியமான, விருப்பமான உருவங்கள்

காதுகளுக்கு கேட்கும் பிரியமான, விருப்பமான சப்தங்கள்
நாசியினால் உணரப்படும் பிரியமான, விருப்பமான மணங்கள்
நாவினால் சுவைக்கப்படும் பிரியமான, விருப்பமான சுவைகள்
உடலினால் உணரப்படும் பிரியமான, விருப்பமான ஸ்பரிசங்கள்
என்பனவே தர்மத்தில் காமம் எனக்குறிப்பிடப்படுகின்றன.

**ந அந்தலிக்கே ந சமுத்தமஜ்ஜே**
**ஊந பப்பதானங் விவரங் பவிஸ்ஸ**
**ந விஜ்ஜதீ சோ ஜகதிப்பதேசோ**
**யத்தட்டிதோ முஞ்செய்ய பாபகம்மா**

ஏதாவது ஓரிடத்தில் மறைந்திருந்து, பாவ விளைவுகளிலிருந்து மீள (தப்பிக்க) முடியுமாயின், அவ்வாறானதொரு இடம் வானத்திலும் இல்லை. சமுத்திரத்திலும் இல்லை. மலைக்குகையினுள்ளும். இல்லை. அவ்வாறானதொரு இடம் உலகில் எங்குமே இல்லை

-தம்மபதம்-